பல்சுவை

# தமிழ்நெஞ்சம்

www.tamilnenjam.com

செப்டெம்பர் 2022



பாவேந்தன்
நேர்காணல்
பக்கம் 64

## வேரும் விழுதுமாய் தமிழ் ஆலமரங்கள்

பல்சுவை

# தமிழ்நெஞ்சம்®

உதயம் 1972 – செப்டெம்பர் 2022

609



ஆசிரியர் / வெளியிடுபவர் :

அமின் மொஹமெட்

இணையாசிரியர் :

முனைவர் பெண்ணியம் செல்வக்குமாரி

நிர்வாக ஆசிரியர் :

சஃபி மொஹமெட்

ஆசிரியர் குழு :

ஹிப்ஸுர் ரஹ்மான்

கவிஞர் பாலமுனை பாறூக்

கவிஞர் நெல்லை உலகம்மாள்

பாவலர்மணி இராம வேல்முருகன்

கவிஞர் தென்றல் கவி

வெண்பா வேந்தர் ஏடி வரதராசன்

கவிஞர் பொன்மணிதாசன்

கவிஞர் அ. முத்துசாமி

கவிஞர் ஈழபாரதி

ஆலோசகர்கள் :

பாட்டரசர் கி. பாரதிதாசன்

கவிதாயினி சக்தி ஜோதி


நன்மக்கள் உள்ளமெலாம்
நல்லொளியால் நிரம்பட்டும்,

நன்னெறிபால் எல்லோரும்
ஒருங்கிணைந்து திரும்பட்டும்!

எழுத்தாளர்கள், நன்கொடையாளர்கள், புரவலர்கள் மற்றும் நூல்கள் விமர்சனம், மதிப்புரை, அறிமுகத்திற்கு நூல்கள் அனுப்ப மற்றும் அஞ்சல் தொடர்புகளுக்கு...


Amine Mohamed
TAMILNENJAM
59, rue des Entrechats,
95800 Cergy - France.

web : tamilnenjam.com
email : editor@tamilnenjam.com


புதிய ஆக்கங்களும், விமர்சனங்களும் எதிர்பார்க்கப்படுகின்றன. படைப்பின் கீழ் படைப்பாளர்கள் தமிழில் பெயரையும், மின்னஞ்சல் மற்றும் தொடர்புக்கான தகவல்களையும் ஆக்கம் தங்களால் எழுதப்பட்டது எனும் உறுதியையும் தருதல் அவசியம்.

நூல் விமர்சனம் செய்திட நூலின் இரண்டு பிரதிகளை அனுப்ப வேண்டும். படைப்புகளுக்கு ஆசிரியர் பொறுப்பல்ல. படைப்பாளிகளே பொறுப்பாவார்கள். ஆக்கங்களை செவ்வைப் படுத்த ஆசிரியர் குழுவுக்கு உரிமையுண்டு.

# நெஞ்சோடு நெஞ்சம்

அன்பார்ந்த வாசக நெஞ்சங்களுக்கு வணக்கம்!


பள்ளி விடுமுறைகளை மகிழ்ச்சியாகக் கழித்து மீண்டும் புத்தம் புதியதோர் பாடசாலை வகுப்பு ஆரம்பிக்கப் போகும் பரபரப்பில் பலர் இருப்பீர்கள். சிலரோ அதையே பெருஞ்சுமையாக்கிக் கவலை கொள்வீர்கள். கல்வி என்பது நம் அனைவரதும் மூலதனம். நமது வெற்றிக்கான அடித்தளம். நமது வாழ்க்கைக்கு உத்தரவாதம். கல்வியைத் தவறவிட்டோமானால் நம் வாழ்க்கையைத் தவறவிட்டவர்களாவோம். ஆகவே படிப்பிற்கு முதலிடம் கொடுப்போம். இது மாணவர்களுக்கு மட்டுமல்ல, பெற்றோர்களாகிய நமக்கும் தான். நாம் தான் அவர்களை ஊக்கப்படுத்தி நல்ல கல்வியைக் கொடுத்து, வாழ்க்கையின் சவால்களை எதிர்கொள்ள அவர்களைப் பக்குவப் படுத்தவேண்டும். ஒழுக்கமான வாழ்க்கைநெறிக்கு கல்வி இன்றியமையாத ஒன்றாகும். இந்த அடித்தளம் மட்டும் உறுதியாக அமைந்து விடும் பட்சத்தில் அனைத்துமே கைக்கெட்டும். ஆகவே இதை கவனத்தில் கொண்டு சிறந்த எதிர்காலத்தை இன்றே திட்டமிட்டு சீரான பாதையில் பயணிப்போம்.

நன்றி!

தமிழ்நெஞ்சம் அமின்

(ஆசிரியர்)

இத்துடன் தரப்படும் **அறிஞர் அண்ணா** விருத்தமலர்கள் இணைப்பு நூலைப் பெற்று படித்து கருத்துகள் சொல்லவும்.



"நடப்பதென்றால் நடக்கலாம்,
உட்கார வேண்டும் என்றால் உட்காரலாம்.
எதை செய்வ தென்றாலும்,
தடுமாற்றமில்லாமல் செய்யுங்கள்"
- ஜென்

**Dr. ஃபஜிலா ஆசாத்**

(International Life Coach - Mentor - Facilitator)



# இனிமையான வாழ்க்கை

நன்கு யோசித்து, யோசித்து தான் ஒரு செயலை செய்கிறேன். இருந்தாலும், செய்து முடித்தவுடனே ஏன் செய்தோம்... அப்படி செய்திருக்கக் கூடாதோ, இப்படி செய்திருக்கனுமோன்னு ஒரே குழப்பமாகவே இருக்குது. எங்காவது போனால், போகாமல் இருந்திருக்கனுமோன்னு தவிப்பா இருக்குது. போகாமல் இருந்தால், போய் இருந்திருக்கனுமோன்னு ஏக்கமா இருக்குது. ஓரொருத்தர் அனாயாசமாக விண்வெளிக்கே போகும்போது எனக்கு மட்டும் ஏன் இப்படி எதற்கெடுத்தாலும் குழப்பம் வருகிறது? குழப்பம் எழாத நல்ல முடிவு எடுப்பது எனக்கு சாத்தியமே இல்லையா..? இது பலருக்கும் எழுகிற தவிப்பு..

சிலர் தானே விரும்பி கடைக்குப் போய் சந்தோஷமாக சில பொருள்கள் வாங்கி வந்திருப்பாங்க. ஆனால் வீட்டுக்கு வந்தவுடன் மனசு மாறி, இப்படி ஒரே நேரத்தில் அதிகமான பொருள்கள் வாங்காமல் இருந்திருக்கலாமோ, விலை அதிகம் கொடுத்து வாங்கி விட்டோமோ, என்று பல மாதிரி குழப்பத்தில் தவித்து, குற்ற உணர்ச்சியில் மூழ்கிப் போவார்கள். சிலர் ரொம்ப நாள் ப்ளான் பண்ணி தன் பிள்ளையை கம்ப்யுட்டர் கோர்ஸ்லே சேர்த்திருப்பாங்க. ஆனால் சேர்த்தவுடனே கம்ப்யுட்டர் கோர்ஸ்லே சேர்த்திருக்க வேண்டாமோ... லாங்வேஜ் கோர்ஸ்லே சேர்த்திருக்கனுமோன்னு, தான் எடுத்த முடிவை, தானே பல முறை அலசி அது சரியா, தவறா, அது நல்ல முடிவுதானான்னு கலங்கிப் போவாங்க.

உண்மையில், நல்ல முடிவுகள் தேடிப் பிடிப்பதற்கில்லை. தெளிவான சிந்தனையில் அவை தானாக வரும். ஒரு விசயத்தைப் பற்றி தெளிவான அறிவு இருக்கும்போது, நம்ம முடிவிலே நாம தெளிவா இருப்போம். அப்போ எந்த குழப்பமும் வராது. அப்படியே வந்தாலும், அதற்கு தெளிவான பதில் இருக்கும். அது எந்தக் குழப்பத்தையும் நிலை நிறுத்தாது.

பொதுவா, நம்ம (conscious mind) ’உணர்வு மனதில், in-built டா இருக்கிற (feed back mechanism) ’ஃபீட் பேக் மெக்கானிசம்’ நாம என்ன செய்தாலும் அதுக்கு ஒரு கமெண்ட் தந்து கிட்டே இருக்கும். முழு நேர வேலை செய்கிற ஒரு நிரந்தர கமெண்டேட்டரா, அது செயல் படும். உதாரணமா, ஒரு கிரிக்கெட்ல அவங்க (sixer)’சிக்சர்’ அடிச்சாலும் சரி, (no-ball)‘நோ-பால்’ போட்டாலும் சரி, ஒரு கமெண்ட்டேட்டர் எப்படி கமெண்ட் குடுத்துக்கிட்டே இருப்பாரோ, அது மாதிரி நம்மகிட்டே இருக்கற இந்த மெக்கானிசமும் எது செய்தாலும், நமக்கு கமெண்ட் குடுத்துக்கிட்டே இருக்கும்.

கடைக்குப் போய் விரும்பி சில பொருள் வாங்கினாலும், கம்ப்யுட்டர் கோர்ஸிலே பிள்ளையை சேர்த்தாலும், எங்காவது போனாலும், போகாவிட்டா லும், இப்படி செய்திருக்கனுமோ, அப்படி செய்திருக்கக் கூடாதோ என்ற கேள்வி களை எழுப்புவது இந்த ‘ஃபீட் பேக் மெக்கானிசம்’ தான்.

சுருக்கமாக சொன்னால் இது ஒருவரை, என்ன செய்ய வேண்டும் என்பதை விட்டுவிட்டு என்ன செய்தோம் என்று அலச வைக்கும். நிகழ் காலத்தை விட்டு விட்டு கடந்த காலத்தையே சுற்றி வரச் செய்யும்.

இதுக்கு கொஞ்சம் இடம் கொடுத்தா லும் போதும், மனசை அப்படியே ஆக்ரமித்து, மன அழுத்தத்தை ஏற்படுத்தி, அந்த மனிதரின் சக்தியையெல்லாம் உறிஞ்சி, எண்ண சுழற்சியிலே தள்ளி விட்டுடும்.

அதே நேரம், எல்லா பிரச்னைக்கும் ஒரு தீர்வு இருப்பது போல, இந்த ஃபீட் பேக் மெக்கானிசத்தின் விளைவுகளுக்கும், ஒரு தீர்வு இருக்கிறது. அது நம்ம (value system)’வேல்யு ஸிஸ்டத்தை’ மேம்படுத்திக் கொள்வது தான் என்கிறது ‘மன இயல்’.

சரி... வேல்யு ஸிஸ்டம் என்றால் என்ன? அதை நாம் எப்படி மேம்படுத்துவது?!

எந்த ஒரு விஷயத்தைப் பற்றியும், அறிந்தோ அறியாமலோ, நம்மிடம் ஒரு கருத்து இருக்கும். இது ஒருவருக்கு ஒருவர் மாறுபடும். இதைத் தான் வேல்யு ஸிஸ்டம்னு சொல்கிறது ‘மன இயல்’.

பொது அறிவை பெருக்கிக்கொள்வது மூலமாகவும், இந்த உலகைப் பற்றிய பார்வையை விசாலமாக்கிக் கொள்வது மூலமாகவும் வேல்யு ஸிஸ்டத்தை மேம் படுத்தலாம்.

அதாவது, நாலு விஷயங்களை நாம் நல்ல முறையிலே தெரிஞ்சிக்கும்போது, நம் குறுகிய எண்ணம் மாறி, நம்முடைய பார்வை விரிவாகி விடும். அப்புறம் எதிலும் நமக்கு ஒரு தெளிவான சிந்தனை இருக்கும். எது செய்தாலும், இது சரியா, தவறா என்ற குழப்பம் வராது.

தவிர, நம்முடைய ஒவ்வொரு செயலும், மிகச் சரியாக, பெர்ஃபெக்டாக மட்டுமே இருக்கனும்னு நினைக்கும் போது எதுவும் தவறாகி விடக் கூடாது என்கிற அதீத கவனம், இதை சரியாக செய்தோமா, அதை சரியாக

செய்தோமா என்ற மனக் குழப்பத்தை ஏற்படுத்தி விடுகிறது.

2+2=4 ன்னு ஒரு ஃபார்முலாவில் தான், வாழ்க்கைக் கணக்கு இருக்கனும்னு இல்லை. கொஞ்சம் முன்னே பின்னே இருந்தாலும் வாழ்க்கையின் சுவை குன்றாமல், மனநிம்மதி கெடாமல் பார்த்துக் கொள்வதில்தான் வாழ்க்கையின் சுவராஸ்யம் இருக்கிறது.

வாழ்க்கையில் சின்ன சின்ன தவறுகள் ஏற்படுவது இயல்பு என்ற எண்ணமும், அதை ஏற்றுக் கொள்கிற மனப்பக்குவமும், எதிலும் பாஸிட்டிவான அணுகுமுறையும், தெளிவான சிந்தனையை தரும் என்கிறது வாழ்வியல்.

“எண்ணித் துணிக கருமம் துணிந்த பின் எண்ணுவம் என்பது இழுக்கு” இது வள்ளுவர் சொன்னது. இதைத் தான் வாழ்வியலும் சொல்கிறது.

ஒரு செயலை செய்து விட்டு, அது தவறா இருக்குமோன்னு நினைக்கும் போது, அது தவறாகக் கூடிய சாத்தியங்களை நம் ஆழ்மனதே ஏற்படுத்தி விடும். பதறாத காரியம் சிதறாது என்பது போல், நாம் பதற்றம் இல்லாமல் நிதானமாய் தன்னம்பிக்கையாய் இருந்தாலே, நம் செயலும் சரியானதாக அமைந்து விடும்.

அதே நேரம், பதற்றமும், குழப்பமுமாக இருக்கும்போது, எதையுமே சரியாக செய்ய முடியாது. அது மட்டுமில்லை, அப்படியே சரியாக செய்தாலும், குழப்பமான மனநிலை அதை சரி என்று ஏற்றுக் கொள்ள மறுக்கும்.

நல்ல எண்ணமும், தன்னம்பிக்கையுமா ஆரம்பிக்கிற எந்த செயலும், இடையிலே சிறு, சிறு தவறுகள் நடந்தாலும், அது நன்மையாகத்தான் முடியும்.

பல டையபடீஸ் காரர்களின் வாழ்க்கையிலே இனிப்பை கொண்டு வந்த “ஷாக்கரின் ஸ்வீட்னர்” எப்படி கண்டுபிடிக்க பட்டதுன்னு தெரியுமா?!

சாதாரணமாகவே நாம் சாப்பிடுறதற்கு முன்னாடி ஒன்றுக்கு மூன்று முறை கையைக் கழுவுவோம். இதுவே, ஒரு வேதியியல் ஆராய்ச்சியிலே இருக்கிறவர், எத்தனை முறை கையைக் கழுவனும். ஆனால் ஒரு முறை ரஷ்யாவை சேர்ந்த ‘ஃபால் பெர்க்’ என்ற வேதியியலாளர் (chemist), தன் ஆராய்ச்சியில் மும்முரமாக இருந்ததிலே, இரவு உணவு சாப்பிட மறந்து விடுகிறார். திடீரென்று பசி வயிற்றைக் கிள்ள மேஜையில் இருந்த பிரெட்டை அவசர அவசரமா கையைக் கூட கழுவாம எடுத்து சாப்பிட்டு விடுகிறார்.

வேதியியல் பொருட்களோடு, ஆராய்ச்சியில் ஈடுபட்டிருந்த ஒரு ஆராய்ச்சியாளர் கையைக் கழுவாமல் சாப்பிட்டார் என்று நினைக்கும் போதே நமக்கு அதிர்ச்சியாக இருக்கிறதில்லையா. ஆனால், என்ன நடந்தது தெரியுமா? அவர் செய்த அந்த தவறுதான், ஒரு இனிய கண்டுபிடிப்புக்கு மூல காரணமா அமைந்தது.

அந்த தவறு ஏற்றுக் கொள்ளக் கூடியது இல்லையென்றாலும், அதன் விளைவு பெரும் பாராட்டைப் பெற்றதால் அது என்னவென்று மேலும் பார்ப்போம்.
அந்த ஆராய்ச்சியாளர் அர்த்த இரவில், தன் ஆராய்ச்சிக்கிடையில், கையைக் கழுவாமல் ‘ப்ரெட்டை’ பசியோட சாப்பிட, அது ரொம்ப இனிப்பா இருக்குது. அவர் உடனே, ஒருவேளை அவசரத்திலே கேக்கை, ப்ரெட் என்று நினைத்து சாப்பிட்டு விட்டோமோன்னு தனக்குத் தானே சமாதானப் படுத்திக் கொண்டு ஒரு டவலை எடுத்து வாயைத் துடைக்கிறார். டவல் இனிக்கிறது. ஒன்றும் புரியாமலே

தண்ணீர் எடுத்துக் குடிக்கிறார். அதுவும் ஏதோ சர்பத் போல் அதீதமாய் இனிக்கிறது. சட்டென்று அவருக்கு அவர் கை பட்ட பொருள் எல்லாம் இனிக்கிறது என்பது புலப்படுகிறது.

இதுவே, வேறு யாராக இருந்தாலும், 'தொட்டதெல்லாம் பொன்னாகும் மிடாஸ்' மாதிரி, நாம் தொட்டதெல்லாம் இனிக்க ஆரம்பித்து விட்டதோ, என்று வியந்து போயிருப்பார்கள். ஆனால் அவருக்கு, தன் ஆராய்ச்சியில் உருவாகியுள்ள ஒரு கலவை தான், இப்படி இனிக்குது என்ற உண்மை பிடிபடுகிறது. வேறொன்றைக் கண்டுபிடிக்கும் முயற்சியில், தன்னையு மறியாமல் இந்த மாற்று இனிப்பைக் கண்டு பிடித்திருக்கிறோம். அதை தொட்ட கையைக் கழுவாமல் வாயில் வைக்க, நம் கண்டு பிடிப்பை நாமே அறிந்திருக்கிறோம் என்று அவருக்குப் புரிகிறது. அவர் மீண்டும் ஒரு முறை அந்தக் கலவையை வாயில் வைத்துப் பார்க்கிறார். பின், அதன் தன்மையையும், அதை எதற்குப் பயன்படுத்தலாம் என்பதையும் நன்கு ஊர்ஜிதப் படுத்திக் கொண்டு உலகிற்கு தன் கண்டு பிடிப்பை அறிவிக்கிறார்.

கேட்பதற்கு சுவாராஸ்யமாக இருக்கும் இந்தக் கதை இத்தோடு முடிய வில்லை. எதேச்சையாக கண்டுபிடித்த அந்த சாக்கரினை சந்தைப் படுத்தி அவர் பெரும் கோடிஸ்வரரானது ஓர் அற்புத வரலாறு.

இப்போது புரிந்திருக்கும் உங்களுக்கு, "இப்படித்தான்னு எதுவுமே இல்லை. அறியாமல் நடக்கும் சில தவறுகளும் கூட அற்புதம் படைக்கலாம். நல்லதை நினைத்து, நல்லது செய்தால் எல்லாம் நல்லபடியே முடியும்" என்பது. இனி இது சரியா, அது சரியா என்று குழம்பாமல், நல்ல முறையில் நம்பிக்கையோடு செயல்படுங்கள். வாழ்க்கை இனிப்பாகும். ■



# எல்லாம் அவன் செயல்

கனவுகள் என்னில் என்றும் இல்லை
கலக்கம் என்றும் வந்ததில்லை
மனமும் உடலும் மயக்க மின்றி
வருகை புரிய மந்தமில்லை
தினமும் ஓடும் ஓட்டம் செல்ல
தெளிவும் இருந்தால் போதுந்தான்
தினையின் அளவு நன்மை கிடைத்தால்
திளைக்கும் மனமும் அதிலேதான்

காலம் முழுதும் திகட்டத் திகட்டக்
கல்வி துணையாய் வந்திடட்டும்
சாலை யோர மரத்தின் நிழலாய்
சலிப்பும் இன்றிச் சென்றிடட்டும்
வேலை நாள்கள் தடங்கல் இன்றி
வேகம் கொண்டு செல்லட்டும்
வேலன் முருகன் துணையாய் நின்று.
வேண்டும் வரங்கள் பொழியட்டும்

அவனின் செயலே அவனே பார்ப்பான்
அளிப்பான் நன்மை நம்பிடுவோம்
தவறு செய்யா மனத்தில் என்றும்
தங்கி நின்றே வாழ்ந்திடுவான்
குவல யத்தில் வேண்டும் பொழுதில்
கூடி வணங்க அருள்புரிவான்
துவளும் உள்ளம் ஆற்றி நின்று
துடிப்பாய் ஓட வழிவகுப்பான்

**தென்றல் கவி - தமிழ்ச்சிட்டு**

# சுதந்திர இந்தியா



கலி வெண்பா

இந்தியர்கள் நாற்றிசையும் எண்ணித் தனதெனச்
சிந்தனை ஆற்றலைச் செவ்வனே தந்தார்
அயலகம் நாடி அழைத்ததும் சென்றார்
பெயர்ந்தார் குடும்பமுடன், வேர்மட்டும் ஆழமாய்த்
தாயகத்தில் ஊன்றினார் தக்கோனாய்ப் பேர்பெற்று
மையமாய் சொந்தநாட்டின் மாண்பையும் காத்தார்
அயல்நாட்டில் ஆமையாய் ஆளுமை காட்டி
முயலாமை தத்துவம் முன்நின்றே சொல்வார்!
அழகுக் கனடா அமெரிக்கா மக்கள்
பழகுதமிழ்ச் சங்கமும் பல்கலை மன்றமும்
பற்பல ஆண்டுகளாய் பாராட்டிப் பாலமிட்டார்,
கற்போம் தமிழென்றே காதலித்தார் வாழ்வியலை,
நெஞ்சோடு ஒன்றிணைந்தார் நீரோடு செம்மண்போல்!
மஞ்சளும் குங்குமமும் மங்களம் என்றுணர்ந்தார்
கற்கும் அறிவியலோ காணொளிக் கல்வியோ
நிற்கும் இலக்கியமோ நீலவான் ஆய்வியலோ
வித்தகனாய்த் தோன்றியே வெல்வதும் இந்தியராம்!
வித்திட்ட மண்ணில் வெளிவந்த நாற்றையும்
வேறிடத்தில் நட்டால் விளையுமே நெல்மணிகள்!
கூறினேன் இன்றிதைக் கூர்ந்து!



முனைவர், கணிதப்பேராசிரியர்
ச. ஏகாம்பரம், கனடா



# புதிய இந்தியா

**கவிதாயினி எழிலி**
*(பாவலர் செ. சரவணபிரியா, காரைக்குடி)*

நமது தாய்நாடான இந்திய திரு நாட்டின் 75 வது சுதந்திர தினத்தை ஆகஸ்ட் பதினைந்தாம் நாள் கொண்டாடி மகிழ்ந்தோம். 1947ம் ஆண்டு ஆகஸ்ட் 15ஆம் நாள் இந்தியா பிரிட்டிஷ் அரசாங்கத் திடமிருந்து தாய்நாட்டின் சுதந்திரத்தை அடைந்தது. ஆகஸ்ட் மாதம் 15 ஆம் நாள் இந்திய மக்களின் வாழ்விலும் மனதிலும் ஆழமாக பதிந்த நாளாக விளங்குகிறது. நம்மில் பலருக்கு நமது பிறந்தநாள், திருமணநாள் நினைவில் வராமல் கூட போகலாம் ஆனால் உறக்கத்தில் எழுப்பிக் கேட்டால் கூட நமது நாட்டின் சுதந்திர நாளை நாம் சொல்லிவிடுவோம் நமது தாய்நாடான இந்தியா சுதந்திரம் பெற்று சுமார் அரை நூற்றாண்டு காலம் கடந்து நாம் சுதந்திரமாக பேச்சுரிமை, செயல் உரிமை, என பல உரிமைகளை கொண்டாடிக் கொண்டு தாய்மண்ணில் சுதந்திரக் காற்றை சுவாசித்துக் கொண்டிருக்கிறோம் என்றால் அதற்கு முதல் காரணம் நமது தேசிய தலைவர்களும் போராட்ட வீரர்களுமே!

அப்படியாக நாம் பெற்ற சுதந்திர இந்தியா இன்று வைரத்தை எட்டிய சுதந்திர தினமாக 75 ஆவது சுதந்திர தினம் கொண்டாடி மகிழ்ந்த நிலையில், ஒரு நாட்டின் தலையெழுத்தை மாற்றிய தன்னம்பிக்கை போராளி பற்றிய சில தகவல்களை தான் இக்கட்டுரை மூலம் பதிய இருக்கின்றேன்.

டாக்டர் அம்பேத்கர் உண்மையில் சுதந்திர போராட்ட வீரரா என்றால் இல்லை என்பதே பதில்! ஆனால் அம்பேத்கர் அவர்கள் சுதந்திர இந்தியாவில் மனித உரிமைக்காகவும் பெற்ற சுதந்திரமானது நூற்றாண்டை கடந்து சென்றாலும் ஜனநாயகத்தோடு செயல்பட அவர் வகுத்த இந்திய அரசியலமைப்பு சட்ட சாசனங்கள் மிகப்பெரிய பங்கு வகிக்கிறது என்று சொன்னால் மிகையாகாது.

இந்தியா மீது எத்தனை நாட்டினர் படையெடுத்தனர் ஏன் ஏனென்றால் இந்தியா இயற்கையாகவே ஒரு வளமிக்க நாடு பூமத்திய ரேகை அருகில் பெற்று மழை வளம் பெருகி உற்பத்தியை அதிக அளவில் உள்ளடக்கிய நாடு உற்பத்தியை பெருக்க ஒப்பற்ற மனித வளம் கொண்ட நாம் எப்படிப்பட்ட சூழ்நிலையிலும் மனிதனின் தேவைகளை பூர்த்தி செய்து கொள்ளும் திறன் பெற்ற பெரும் மக்கள் தொகை கொண்ட நாடு. அப்படிப்பட்ட செல்வங்கள், இயற்கை உற்பத்திகள், சீதோஷண நிலை ஒத்துழைக்காத பாலைவன காரர்களுக்கு இந்தியா தேவைப்பட்டது துருக்கியர்கள்,



டச்சு, போர்ச்சுகீசியர்கள், பிரெஞ்சு மற்றும் பிரிட்டன் இந்தியாவை பார்த்து மலைத்து வியந்தனர். கடைசியில் பாரத தேசம் பிரிட்டன் இந்தியாவாக கூட சிலநாள் இருந்து வந்தது.

அமெரிக்கா ஐரோப்பா ரஷ்யா போன்ற பெரும் நிலப்பரப்பை உள்ளடக்கிய நாடுகளில் கூட மக்கள் குழுக்களாக வாழும் நாகரீகம் பத்தொன்பதாம் நூற்றாண்டில் பெரிதாக தென்படவில்லை. ஆனால் இந்தியாவில் எண்ணற்ற மொழிகள், மொழிகளுக்கு உள்ளே பாகுபாடுகள் அதிகமாக இருக்கிறது. இந்தியா ஒரு தொன்மையான பிரதேச மக்களின் நாகரீகத்தை இன்றைக்கும் தொன்றுதொட்டு வருவது மனித சக்தியின் ஒற்றுமைக்கு சவாலாக இருந்து பொருளாதார முன்னேற்றத்திற்கு பெரும் தடையாக இருக் கிறது எனவே மேற்கத்திய நாடுகளுக்கு இணையாக இந்திய மக்களை சீர்திருத்தும் செய்வதற்கான முயற்சிகளில் ஒன்றாக நான் இந்த அறிக்கையை அதாவது "இந்திய தேசிய பங்கு விகிதம் ஒரு வரலாற்றுப் பகுப்பாய்வு" என்ற தலைப்பில் பொருளாதாரத்தை அடிப்படையாகக் கொண்டு ஒரு ஆய்வுக் கட்டுரையை வெளியிடுகிறேன் என்றார் இந்த ஆய்வுக்கு கொலம்பியா பல்கலைக்கழகம் இவருக்கு டாக்டர் பட்டம் வழங்கியது.

அம்பேத்கரின் சிந்தனை இந்திய அரசியலமைப்பு சட்டத்தில் ஒரு பங்காக எப்படி உருவாகி இருக்க கூடும் 17ஆம் நூற்றாண்டில் இந்தியாவை முழுமையாக ஆட்சி செய்து வந்தவர் அவுரங்கசீப். அப்போது இந்தியா ஒரு இஸ்லாமிய நாடு இந்தியாவின் கொடி பச்சை நிறம் கொண்ட பின்னணியில் நடுவே சிங்கம் பொறிக்கப்பட்டு இருந்தது அத்தருணத்தில் வெள்ளையர்கள் காலனி ஆதிக்கம் செலுத்திய போது இந்தியாவிற்காக அதிகமாக போராடியவர் இஸ்லாமியர் அதை ஒரு புத்தகத்தில் ஆங்கிலத்தில் "The freedom of India is only attain with the blood of Islam" என்று பத்திரிக்கைகளில் குறிப்பிடப்பட்டது தன்னை ஆக்கிரமித்து வந்தவனே வெள்ளையனை எதிர்த்துப் போரிட்ட வரலாறு உலக நாடுகள் மத்தியில் இந்தியா எவருடைய தாய்நாடு என்ற கேள்வியை முன் வைத்தது.

அதனுடைய தாக்கமாக இந்தியா விடுதலை பெற்றவுடன் இந்திய யூனியன் முஸ்லிம் லீக் சார்பில் அரசியல் நிர்ணய சபை உறுப்பினராக தேர்வு செய்யப்பட்ட அம்பேத்கரை காங்கிரசு அரசு சட்ட அமைச்சராக பதவியேற்றுக் கொள்ளும்படி அழைத்தது அம்பேத்கர் அதை ஏற்று விடுதலை பெற்ற இந்தியாவின் முதல் சட்ட அமைச்சரானார் ஆகஸ்ட் 29ல் அதை உருவாக்கும் ஆணையத்திற்கு தலைவரானார்.

இந்தியா சுதந்திரம் அடைந்தபின் மக்களாட்சி கொண்டுவர பல தலைவர் கள் விரும்பினர். ஆனால் மக்களாட்சிக்கு மாறும்போது மன்னர் ஆட்சியிலிருந்த சட்டங்கள் செயல்படுத்த முடியாது அதற்கு முறையான அரசியல் சாசனம் வேண்டும் இந்திய மண்ணில், அரசியல் சாசனத்தினை எழுத நினைத்த அவர் களுக்கு முதலில் தோன்றிய பெயர் ‘அம்பேத்கர்’ இந்தியாவிலிருந்து அமெ ரிக்கா சென்று உயர்கல்வி பயின்ற முதல் இந்தியர் அம்பேத்கர் தான். அவர் சட்ட மட்டுமின்றி பொருளாதாரம், அரசியல், தத்துவம் மற்றும் உலக வரலாறு என அனைத்தையும் அறிந்த மேதையாக திகழ்ந்தார்.

சுதந்திரம் நாம் பெற்று விட்டோம் என்றனர் ஆனால் அது நிரந்தரம் என்று சட்டம் ஆக்கியவர் அம்பேத்கர் சுதந்திரம் மனித உரிமைகளில் ஒன்று உனக்கு தோன்றுவதை பேசு, பிடித்தவர்களை வழிபடு, எதுவேண்டுமானாலும் படி, இவையெல்லாம் அடிப்படை உரிமைகள் ஃபண்டமெண்டல் ரைட்ஸ் ஆஃப் இந்தியா என்றார்.பெற்றசுதந்திரத்தைதலைமுறைகள் தடை யின்றி அனுபவிக்கவும் வழிகளை எடுத்துவைத்தார். நாடு குடியுரிமை ஜன நாயகம் பிரதிநிதி மக்களாட்சி இவை அனைத்துக்கும் புது உருவம் கொடுத்தார்

மன்னர் ஆட்சியில் உள்ள சட்டங்கள் ஜமீன்தார் சட்டங்கள் காலனி ஆதிக்கத் தின் சட்டங்கள் இவைகளை சாராத புதிய ஜனநாயக அடிப்படையில் சட்டங்களை உருவாக்கினார் ஒரு தனிமனிதன் தாரா ளமாய் தெருக்களில் நடமாடுவது தனக்கு பிடித்ததை வாங்கி உண்பது இங்கு வேணாலும் பிரயாணம் செய்வது பிடித்த உடை அணிவது, வழிபடுவது, மணம் புரிவது, தொழில் செய்வது, சேகரிப்பது குறைப்பது இப்படி எல்லாம் வாழலாம் என்பதை கூட சட்டத்தில் அடித்து வைத்த உள்ளே தான் நாம் சுழன்று கொண்டு வருகிறோம் என்பதை நாம் அறியாமலே நம்மை அனுபவிக்க வைத்தவர் அம்பேத்கர்.

இப்படிப்பட்ட உயர்ந்த எண்ணங் களை நம் நாட்டின் முன்னேற்றத்திற்கான சிந்தனைகளையும் கொண்ட நமது அம்பேத்கர் கடந்து வந்த பாதையானது பல இரவுகள் பட்டினி பிடியிலும் வாடிய உறக்கத்திலும் அம்பேத்கர் அவர்கள் எப்படி சட்டமேதை ஆனார்கள் என் பதை நாம் சற்று வரலாற்றுப் பக்கங் களை புரட்டிப் பார்க்க வேண்டி யுள்ளது மராட்டிய மாநிலம் ரத்னகிரி மாவட்டத்தில் இருக்கும் அம்பவதே எனும் கிராமம், ஆண் குழந்தைகளை கொண்டாடும் கிராமம். ஒரு ஆண் குழந்தை பிறந்துவிட்டது என்றால் ராணுவத்துக்கு ஒரு நபர் கிடைத்துவிட்டார் என்று ஒரு பிள்ளையை ராணுவத்துக்கு அனுப்பி வைப்பதில் பெற்றோருக்கு அப்படியொரு மகிழ்ச்சி. இப்படிப்பட்ட தியாக மனப் பான்மை கொண்ட ஒரு சமூகத்தின் பின்னணியில் தான் அம்பேத்கர் அவர்கள் வளர்ந்து வந்தார்கள்.

எனக்கு தாயகம் உண்டு என்று நீங்கள் கூறுகிறீர்கள் ஆனால் நான் மீண்டும் கூற விரும்புகிறேன் எனக்கு அது இல்லை நாய்கள் பூனைகளை விட நாங்கள் மோசமாக நடத்தப்படுகிறோம், குடிதண்ணீர் பெறவும் உரிமை இல்லை என்றால் சுயமரியாதையுள்ள எந்த தீண்டப்படாதவன் இந்த நாட்டை தன்

# ஆத்ம ஞானம்

●

ஊருக்கும் கொடுத்து
உன்னதமாய் வாழுங்கள்.
யாரோ வள்ர்த்த மரம்
எல்லோரையும் இளைப்பாற்றுகிறது.

●

பைத்தியம் பிடித்தவனாய்
கோடிகளுக்கு அலைகிறாய்.
வயிற்றின் அளவு
ஒரு சாண் தானே.

●

காலிப் பாத்திரமாய் தான்
கடவுள் உனைப் படைத்தான்.
இடையில் ஏன் உனக்கு
இத்தனைக் குப்பைகள்..?

●

சித்தத்தில் அழுக்கிருந்தால்
அவப் பெயர் தீண்டும்.
செத்தால் காடு சேர்க்க
நாலு பேர் வேண்டும்.

●

உழைத்துச் சேர்த்ததே
உடன் வருவதில்லை.
கெடுத்தும் சேர்க்கிறாயே
கேடு கெட்ட மனிதனே.


●

வாழும் காலங்களில்
புண்ணியத்தை விதையுங்கள்.
போகும் நேரத்தில் அது
ஆன்ம சாந்தி கொடுக்கும்.

●

இறந்தால் மறக்கும் படியே
எல்லோரும் வாழ்கிறார்கள்.
மரணமும் மறக்காத படி
சிலர் வாழ்ந்து விடுகிறார்கள்.

- ஜென்ஸி.



# வனக்காதல்

ஒரு வனத்தைத் தேடுகிறேன்.
என் முழு நிழலையும்
அதில் படரவிட ஆசைப்படுகிறேன்.

வனத்தில் ஒரு கூடுகட்டி
வாழ்ந்துக்கொள்ள நினைக்கிறேன்.

வனமே என் இனமாக
மூச்சாக
மூச்சை நிறைக்கும் காற்றாக
காதலிக்க நினைக்கிறேன்.

அந்த பச்சையங்களில்
பசியாறிட முடியும்.
அந்த அருவிகளை
அள்ளிப்பருக வேண்டும் .

அந்த சிலுசிலுப்பில்
குளித்திட வேண்டும்.
வனத்தைக் காதலிக்க
தொடங்கிவிட்டேன்.

வனம் தேடி போகிறேன்...
எனக்கு இரு சிறகுகள் தாருங்கள்.

- தினுஷா மகாலிங்கம்.
இலங்கை.

நாடாக கருதுவான் இந்த நாடு எங்களுக்கு அளித்த உதவி இன்னல்களையும் அநீதி களையும் மலைபோல் எங்கள் மீது சுமத்தியதே ஆகும் யுக யுகமாக காலால் மிதித்து நசுக்கப்பட்ட தாழ்த்தப்பட்ட என் மக்களுக்கு மனித உரிமைகளுக்காக நான் செய்யும் முயற்சிகளின் காரணமாக இந்த நாட்டுக்கு எவ்விதத் தீங்கும் நேர்ந்துவிடாது. 1931ஆம் ஆண்டு மகாத்மா காந்தியைச் சந்தித்தபொழுது முனைவர் அம்பேத்கர் முன் வைத்த கருத்துகள் இவை, மகாத்மாக்கள் பல பேர் வருவார்கள் போவார்கள் ஆனால் நமது வாழ்க்கை நிலை அப்படியேதான் இருக்கிறது கடவுளுக்கு செலுத்தும் காணிக்கையை உன் பிள்ளைகளின் கல்விக்குச் செலுத்து அது உனக்கு பயன்தரும் ஆடுகளைத்தான் கோவில்கள் முன்பாக பலியிடுவார்கள் சிங்கங்களை அல்ல நீங்கள் ஆடுகள் அல்ல சிங்கங்கள்.

கற்பி, ஒன்றுசேர், புரட்சிசெய், சுதந்திரம், சமத்துவம், சகோதரத்துவம் இப்படி மக்களிடையே சுதந்திர நாட்டின் சமுதாய முன்னேற்றத்திற்காகவும் சகோதரத் துவம் அடைவதற்காகவும் தன்னுடைய வாழ்க்கையை அர்ப்பணித்து தன்னுடைய கல்வியை முதலீடாக கொண்டு செயல் பட்டார் டாக்டர் அம்பேத்கர் அவர்கள். இந்தியாவின் உயரிய விருதான பாரத ரத்னா விருது கடந்த 1990ஆம் ஆண்டு டாக்டர் அம்பேத்கர் அவர்களுக்கு வழங்கப்பட்டது. இந்த கட்டுரையின் மூலமாக நாம் உணர வேண்டிய ஒரு விடயம் என்னவென்றால் டாக்டர் அம்பேத்கர் அவர்கள் சமுதாய தலைவராக போற்றப்பட்ட கூடாது டாக்டர் அம்பேத்கர் அவர்களின் நாட்டின் தலைவராகவே போற்றப்படவேண்டும் தன்னுடைய தன்னம்பிக்கையை ஒன்றை மட்டுமே உறுதுணையாக கொண்டு இந்த நாட்டு மக்களின் சமூக நீதிக்காக பாடுபட்டவர் இன்னும் சொல்லப்போனால் அரசியல் அமைப்பு சட்டத்தின் மூலம் நீதியை சமமாக உருவாக்கியவர். தன்னம்பிக்கையின் ஒரு சிறந்த உதாரணமாக தலைவர் டாக்டர் அம்பேத்கர் அவர்கள் திகழ்கிறார்கள். ■

# மௌனிக்காத முதல் கவிதை

ஒடுங்கிய பாயொன்றில்
அகந்தை, அடாவடி
களிப்பு, சிரிப்பு மறந்து
புலனுறுப்புக்கள்
உணர்வுச் சுதந்திரமற்று
உறங்கிக் கொண்டிருக்கும் இரவில்,

கற்பனைக் கோட்டைக்குள்
கண்களைக் கசக்கியபடி
துயில் தொலைத்து
பயவுணர்வை,
பக்தியை,
ஆச்சரிய வெளிப்பாட்டை,
அகிலத்தின் அழகை,
இயற்கையின் இன்பத்தை,
மனிதர்கள் பண்பை,
மஞ்சமதில் மகிழ்ந்ததை
சரி பிழை கண்டு
செதுக்க ஆரம்பித்த நாளது,

வெளிப்புறம் முழுதும்
இருள் சூழ்ந்திருந்து
பூட்டியதொரு அறையில்
மின்குமிழொன்றின்
மெல்லிய வெளிச்சத்தில்
கிறுக்கத் தொடங்கிய முதல் கவிதை
என்னோடு பேசுகிறது.

இலக்கற்ற என்னை
நீயேன் காதலிக்கின்றாய்,
அவனிவன் உன்னையும்
உன்னாலான என்னையும்
நார் நாராய்ப் பிரித்தாய்ந்து
நடுத்தெருவில் நகைக்கவா?

வாசிக்கத் தெரியாதொருவன்
வாங்கிக் கொண்டு
பாவனைக்குதவாத
பழைய இரும்பு போலென்னை
மூலையில் போட்டுவிட்டு
முட்டாய் வாங்கிச் சாப்பிடவா?

பேசாமல் இத்தோடு நிறுத்திவிடு
ஏனெனில்,
தலைகீழாய்த்
தொங்கிக் கொண்டிருக்கும்
தரணியில்
தப்பிப் பிழைத்து
இரைதேடும் பறவையென
இயற்கையிடம் வாங்கி -
உன் கற்பனை உயர்வில்
கலந்து சமைத்த என்னை
எவனோ ஒருவன்
எனதாகாரமென துண்டுகளாக்கிச்
சொருகி அடுக்கிக் கொண்டு
சுவைக்கக் காத்திருக்கின்றான்

பனி படரும்
ஈரம் காயாத அவ்விரவில்
இருவருக்குமான விவாதம்
இடைஇன்றித் தொடர்கிறது
கவியூற்றில் நனைந்து
சொர்க்கம் கொள்ள நினைந்த
முந்தைய நாளிரவின் கனவு
எரிமலைக் குழம்பான
மெக்மாவின் பாய்ச்சலுக்குள்
எறிந்து விடப்பட்டதுபோல்
கொதி கொள்கிறது,

ஆனால் அதுவோ
என் பேனாவை பிடித்தபடி
நகர்த்தவிடாது
அதன் வியாக்கியானத்தை
நிறுத்தி மௌனிக்கவில்லை.

**"ஏறூர்க்கவி" எச்.எம்.எம்.றசீம்**
இலங்கை

# புரிதல்கள்

## பகுதி 2



முஹ்தாக் அஹ்மத்

இலங்கை

மனித உள்ளங்கள் விரைவில் மாறக் கூடியவை. நிலையற்றுக் கிடக்கும் தன்மைப் பெற்றவை. அவற்றின் ஸ்திரத்தன்மை என்பது மிக அரிதான செயலூக்கம் கொண்டவை. அன்பும் கோபமும் தொடர்ந்திருக்கா நிலை கொண்டவை. கோபத்தின் இறுதியில் அன்பின் பெருஊற்று பீறிட்டு வழிந்தும் அன்பின் நேர்மையில் கோபத்தின் எரிதழல் எட்டிப் பார்த்தும் உறவுகளை தொடர்ந்து நிலைகொள்ளச் செய்வதுதான் மனதின் ஆச்சரியம். மாற்றத்தின் தொடக்கப்புள்ளியே மனவெழுச்சி களில் மனம் செறிந்து காணப்படுவது என்பதன் நிதர்சனத்தால் தான். வாழ்வியலில் மகிழ்வும் நெகிழ்வும் தொடர்ந்திருப்ப தாலேயே வீரியம் நிறைந்த வாழ்வமைப்பு மனிதர்களிடையே கலக்கப்படுகிறது எனலாம்.

ஒருவரை புரிந்துகொள்வதில் காணப்படுகின்ற உளவியல் ரீதியான சிக்கல்களுக்கு மனம் என்பது பெரும் காரணப்பங்கு. அதில் தொடரப்படும் மனவலைகளினாலேயே புரிதல்களில் வேறுபாடு தோன்ற ஏதுவாகின்றன. மாற்றங் களில் மனம் அலைமோதுவதால் தோற்றுப்போகும் மனித உறவு முறைகளை கையாள நாம் பழகிக்கொள்ள வேண்டும். உடைக்கும் மனங்களையும் நொறுக்கும் உணர்வுகளை மறுபடியும் சரிசெய்ய முயற்சிக்கும் எத்தனங்கள் சாத்திய மானதுதான் என்றாலும் அவற்றின் மனக்கிளர்ச்சிகள் என்றுமே பழிவாங்க காரணமாகாமல் பார்த்துக்கொள்ள வேண்டும். உள்ளத்தின் உறுத்தல்கள் மனதின் பயங்களையும் எதிர்ப்புக்களையும் ஆழமான வடுக்களாய் ஆக்கி விடாமல் உறவுகளில் நடந்துகொள்வது நல்லது.

அன்பின் வெளிப்பாடு நிலை கொள்ளும் தருணம் ஒன்றில் உள்ளம் பெறுகின்ற அமைதியும் நிறைவும் அலாதியானது. அவற்றுக்கான வழிப்படுத் தல் தான் அமைதியடைந்த ஆத்மாக்களை சமூக மட்டத்தில் தோற்றுவிக்க வழிசெய்யும். இதுவே, நல்சமூக

உருவாக்கத்துக்கான கட்டமைப்பின் அடித்தளம். மனித உறவுகளை கையாள் வதில் கைந்தேர்ந்தவர் மனித உள்ளங் களை ஒழுங்குற கட்டமைப்பதில் வெற்றி பெறுவார்.

•

வாழ்க்கை என்பது ஒரு குறிப்பிட்ட கால அவகாசம். அதில் செய்கின்ற செயல்கள் மூலம் வாழ்வின் நோக்கமும் இலக்குகளும் எட்டப்பட வேண்டும். வாழ்வின் மீதான பற்று வாழ்வினை அர்த்தம்மிக்க செயல்களை நோக்கியதாகவே திருப்ப வேண்டும். செய்கின்ற செயல்கள் இறைஉவப்பை மையமாக கொண்டதாக அமைவதாலே அவற்றின் முழுமை பெறுமானம் கிடைக்கப் பெறும். எண்ணங்களின் விளைவாலே செயல்கள் உந்தப்பட்டு நடைமுறைப் படுத்தப்படுகின்றன. நல்ல செயல்களை வாழ்வில் கடைபிடிப்பதால் வாழ்க்கையின் பிடிமானமும் உறுதித்தன்மையும் தொடர்ந் தியங்கும்.

அர்த்தமுள்ள வாழ்வினை வாழ்ந்து செல்லல் என்பது நல்ல பணிகளை செய்துவிட்டு செல்வதற்கான வழியாகும். நல்ல பணிகள் மூலமாகவே நன்மைகள் பரம்பரையை அலங்கரிக்கும். வாழ்க்கைக் கான சகலமும் நல்ல விடயங்களின் மூலமாகவே வரவழைக்கப்படுகின்றன. அவற்றினாலே வாழ்வு உயிர்ப்பும் லயிப்பும் பெறுகிறது.

நற்பணிகளை மக்கள் மனங்க ளேந்திக் காலத்தின் சக்கரத்தில் கரங்க ளாக்கி போற்றிப் புகழ்வதும் வரலாற்று ஓட்டத்தில் நிலைக்கச் செய்வதும் மனித வாழ்வின் மிச்சமாகும். எச்சங்கள் தொடரும் வாழ்க்கைப் பயணத்தில் நிச்சயமாகிப் போகும் நல்ல செயல்கள் வாழ்வுக்கு என்றுமே வலுசேர்க்கவல்லவை. தொடர்வோம்.

•

வாழ்வின் பிடிமானம் வாழ்வின் படிநிலைகளை உணரத்தொடங்கும் போது சற்றுத் தளர்வடைகிறது. வாழ் வின் போக்குகளும் இலக்குகளும் பிறிதொரு திசையில் திரும்புகையில் வாழ்வின் மீதான லயிப்பும் உயிர்ப்பும் நம்பிக் கையை கொஞ்சம் ஆட்டம் காணவே செய்கின்றன. தினமும் நிகழும் நாட்டு நடப்புகளை சாதாரணமாக கடந்து செல்ல முடியா வகையில் மிக மோசமான அமைப்பில் நடந்தேறிச் செல்வது ஒவ்வொருவரின் உள்ளத்தின் மீதுமான நாள்போராட்டமாகும்.

நடப்புலக அரசியலில் தனிமனித வாழ்க்கை மீதான கவனத்தின் செல்வாக்கு கணக்கெடுக்கப்படுவதே இல்லை என்பதே உண்மை. மனித வாழ்வின் உயர் பெறுமானங்களும் விழுமியங்களும் வலு விழந்து விட்டனவென்றே சொல்ல லாம். வாழ்வின் மீதான இருப்பும் சிந்தனையும் தினமும் நிகழ்ந்த வண்ணமே இருக்கின்றன. பசி, நடைமுறை பொருளாதார சிக்கல்களில் மனிதன் தன்னிலை உணர்ந்து செயற்படவே துணிகிறான். வாழ்வை வெல்வதா அல்லது வாழ்விலிருந்து மீள்வதா என்பதே இன்றைய நிலையின் கடப்பாடு போலும்.

சமூகம் சார்ந்த வாழ்வியக்கங் களின் செரிமானம் சமூகத்துடனான தொடர்பில் அபிமானம் பெற்றிருப்பதில் மக்களின் முரணியக்கம் சமநிலை யடையத் துவங்கியிருப்பது உண்மை தான். காலத்தின் கரங்களில் துலங்கிக் கொண்டிருக்கும் ஞானத்தின் கதவுகள் யாவரையும் வந்தடைய வாழ்வில் சில வசந்தங்கள் தேவைதான். அவற்றை நோக்கிய எதிர் பார்ப்புக்கள் தொடர்ந்த வண்ணமே நிலைபெறுகின்றன. எனவே, வாழ்வியல் எத்தனிப்புக்களில் கவனம் செலுத்தி தொலைத்தவற்றை மீண்டும் பெற்றுக்கொள்ள முன்னிற்போம்.

•



# மனதில் உறுதி வேண்டும்

Dr ஜலீலா முஸம்மில் (ஏறாவூர்)

"மனதில் உறுதி வேண்டும்.
வாக்கினிலேயினிமை வேண்டும்
நினைவு நல்லது வேண்டும்
நெருங்கின பொருள் கைப்பட வேண்டும்
கனவு மெய்ப்பட வேண்டும்
கைவசமாவது விரைவில் வேண்டும்
தனமும் இன்பமும் வேண்டும் தரணியிலே
பெருமை வேண்டும்
கண் திறந்திட வேண்டும்
காரியத்தில் உறுதி வேண்டும்...."

பாரதியின் வீர மொழிகள் இவை. அதற்கமைய மனதிலேயே உறுதியை ஏற்றிக் கொள்ள வேண்டும். மனம் எனப்படுவது சிந்தனை, நோக்கு, அறிவு, கற்பனை, உறுதி போன்றவற்றின் தொகுப்பில் உருவான உணர்வு நிலை என்று சொல்லலாம். உன் மனதில் எதைப் பதிய வைக்கிறாயோ அப்படியே உன் உடல் செயல்படும் பிரபஞ்சம் அப்படியே இயங்கும்.

சின்ன விடயமோ பெரிய விடயமோ எதற்கும் ஆடிப்போய் விடக்கூடாது. ஆழமாய் சிந்தித்து நிதானமாய்க் காலடி எடுத்து வையுங்கள். மனதிலே உறுதி எனும் மையைப் பூசிக் கொள்ளுங்கள். யாருமே நம்மைக் கோழை என்று எடை போட்டுவிடக் கூடாது. உள்ளுக்குள்ளே சில சலனங்கள் இருந்தாலும் வெளியே காட்டிக் கொள்ளாதீர்கள். உங்கள் எதிரிக்கு, உங்கள் முன்னே இருப்பவர்களுக்கு உங்கள் பலவீனத்தை தெரிவிக்காதீர்கள். நினைவிலும் பேச்சிலும் செயலிலும் தன்னம்பிக்கையுடன் இருங்கள். திடமாய் உணருங்கள். தரணியிலே பலமாக வாழுங்கள்.

மனித மனம் ஒரு குரங்கு, அது மரத்திற்கு மரம் தாவும் என்பது நம் முன்னோர்களின் வாக்கு. அவ்வாறாக கிளைக்கு கிளை தாவும் குரங்கு போல நம் மனதை நாம் விடக்கூடாது. அகலக்கால் வைத்து அதல பாதாளத்தில் விழாமல் நின்று நிதானித்து தனித்துவமான ஒரு முடிவை எடுங்கள். சுற்றுச்சூழலை அவதானித்து யாருக்கும் குந்தகம் விளையாமல் உங்கள் முடிவு இருக்க வேண்டும். சிந்தனையைத் தீட்டி நிந்தனைகள் தவிர்த்து நாளும் உயர்ந்து கொண்டே இருங்கள்.

இரண்டு ஓடங்களில் கால் வைத்தவனைப் போன்று தடுமாறாதீர்கள். சூழ்நிலைகளை உள்வாங்கித் தெளிவான பாதையில் பயணியுங்கள்.

தம்மபதத்தில் புத்தர் சொல்கிறார்:

"மனம் அலை பாயக்கூடியது; நிலையற்றது. அது இஷ்டப்பட்ட இடத்திற்குச் சிறகடித்துப் பறக்கும். மனதைக் கட்டுப் படுத்துவது கடினம். ஆனால் அப்படிக் கட்டுப்படுத்துவது மிகவும் நல்லது. கட்டுப் படுத்தப்பட்ட மனதானது, இன்பத்தில் உறைவிடம் ஆகும்."

நிச்சயமாக மனதை கட்டுப்படுத்தி உறுதிபூண்டு மகத்தான இன்பத்தின்

உறைவிடமாக மாற்றவேண்டும்.

தயக்கமே தோல்விக்குக் காரணம். ஏன் நாம் தயங்க வேண்டும்? ஏன் பயப்பட வேண்டும்? எதற்கும் பயப்படாமல் துணிந்து செல்லுங்கள். துணிவு இருந்தால் வெற்றி வசமாகும்.

வாழ்வின் ஒவ்வொரு களத்திலும், கணத்திலும் உனக்குக் கை கொடுக்கும் அம்சமாகும். துணிவே உனக்கு என்னாளும் துணையாகும். புத்தியை துலக்கு, மனதில் உறுதி கொள்,திட்டமிடு, வெற்றி பெறுவாய் நிச்சயமாக.

முடியாது என்பது மூடத்தனமே. முடியாது என்று நினைக்கவே கூடாது. கொஞ்சம் இறங்கித்தான் பார்ப்போமே, சிறு முயற்சியாவது செய்வோமே என்று கொஞ்சம் இதயத்தைத் தட்டிக் கொடுங்கள். முடியும் என்பது தன்னம்பிக்கை. அந்த மூன்றாவது கை கட்டாயம் எமக்குத் தேவை. என்னால் முடியும், நான் இதில் வென்று விடுவேன் என்று மட்டுமே நினையுங்கள். ஆனால் என்னால் மட்டுமே இது முடியும் என்று எண்ணாதீர்கள்.அது கர்வமாகும்.

"சோர்வும் கவலையும்தான்
வெற்றிக்குத் தடைபோடும் கற்கள்."
- பிளாட்டோ

சிறிது சிறிதாய்த் திட்டமிடுங்கள்.சின்னச் சின்ன வெற்றிகளைக் ஒன்று சேருங்கள். சின்னச் சின்ன வெற்றிகளுக்குப் பின்னால் பெரிய கனவொன்று உங்களுக்கு இருக்கும். அதையும் திட்டமிடுங்கள். கடினமாக உழையுங்கள். கடின உழைப்பால் வருவது மகாவெற்றியே. விடாமுயற்சி விஸ்வரூப வெற்றி. மனத்துணிவும், தன்னம்பிக்கையும் இருந்தால், ஒவ்வொருவரும் சாதிக்கலாம். நீ பெரிது நான் பெரிது என்பது இல்லை இங்கு. எல்லோருக்கும் இறைவன் அழகான வாழ்க்கை ஒன்றைத் தந்திருக்கிறான். அந்த வாழ்க்கையைச் சோம்பலுடன் கழிப்பதும் தொய்வுடன் வாழ்வதும் நல்லதே இல்லை. இவ்வுலகில் யாவரும் சமமே. ஆகவே மனதில் உறுதி கொள். வாழ்க்கையோடு போராடு.

# என் விருப்பம்

பார்முழுதும் அமைதித்தென் றல்வீச விருப்பம்;
பகையென்னும் புயற்காற்று நீங்கிடவே விருப்பம்;
கார்முகிலும் மும்மாரிப் பொழிந்திடவே விருப்பம்;
காடுகளும் அழியாமற் காத்துவர விருப்பம்;

பசுமையெனும் தாய்மையைநான் காத்திடவே விருப்பம்;
பயிரெங்கும் இயற்கையுரம் தழுவிடவே விருப்பம்;
பசுமரத்தா ணியாய்மரபும் நினைவிருக்க விருப்பம்;
பைந்தமிழில் காவியங்கள் படைத்திடவே விருப்பம்;

முழுசுகமும் உடல்மீது முத்தமிட விருப்பம்;
முயற்சிகளால் வாய்ப்புவாசல் திறந்திடவே விருப்பம்;
எழுதுவதும் எட்டுதிசை எட்டிடவே விருப்பம்;
எல்லார்க்கும் உதவிடவே என்கரங்கள் விருப்பம்;

கண்ணியமாய் மூத்தோரை மதித்திடவே விருப்பம்;
கற்றோரின் காலடியில் சுற்றிநிற்க விருப்பம்;
புண்ணியங்கள் செய்வதனால் தீங்கொழிய விருப்பம்;
புவியெங்கும் பூமனங்கள் வாழ்ந்திடவே விருப்பம்

மதம்மொழியால் பிரியாத என்நாடு விருப்பம்;
மாணவர்கள் சாக்கடையில் வீழாமை விருப்பம்;
நிதம்நடக்கும் வன்முறைகள் இல்லாமை விருப்பம்;
நீதிகளும் எல்லார்க்கும் ஆகத்தான் விருப்பம்;

மண்ணகத்தில் உள்ளவற்றின் மனங்கவர விருப்பம்
மண்ணுக்குள் சென்றபின்னும் புகழ்மணக்க விருப்பம்;
விண்ணகத்தின் வானவர்கள் குடில்புகவே விருப்பம்;
வீணாகும் காலங்கள் முறைப்படுத்த விருப்பம்;

பெற்றோரை மதிக்கின்ற பிள்ளையாக விருப்பம்
பிள்ளைகளும் பெற்றோரை மதித்திடவே விருப்பம்;
சுற்றத்தார் விலகாமல் சூழ்ந்திருக்க விருப்பம்
சுவனமாக வீட்டைத்தான் காணுதலில் விருப்பம்

**'கவியன்பன்' கலாம்.**
அதிராம்பட்டினம்



## அவனியின் தீபம் அறிஞர் அண்ணா

காஞ்சிபுரம் கண்ட கருத்தான நிலவு
மெய்ஞ்ஞான விளக்கேற்றிய மணியின் தீபம்
நெசவாளர் குடும்பத்தின் நேர்த்தியான முத்து
அசரீரியாய் முழங்கிடவே அவதரித்த சொத்து
அன்பும் அமைதியும் இளமையில் ஒருங்கே
தன்னம்பிக்கையின் ஊற்றாய்த்
தோன்றிட்ட வேங்கையே
நினைவாற்றல் என்றும்
நிரந்தரமாய் உள்ளத்தில்
சுனையாகும் அறிவினிலே சிறந்திட்ட தலைவர்
அரசியலின் முன்னே ஆசிரியப் பணியில்
புரவிபோலப் பூமியிலே பாய்ந்திட்ட பலவான்
அஞ்சாத பேச்சுக்கு ஈடிணை இல்லையே
நெஞ்சுரத்தின் வழிதனிலே நிமிர்ந்திட்ட வீரரே
சிந்தனைகளை உயிர்ப்பித்துச்
சேவகம் செய்தனரே
சிந்தையிலே தேசபக்தி சிறப்பாக ஏற்றினரே
பகுத்தறிவுக் கொள்கை
பரப்பிய பெருந்தகையே
தகுந்த அரசியல்முறை தந்திட்டதாரகையே
நீதி வழுவா நேர்மையாட்சியின் நாயகனே
பீதியின்றிச் சாதியெதிர்ப்பு போதித்த தூயவரே
எழுத்திலும் சொல்லிலும்
இயக்கம் வளர்த்தனரே
கழுகாகக் காரியங்கள் கருத்தாய்ப் புரிந்தனரே
மூடநம்பிக்கையைக் கழுவிலேற்ற
முன்வந்த தலைவரே
திடமாகத் தமிழ்நாட்டைத்
திட்டமிட்ட மாமனிதரே
ஏற்றத்தாழ்வு சமூகத்திலே
களைந்திட்ட கருணையாளரே
போற்றிடவே உம்மைப்
போதவில்லை மொழியே
புற்றுநோய் உம்மைக் கொண்டு சென்றதோ?
குற்றமில்லாக் குணத்தாளரைக்
குவலயமே வாழ்த்திடுமே

Dr ஜலீலா முஸம்மில்
ஏறாவூர், இலங்கை

வெற்றியோடு கைலாகு கொடு.

"பேச்சில் இனிமை,
கொள்கையில் தெளிவு,
செயலில் உறுதி
ஆகிய மூன்றும் உள்ளவரால்
எதையும் சாதிக்கமுடியும்."
- புல்லர்

தெளிவான உறுதியாக செயற்படுங்கள். முன்னோரின் முதுமொழிகளை மெய்ப் படுத்துங்கள்.

உலகத்தில் அதிசயம் நடக்கத் தேவையில்லை. வானில் இருந்து அதிசயங்கள் இறங்கத் தேவையில்லை. இந்த உலகின் அதிசயம் நீங்களே. நீங்கள் நிகழ்த்தும் ஒவ்வொரு வெற்றியான செயற்பாடும் அதிசயமே. நீங்கள் செய்கின்ற எந்த காரியமும் ஈடேறினால் அது அதிசயமே. யாருடைய முகஸ்துதியையும் எதிர்பார்க்காதீர்கள், யாருடைய வாழ்த்தையும் நோக்காதீர்கள். நீங்கள் செய்கின்ற எந்தச் செயலிலும் நேர்மையைக் கையாளுங்கள். மனதில் துணிவை ஏற்றுக்கொண்டு காரியத்தில் இறங்குங்கள். அபாரத் துணிவு தேவையில்லை. கொஞ் சூண்டு துணிவு. அதுவே போதும். அதுவே அபார வெற்றியைத் தரும்.

"மனிதனின் மன உறுதி
மலைகளையும் தகர்த்தெறியும்."

என்று மார்க்ஸ் எனும் அறிஞர் மனவுறுதி பற்றி ஆணித்தரமாகக் கூறி இருப்பது எல்லோருக்கும் உத்வேகத்தை அளிப்பதாக உள்ளது.

எதையும் செய்து பார்த்து விடலாம் என்ற மனத்துணிவு கட்டாயம் ஒவ்வொருவரிடமும் இருக்க வேண்டும். அந்தத் தன்னம்பிக்கைத் தீபத்தின் ஒளியில் கொஞ்சம் கொஞ்சமாய் காயை நகர்த்துங்கள். வாழ்க்கை வளம்பெறும். வாழ்வின் சிக்கல்களைப் புரிந்து கொள்ளுங்கள். விளங்கிக் கொள் ளுங்கள். மனத் துணிவோடு வீர நடை போடுங்கள். வெற்றியின் வாடையை நுகர

நுகர தன்னம்பிக்கை தன்னாலே உங்களிடம் கூடிச் செல்லும். தரணியில் வாழ்ந்திடப் போதிய பலம் வளரும்.

**"உறுதியுடைய உத்தமர்க்கு**
**உலகம் வளைந்து கொடுக்கிறது"**
**- ஏராஸ்பீஸ்**

இங்கே சிலரிடம் போதிய துணிவு இருப்பதில்லை. அதனாலேயே தோல்வி யில் அவர்களுடைய காரியங்கள் முடிகின்றன. தோல்வியில் முடிந்தாலும் சிறு முயற்சி கூட மீண்டும் எடுப்பதில்லை. தோல்வியில் துவண்டு போய் விடுகி றார்கள். முன்னேற முடியாமல் பயந்து போகிறார்கள்.

ஒருமுறை மட்டுமே செய்யக் கூடாது. விழுந்து எழுபவனே மனிதன். பிரச்சனைகளைச் சந்திப்பவனே மனிதன். மீண்டும் மீண்டும் முயலுங்கள். முயற்சி யைக் கைவிடாதீர்கள். தோல்வியே வெற்றியின் முதல் படியென்று சும்மாவா சொல்லி வைத்தார்கள். ஒவ்வொரு தோல்வியும் உனக்கு அனுபவப் பாடமா கும். தோல்விகளால் வெற்றிப் படிகளை உருவாக்கு. கனவிலும் நனவிலும் உறுதி கொள். இலக்கு நோக்கி எம்பிக் குதித்து ஓடு. எதிர்காலம் உன் கண் முன்னே வந்து சேரும்.

முதலில் எண்ணத்தில் நம்பிக்கை கொள்ள வேண்டும். நம்பிக்கையுடன் நாம் இந்தச் செயலை செய்து விடுவோம், தாவிக் குதித்து விடுவோம், என்ற எண்ணம் ஏற்படவேண்டும். எண்ணம் உறுதியாக இருந்தால் செயலும் திண்ண மாய் உறுதியாகவே இருக்கும்.

வாழ்வில் வெற்றி பெறுவதற்கு மன உறுதியுடன் செயல்பட வேண்டும். மன உறுதி பெறுவதற்கு முதல் எதிரி பயமே. பயம் வாழ்க்கையை கொன்று போட்டு விடும். பயத்தால் ஆனால் பலன் ஒன்றும் இல்லை.

நாம் மன உறுதி பெறும் போது நம்மிடம் உள்ள பயம் நம்மை விட்டுப் பறந்தோடி விடுகிறது. வீரம் துளிர்த்து உற்சாகம் பீறிட இலக்கை நோக்கிய வெறி தூண்டப்படுகிறது.

வெல்ல முடியும் என்று நினைப்ப வராலேதான் வெல்ல முடியும். வெற்றிக் கனிகளை மெல்ல முடியும். ஆதலால் மனதில் உறுதி கொள்வோம். மலை போன்ற தடைகளையும் வெல்வோம்.

**"எண்ணிய எண்ணியாங்கு**
**எய்துப எண்ணியார்**
**திண்ணியராகப் பெறின்"**

**- திருக்குறள்**

**"உள்ளியது முடிக்கும் உரனுடை**
**உள்ளத்து வரிசைக்கு வருந்தும்**
**இப்பரிசில் வாழ்க்கைப் பரிசிலர்க்கு**
**அடையா வாயிலோயே"**

**- புறநானூறு**

## வரமாய்ப்பெற்றாள்!

முத்தாய் மின்னும் பற்கள்!
முகமே நிலவு! பேரழகு!
பத்தாய்ப் பெருகிப் படரும்
பாவை யெண்ணம் தேன்பாகு!
சொத்தாய்ப் பெற்றாள் பெண்மை
சொக்கச் செய்யும் கலைவடிவு!
கொத்தாய்ப் பூக்கள் கொடுத்தேன்
கூடிப் பெருகும் என்கனவு!

எண்ணம் நிறைந்தே இசைக்கும்
இனிமை பொங்கும் செந்தமிழாள்
வண்ணம் கொண்ட கோலம்
வடித்தே மிளிரும் பொற்சிலையால்!
அன்ன நடையின் தன்மை!
அல்லி மலரின் மென்மை!
நன்றி உரைத்தே புனைந்தேன்
நன்றே இனிக்கும் விருத்தங்கள்!!

**ரஞ்சினி சந்திரமோகன்**
(நிலவழகன்)



# நாய்

**முனைவர். பெண்ணியம் செல்வக்குமாரி**

காலைப் பொழுது அப்போது தான் கண்விழித்திருந்தது. ஆனால் அதற்கு முன்னே அனிதா எழுந்து வீட்டு வேலைகளைப் பரபரப்பாகச் செய்து முடித்திருந்தாள். இன்று ஆபிசில் முக்கிய மான வேலை இருந்தது.

அனிதா ஆபிஸ் போக அவசர அவசரமாகப் படி இறங்கினாள். முதல் ப்ளோரிலிருந்து கிரௌண்ட் ப்ளோர் செல்லும்போதுதான் அது நடந்தது. திடு மெனக் கீழ் வீட்டிலிருந்து ‘வள்வள்’ எனக் குறைத்துக் கொண்டு நாய் முதல்மாடி மேல் ஓடிவர,இறங்கிய மாடிப்படியில் ஒருநிமிடம் உறைந்து நின்றுவிட்டாள். அவள் சேலையை நாய் கௌவி இழுத்ததைக் கண்டு, நெஞ்சு படபடவென்று அடித்துக் கொண்டது.

மெதுவாக மாடி ஏறிவந்த கீழ் வீட்டு மரகதம், நாயைத் தூக்கிக் கொண்டு, “இப்பப் போங்க அக்கா” என மிக இயல்பாகச் சொல்லிவிட்டு, படி இறங்கிப்போய் தன் வீட்டுக் கதவை மூடிக் கொண்டாள்.

அனிதா முகத்தில் எள்ளும்கொள்ளும் வெடிக்க, சாயங்காலம் வந்து பேசிக்கலாம் எனப்படியிறங்கினாள். அவள் இன்னும் பத்து நிமிடத்தில் பேருந்தைப் பிடிக்க வேண்டும். எரிச்சலும் வேகமும் கூடி, ஓட வேண்டிய கால் விசுக்விசுக்குன்னு இழுப்பதாக உணர்ந்தாள். எப்படியாவது பேருந்தைப் பிடிக்க வேண்டுமே என வேண்டிக் கொண்டே நடந்தாள்.

அலுவலகம் செல்லும் இந்த நேரத்தில், அவளுக்கு இந்த மாதிரியான சங்கடங்கள் எவ்வளவோ நடக்குது. அதையெலாம் யோசிக் காமல் விட்டுவிட்டு அடுத்த வேலையைப் பார்ப்பாள். ஆனால் இன்னிக்கி நடந்தது அவள் மண்டைக்கு மேல் உட்கார்ந்து கொண்டு கோபத்தை ஏற்றியது. அவளால் பொறுக்க முடியவில்லை. ‘நாய கட்டிப் போட்டு வளக்கத் தெரியாது, அப்புறம் எதுக்கு நாய் வச்சிருக்காளுவளோ’ன்னு வாய் முணுமுணுக்க, நடந்து போய் எப்படியோ பேருந்தைப் பிடித்து விட்டாள்.

சீட்டைப் பிடித்து உட்கார்ந்ததும் தான் பார்த்தாள். புடவை கொஞ்சமாக கிழிந்து தொங்கியதை. அந்த நாய்

புடவையைக் கௌவி இழுத்தத்தைக்கூட இவள் உணரவில்லை. பயணம் முழுக்க நாயின் ஞாபகந்தான். இருக்கட்டும் இன்னிக்கிச் சாயங்காலம் இந்தப் பிரச்சனைக்கு ஒரு முடிவு கட்டியே தீரணும்னு ஒரு முடிவு எடுத்தாள். பிறகு பேருந்து விட்டிறங்கி ஆபிசுக்குள் நுழைந்தாள். அவளுக்கான அறையில் உட்கார்ந்து தன்னை ஆசுவாசப்படுத்திக் கொள்ள முயன்றாள். ஆனாலும் அந்த நாயின் நினைவு வந்துவந்து தொந்தரவு கொடுத்துக் கொண்டிருந்தது.

அன்றொருநாள் அப்படித்தான் அண்ணன் ஒருவர் கல்யாணப் பத்திரிக்கை வைக்க,முதல் மாடி வர மாடிப்படி ஏறி வந்தார். எதிர்பாராதவிதமாக அந்த நாய் வள்ளுனு கொலைச்சிக்கிட்டு ஓடியாந்து கடிக்க வந்திருக்கு. பயந்து வேகமாக படியில் காலெடுத்து வச்சவர் வழுக்கி விழ, தாடை படிக்கட்டில் மோதி இரத்தம் கொட்டியது. உடனே ஆசுபத்திரிக்கு அழைத்துப் போய் கட்டுக்கட்டி வர நேர்ந்தது ஒரு கொடுமையான சம்பவம். அதிலிருந்து கீழ்வீட்டு மரகதத்திடம் முகம் கொடுத்துப் பேசு விரும்புவதில்லை இவள்.

நாயைக் கோபமாக அடித்து உள்ளே இழுத்துச் சென்றவள் ஒரு மன்னிப்புக்கூட கேட்கவில்லையே. அன்றும் அதையே செய்தாள். இன்றும் அதைத்தான் செய்தாள். கூட ஒரு வார்த்தையாக 'கடிக்காதுக்கா' என்றதுதான் இவள் கோபத்தை இன்னும் அதிகப்படுத்தியிருந்தது. எத்தனை அலட்சிய மனப்பான்மை. அடுத்தவங்க என்ன ஆனா இவங்களுக்கென்ன? . ஆபிஸ் சீட்டில் அமர்ந்தும்கூட அவளுக்குத் தன் வேலையைச் செய்யமுடியாதவாறு நாய் பற்றிய எண்ணங்களே சுற்றிச்சுற்றி வந்தன. டேபிளில் பைல் திறக்கப்படாமலே இருந்தது.

"என்னம்மா கண்ணு.. காலைலே எள்ளுங்கொள்ளும் வெடிக்குது முகத்துல. பைல் தெறக்கப்படாமலே கெடக்குது. இன்னிக்கி நிறைய வேலைகள் முடிக்க வேண்டியிருக்குன்னு நேத்து சொன்ன" படபடன்னு கேட்டவள் அனிதாவோட வேலை செய்யும் நெருங்கிய தோழி அபர்ணா.

"அடிப்போடி... காலைலேர்ந்து அந்த நாயால எரிச்சலா இருக்குடி"

"ஏற்கனவே சொன்னியே, பொட்ட நாய தொரத்திகிட்டு ஆண்நாய்ங்க நிறைய அலையுதுன்னு.." இழுத்தவளுக்கு முத்தாய்ப்பு வைத்தாள்.

"அதில்லடி, இது கீழ்வீட்டு நாயி"

"ஓ.." என்றபடி சென்றவள் அவளோட ஆபீசு சேரில் அமர்ந்து வேலை பார்க்க ஆரம்பித்தாள். இவளுக்கோ இன்னும் நாயின் நினைப்பு தீர்ந்த பாடில்லை.

காலைலேர்ந்து நாயைப் பற்றிய எண்ணங்களே தன்னைச் சுற்றி வருவதாக உணர்ந்தாள். அதை விட்டு வேறு நெனப்புக்கு மாற யத்தனித்தாள். அவள் இருக்கைக்கு எதிரே ஒருசன்னல் இருந்தது. அதன் வழியே தெரிந்தன பசுமையான மரங்கள், அவற்றில் பூத்திருந்த மஞ்சள் பூக்கள்,அவற்றின் வாசனை அவளை நோக்கி வருவதை உணர்ந்தாள். தன் மூக்கால் உள்ளிழுத்து பெருமூச்சு விட்டாள். மனம் லேசாகியது. வேலையில் மும்முரமானாள்.

அபர்ணா அந்தப் பொட்ட நாய் பற்றிக் கேட்டது பரபரப்பான வேலைக்கு நடுவே சட்டென நினைவுக்கு வந்தது. ஒருநாள் மதியவேளை தன்வீட்டின் அறை சன்னலைத் திறந்தாள். பக்கத்தில் ஒரு பள்ளி வளாகம் தெரிந்தது. அங்கே ஒரு பெண் நாயைத் துரத்திக் கொண்டு, நாலு ஆண் நாய்கள் நாக்கைத் தொங்கப் போட்டு ஓடிக் கொண்டிருந்தன. பெண்நாய் திரும்பித்திரும்பிப் பார்த்து ஈனஸ்வரத்தில் குலைத்துக் கொண்டு ஓடிக் கொண்டிருந்தது.

வலுவானதுதான் ஜெயிக்கும். என்றாலும் எதிரிகள் பலராக இருந்தால் எப்படி



# இவை போதுமெனக்கு

பசிக்குண்ண போதுமான உணவு,
உடுத்துக்கொள்ள,
அவசியமான ஆடைகள்,
சமூகத்தில்
தலைநிமிர்ந்து நடமாட,
தேவையான அந்தஸ்து,
படுக்கையில் விழுந்ததும்,
மெய்மறந்து அயரும் தூக்கம்...
இது போதுமெனக்கு.

கோடீஸ்வரியாகும் கனவுகள்,
கொஞ்சமுமில்லை.
சுகமான தூக்கத்தைத் தவிர,
இறைவனிடம் கேட்டதெல்லாம்,
அடுத்தவர்க்காகதான்.

வாழ்வாதாரப் பிடிமானங்களின்றி,
மகிழ்ச்சியிழந்து,
தவிக்கும் ஏதிலிகளை,
வள்ளல்களிடம் காட்டிக்கொடுத்து,
உபகாரம் செய்விக்கும்,
உளத்திருப்தியொன்றே போதும்.

அதற்கப்பால்
இலக்கியத்தோடான,
இடையறாப் பயணம்,
ஓய்வைக்கழிக்க ஒருபேனா,
வாசிக்க நல்ல புத்தகங்கள்,
உள்ளவரை கூடவே வரும் துணை,
முற்றாய்ப்பாய்
முடிவிலியற்ற இறையச்சம்...
என் வாழ்வை பூரணப்படுத்த,
இவை போதுமெனக்கு,
நிரந்தரமற்ற இவ்வுலகில்.

**சம்மாந்துறை மஷூறா**

ஜெயிக்க முடியும்? நாக்கைத் தொங்கப் போட்டுத் தொங்கத் தொங்க உறுப்பை ஆட்டிக் கொண்டு ஓடும் நாய்களுக்கு அறிவே இருப்பதில்லை. புணர்தல் என்பது இருவருக்கும் இடையில் வருகின்ற அன்பின் வெளிப்பாடாக இருக்க வேண்டும் என்று. இப்படியா அலையணும் நாயிங்க. ஒரு பெண்நாயைப் புணர நான்கு ஆண்நாய்கள் துடித்தன. அதில் ஒரு ஆண்நாய் புணர, வலி பொறுக்க இயலாமல் கத்தியது. நிறைய நேரம் அப்படியே இருந்தது. அந்த ஆண்நாய் விலக, அடுத்து இன்னொரு ஆண்நாய் புணர, கத்தமுடியாமல் கமறியது. அந்த நாய் முடித்தவுடன், பெண்நாயின் யோனியிலிருந்து இரத்தம் கொட்டியது பாவமாக இருந்தது. நாயினத்துக்கே அதுதானே இயற்கை. ஒரு குறிப்பிட்ட மாதங்களில் மட்டுமே நாய்கள் புணர்தல் செய்பவை. இவைகளோட புணர்ச்சியை மனித இயல்போடு ஒப்பீடு செய்து பார்ப்பது எத்தனை முட்டாள்தனம் என் யோசிக்கையில், சர்மிளாவின் கைப்பேசி ஒலித்தது. எடுத்துப் பேசினாள்.

“என்னப்பா.. இந்தப் பொட்ட நாயி இவ்ளோ கஷ்டப்படுதுப்பா. அது நம்ம வீட்டுக்கிட்ட உக்காந்திருக்குப்பா. அதன் யோனிலேர்ந்து வந்த இரத்தம் வாசலெங்கும் கொட்டிக் கெடக்குதுப்பா.. பெருக்கித் தண்ணி ஊத்தித் தேய்ச்சாலும் போகமாட்டுது. அத விரட்டவும் பாவமா யிருக்கு. முனிசிபாலிடிகாரன்கிட்ட சொன் னேம்பா, கண்டுக்க மாட்றானுங்க,” என அவள் புலம்பினாள். அவ எப்படி தான் நினைத்துக் கொண்டிருந்ததை சொல்கிறாள் என வியப்பாக இருந்தது அவளுக்கு.

“ஏய்..எப்படிடி, நான் நெனச்சிட்டி ருந்ததை நீ சொல்றே”

“ஐயோ, பாவம்பா அந்த நாயி. எத்தனை நாய்ங்கள எத்தனை நாள்தான் தாங்குமோ?. நீயாச்சும் இதுக்கொரு வழி செய்வேன்னு பார்த்தேன்..” எனச் சொல்லி வேதனைப்பட்டாள்.

“இதுக்காகவா வருத்தப்படற.. அது இயற்கைப்பா...” எனச் சொல்லிச் சிரித்தாள்.

“இருந்தாலும் மனசு கேக்கலைப்பா... வள்ளுவள்ளுன்னு கொலைக்கற சத்தம் காதப் புடுங்குதில்ல” என நெகிழ்ந்தாள் சர்மிளா.

‘‘அடப் போப்பா.. நானே கீழ்வீட்டில் இருக்கற நாய் தொல்லையால அவஸ்தப்படறேன். இத எங்கப் போய் சொல்ல’’ ஆதங்கத்தைச் சொல்லித் தீர்த்தாள் அனிதா. இவளும் அவளும் சேர்ந்து ஒருவரோடு ஒருவர் புலம்பிக் கொண்டு போனை ஒருவழி செய்தனர். தன் வேலையைத் தொடர்ந்தவளுக்கு மறு படியும் வேலை மும்முரத்தில் இருந்தவளை குறுக்கு விசாரணை செய்தது காலை நிகழ்வு.

இந்த நாய் விசயம் ஒரு நாள் இரண்டு நாள் அல்ல, கிட்டத்தட்ட ஆறு மாதங்கள் கடந்து போய்க் கொண்டிருக்கு. அந்த நாய் தினமும் குலைப்பதும் தினமும் இவள் பயப்பட்டு படியிறங்காமல் நிற்பதும் வாடிக்கையாகிவிட்டது. ஏதோ ஒருவகையில் அந்த நாய் இன்னும் அவளைக் கடிக்காமல் விட்டு வைத்திருக் கிறதே அதுவே அதிசயந்தான் என நினைத்துக் கொண்டாள்.

நாய் வளர்ப்பது அவரவருடைய விருப்பம். அதில் தலையிடுவது தவறு. அதில் எந்த ஆட்சேபனையும் இல்லை. ஆனால் ஏன் அந்தக் கதவைத் திறந்து வைத்து நாயை வெளியே விடவேண்டும்? ஏன் பிறரைத் தொந்தரவுக்குள்ளாக்க வேணும் என்பதுதான் அவளுக்குள் எழும் கேள்வி. வளர்க்கத் தெரிஞ்சி வளர்க்கணும். இல்லனா வளர்க்கக் கூடாது. மத்தவங்கள தொந்தரவு பண்ற விசயத்த தான் செய்யறோமேன்னு கொஞ்சங்கூட குற்றவுணர்வே இல்லை அவளுக்கு. எப்படித்தான் பாடங்கற்பிப்பது? இன்னிக்கிப் பேசி இதுக்கொரு முடிவு கட்டியே ஆகணும்.

அதுமட்டுமா அந்த நாய தெனம் மூன்று மாடி ஏறி அழைச்சிப் போயி மொட்டை மாடியில் வைத்திருப்பாள்., அந்த மூன்று மாடி வரைக்கும் ஒரே வெள்ளை முடிகள் ,உதிர்ந்து கெடக்கும். மாடிப்படியெங்கிலும் வயதானவர்களின் நரைச்ச முடி கணக்கா கெடக்கும். அதை ஞாயிறுதோறும் பெருக்கும் இவளுக்குத்தானே தெரியும் அதன் சிரத்தை. நாயின் முடி உள்ளே போச்சுன்னா, சுவாசப் பிரச்சனை வரும் என்பதை எங்கோ படித்திருந்தாள். அந்த உதிர்ந்த முடிகளை மூன்றுமாடிப் படிக்கட்டுகளில் கூட்டி வாரி எடுத்தபோது, நாயைக்கூட்டிக் கொண்டு படிக்கட்டில் சாவகாசமாக ஏறியவளைப் பார்த்து ஆத்திரம் பொங்கியது. ஏனோ அடக்கிக் கொண்டு பெருக்கி வாருவாள்.

நாயக் கட்டிப் போட்டு அவளுக்கு வளர்க்க தெரியாது? எதுக்கெடுத்தாலும் திறந்துவிட்டுட்றா.. அறிவு இருக்குதா இல்லையா? மனதிற்குள் திட்டிக் கொண்டே அவளுக்கு நாய் தொல்லை நாளுக்குநாள் அதிகரிப்பதாகவும் அதனால் மனவுளைச்சலுக்கு ஆளாக நேரிடுமோவென பயந்தாள். ஏதாகி லும் டாக்டரைப் பார்த்து கவுன்சிலிங் போனால் நல்லது என நினைத்தாள். அதற்குள் கீழ்வீட்டுக்காரியிடம் சண்டை போட்டே ஆகனும். அப்பதான் தன் மனசு அமைதியடையும் எனவும் நம்பினாள்.

மதியவேளை ஆயிற்று. பசிமறந்து வேலை செய்து கொண்டிருந்தாள். தன் இருக்கையின் டேபிள்மேலிருக்கும் பைல் களை முடிக்கும் அவசரத்தில் இருந் தவளுக்கு நேரம் போனதே தெரியவில்லை.

‘‘அனிதா,மணி இரண்டாச்சு. வா.. சாப்பிட போகலாம். பசிக்குது’’ குரல் கேட்டுத் திரும்பினாள். அவளருகில் கார்த்திகா நின்றிருந்தாள். அவளுடைய வாடிய முகத்தைக் கண்டுவிட்டாள்.

‘‘ஏன்டி, என்னவோ போல இருக்க. ஏதாவது பிரச்சினையாடி’’ எனக் கேட்ட போது கொஞ்சமாய் கண்ணீர் எட்டிப் பார்த்தது.

‘‘மீண்டும் அந்த நாய் பிரச்சினை தாண்டி. என்ன பண்றதுன்னே தெரியலடி’’ சோகமாய்ச் சொன்னாள்.

‘‘வீட்டு ஓனர்கிட்ட சொல்லி அவங் களைக் காலி பண்ண சொல்றதுக்கென்ன‘‘

“இல்லப்பா, ரெண்டு பெண் குழந்தைங்க இருக்குதுங்க. ஒருத்தி எய்த்., இன்னொருத்தி ட்வெல்த், அதான் யோசனையாயிருக்கு. இந்த வருடம் முடிக்கனும்ல.. நம்மாள அந்தப் புள்ளங்க படிப்பு கெட்டுதுன்னு இருக்கக் கூடாதில்ல”

“ஆமாம்... வீட்டுக்காரர்கிட்ட சொல்ல வேண்டியதுதானே”

‘‘அவர் இங்கில்ல. வெளிநாட்ல வேலை செய்யறார்’’

‘‘அவகிட்ட நேரா பார்த்துக் கேட்க வேண்டியதுதானே’’

“இந்த நாய் வளர்ப்பதை நாம் என்னன்னு கேக்கறது? தெரிந்தவளாக இருக்கிறாள். அதுவும் உறவுக்காரி வேறு. நானும் எவ்ளோ ஒருமுறை இரு முறைன்னா பரவால்ல. பலமுறை நடக்குது. எதயும் கண்டுக்கவே மாட்றா. காலைல தொடங்கற எரிச்சல் இரவு முழுக்க இருக்குடி. அதனாலே அவளிடம் நேராக பேசுவதே இல்லை. இப்பலாம் ஏதாவது அவசரம் என்றால் தான் பேசுவேன் அவகிட்ட’. இருவரும் பேசிக் கொண்டிருந்த போது, அவங்களை ஒரு பார்வைப் பார்த்துக் கொண்டே போனான் கண்ணன். பிறகு அவனோட இருக்கை யில் உட்கார்ந்து அவங்களையே பார்த்தான். அதை கார்த்திகா பார்த்து விட்டாள்.

‘‘ஒரு நாய் நம்பள எப்படி பாக்குது பார். சட்டுனு பாக்காதடி’’ காது கடித்தாள் கார்த்திகா.

‘‘அவன் ஒரு ஆளு..அவனப்போயீ..’’ இழுத்தாள் அனிதா. ‘‘என்ன இருந்தாலும் நம்ம உயரதி காரி இல்லையா’’

“அவனா? அவன் தொப்பையும் ஆளும்... அவன் கூப்டா எல்லாப் பொண் ணுங்களும் வந்துடுவாளுங்கன்னு நெனப்பு. அவனுக்கு நான் கொடுத்த சூடு பத்தல போல. அதான் வெறிக்கப் பாக்கறான்”

‘‘ஆமாடி... மீனாகிட்ட ஏதோ கசமுசா பண்ணியிருக்கான் போல. அடுத்தநாள் அவபுருசனோட வந்து சத்தம் போட்டாள். அந்தாளுக்கு அளுக்கு சுளுக்கில்லே. அப்புறமும் எல்லார் கிட்டயும் வழியுது. நாய்ப்பய»

‘‘இவன என்ன பண்ணாத் தகும்டி’’

‘‘விடுடி.. அவங்கெடக்கறான். நான் வரேன்பா. நான் மாடிக்கிப் போயி வெயிட் பண்றேன், வேலய முடிச்சிட்டு சீக்கிரமா வா. பசிக்குதுடி’’ என்று சொல்லிவிட்டுக் கார்த்திகா கிளம்பிவிட்டாள்.

‘‘நாயக் குளிப்பாட்டி நடுவீட்ல வச்சாலும் அது புத்தியதான் காட்டுமாம்.. பழமொழி சரியா சார்’’ என அவனருகில் போய் கேட்டாள்.

அவன் எந்தப் பதிலும் தராமல் சிஸ்டத்தில் வேலை பார்ப்பதுபோல் தலை குனிந்து கொண்டான். இவனுங்க மாதிரி ஆம்பளங்க இருக்கத்தான் செய்வாங்க. அதைத் தாண்டிதான் பெண் தன்னை நிலைநிறுத்திக்கனும். தன்னுடைய இருக் கைக்கு வந்து சாப்பாட்டு டிபனை எடுத்துக் கொண்டு மாடிப் படியேறினாள். கோபம் துக்கம் ஆற்றாமை எல்லாம் கலந்து பெருமூச்சாகியது.

இன்றைக்கு விழித்த முகமே சரி யில்ல போல. எதுவும் ஒழுங்கா நடக்கல. இன்னியோட நாயி விசயத்துக்கு முடிவு கட்டியே ஆகணும். மாலை வீட்டுக்குப் போறப்ப, கீழ்வீட்டுக்காரியிடம் நின்று பேசியே தீர வேண்டும் என முடிவெடுத்தாள். இதுஇப்படியேவிட்டால்,அடுத்தநாள்அடுத்த நாள் என்று போய்க்கிட்டே இருக்கும். மனசில் நிம்மதியில்லாம அலைய வேண்டியதுதான்.

படியேறி கார்த்திகா அமர்ந்திருந்த இருக்கை தேடினாள். அவளெதிரில் அமர்ந்து இருவரும் சாப்பிட ஆரம்பித்தனர். மனசின் குடைச்சலில் உணவின் ருசி தெரியாமல் உண்டு முடித்தாள்.

மாலைநேரம் ஆயிற்று. ஆபிசு வேலையை முடித்து பேருந்தைப் பிடித்தாள். மேலதிகாரி கண்ணனைப் பற்றிய நினைவு மீண்டும் வந்தது.ஒவ்வொருவருக்கும் ஒருஒரு குணம். என்னதான் நாம வேஷம் போட்டு வாழ்ந்தாலும் அவங்கவங்க ஒரிஜினல் குணம் அவ்வப்போது வெளிப்படத்தான் செய்யும். அப்படித்தான் இந்த மேலதிகாரியும். எப்பப் பாத்தாலும் பொண்ணுங்கள உத்துப் பார்க்கறது அவன் புத்தி. ஆம்பளங்க்கிட்ட பழகறப்ப நாம யாரு, எப்படின்னு புரியவச்சிட்டோம்னா நம்மகிட்ட வாலாட்ட மாட்டாங்க, பெண்களிடம் மரியாதையா நடந்துக்கற ஆண்களும் உண்டுதானே. அதமீறி ஒருசிலர் இப்படி இருக்கத்தானே செய்யறாங்க. தனக்குத்தானே சொல்லிக் கொண்டு டிக்கெட் வாங்கினாள்.

பேருந்து நிற்க, படி இறங்கினாள். வீடு நோக்கி நடந்தாள். மாலை ஆபிசு விட்டு வீடு திரும்பிய போதும் கோபம் கொஞ்சமும் குறைந்தபாடில்லை . இன்று கேட்டுவிட வேண்டும் இல்லைனா தன் மண்டை வெடித்துச் சுக்கு நூறாகிடும் என உணர்ந்தாள். வீடடைந்தாள். முகத்தைச் சீரியஸாக வைத்துக் கொண்டு, வீட்டின் வெளிக்கதவைத் திறந்தாள். அந்த நாய் லேசாக திறந்த கதவிலிருந்து வள்ளுனு கொலைச்சிக்கிட்டு ஓடி வந்தது. டக்குனு கதவை மூடினாள்.

அவளுக்கு வந்ததே பார் கோபம்.. உன் கோபம் என் கோபமில்லே. அளவுகடந்த கோபம். மூக்கு விறைக்க, கண் பிதுங்க வெளியே நின்னு கத்த ஆரம்பித்தாள்.

“ஒரு நாயி ஒன்னு வளக்கறாளுக... நாயீ... கட்டிப் போட்டு வளக்க வக்கி லைன்னா ஏன் வளக்கனும்? அன்னிக்கி அப்படித்தான் பத்திரிக்க வைக்க வந்தவர கடிக்கப் போயி, பயந்து படிதடுக்கி விழுந்து



# நல்லதை விதைப்போம் வல்லமைப் பெறுவோம்

பிள்ளைகளின் நெஞ்சில் பெற்றோர்
விதைக்கும் நல்ல எண்ணங்கள்
ஆலமரமாய் உருவெடுத்து நல்ல
சமுதாயம் உருவாக ஏதுவாகும்

சிறந்த குடிமகனா(ளா)ய் நாட்டில்
குழப்பங்கள் இல்லா நிம்மதிகள்
வாழ்வில் நிம்மதித்தருமே - இன்றே
பெற்றோர் கவனம் கொள்க!

நல்லவைகள் வையகத்தை ஆளும்
நன்னிலமே மனதை குளிர்ச்சியாக்கும்
சிறப்பும் செழிப்புமாய் மகிழ்வளிக்கும்
வாழும் உயிரினங்களுக்கு உணவளிக்கும்!

உறவுகளில் ஒற்றுமையை பெருக்கி
நித்தமும் சங்கிலிகளாய் இணைந்தால்
அன்பான பல்கலைக்கழகமே உருவாகும்
நல்ல விளைச்சல் நிலமாகும்!

ஆனந்தமாய் ஆரோக்கிய விதைகளால்
உலகை வளம்பெறச் செய்வோமே
உவகை யோடு உயர்வாய்
உலகில் வலம் வருவோமே...!

- ஜஸீரா ஜலீல்
மலேசியா

தாடை ஒடஞ்சிது. இன்னிக்கி என் புடவை கிழிஞ்சி பைத்தியக்காரி மாதிரி ஆபிசுக்குப் போயிட்டு வரேன்.. அவவளுக்கு என்ன வேத்து வடியுது? '' வெளிவாசலிலே நின்று கத்திக் கொண்டிருந்தாள்.

வீட்டிற்கு உள்ளே இருந்து வந்த மரகதம் மெதுவாக இவளைப் பார்த்து ''கத்தாதேக்கா.. கொஞ்சம் வீட்டுக்குள்ள வாயேன்'' கெஞ்சும் தோரணையில் அழைத்தாள். அவளுக்குப் போவ மனசில்லாம கேட்டிலேயே நின்றிருந்தாள். திரும்பவும் அழைக்க உள்ளே போனாள். சோபாவைக்காட்டி உட்காரச்சொல்லிட்டு, அவள் கீழே உக்கார்ந்து தலையைக் கீழே போட்டு மௌனம் காத்தாள்.

என்ன இது வம்பா போச்சு. வீட்டுக் குள்ள கூப்பிட்டுட்டு, இப்படி தலகுனிஞ்சி உக்கார்ந்திருக்காளேன்னு எரிச்சல் வந்தது. அவளோட சின்னமகள் தனியாக நாயுடன் உட்கார்ந்திருந்ததைப் பார்த்ததும் இன்னும் எரிச்சலை உண்டாக்கியது.

சிறிது நேரத்தில் மரகதம் கேவுவது கண்டு திடுக்கிட்டாள். ''ஏன் அழற? உன் நாயி, இந்தப் பாடுபடுத்தினா திட்ட மாட்டேனா? எவ்ளோநாள்தான் பொறுக் கறது சொல்லு'' கோபம் தெறிக்கக் கேட்டாள்.

''ஆமாங்கா.. தப்புதான்.. அந்த நாயாலத்தான் இந்தப் பாடுபடறேன்» என்று அவள் சின்னமகள் கயானாவைக் காட்டினாள். இவள் திடுக்கிட்டாள்.

கயானா நாயை மடியில் வைத்துக் கொண்டு ஏதும் நடக்காதது போல் ஒருமூலையில் உட்கார்ந்து நாயைத் தடவிக் கொடுத்தாள். அங்கு நடப்பது ஏதும் புரியாமல் அனிதா விழித்தாள். பேச்சை மெதுவாக ஆரம்பித்தாள் மரகதம்.

''நாங்க பிள்ளைச்சாவடியில் சொந்த வீடு கட்டி வாழ்ந்தோங்கா. போன வருசம் எதுத்தவூட்ல ஒரு நாயீ, நாயி வளத்திச்சி. அந்த நாயின்னா இவளுக்கு ரொம்ப பிடிக்கும். அதனால் நாயப் பாக்க அடிக்கடி அங்க போவா இவ. அப்பதாங்கா... அந்த நாயி ஆசையக் காட்டி, இந்தப் பிஞ்ச கொதறிட்டான். அதுவும் மூள வளர்ச்சி இல்லாதவளப் போயீ... ஐயோ...'' தலையிலடித்துக் கொண்டு அழுதாள். ஒருநிமிடம் உறைந்து போய் உட்கார்ந்திருந்தாள் அனிதா.

''அந்தப்பாவிஎன்னபண்ணானோ.. இரத்தம் வழிய அழுதுகிட்டே வந்தாக்கா... அந்த நெலமயிலும் டாமிடாமின்னு சொல்லி, அந்த நாயி வேணும்னு அடம்பிடிச்சி அழுதாக்கா. நான் என்னா பண்ணுவன்? சொல்லுங்க. வேறவழி தெரியாமத்தான் இந்த நாய வாங்கிக் கொடுத்துட்டு, அத வளக்கத் தெரியாம அவஸ்தபடறேங்கா'' என்றவள் மீண்டும் அழத் தொடங்கினாள்.

இப்ப தலகீழா ஆயிடிச்சி அவ நிலமை. கோபத்துடன் திட்டியவளுக்குப் பரிதாபமும் கருணையும் பீறிட்டுக் கிளம்பியது.

அந்த நாயிப்பயல பற்றிய கோபமும் கொழுந்துவிட்டு எரிய,

''அந்த நாயிய சும்மாவா விட்ட?'' கடுங்கோபத்தோடு கேட்டாள்.

''என்னபண்றதுன்னுதெரியலக்கா.. யாருக்கும் தெரியக்கூடாதுன்னு நெனச்சி தான் இங்க வந்துட்டேங்கா'' தன் இயலா மையைச் சொல்லிக் கண்ணீர் வடித்தாள்.

என்ன ஆறுதல் சொல்வதென்று புரியாமல் தவித்தாள் அனிதா. பின் மரகதத்தின் தலையைத் தடவினாள். நடப்பது ஏதுமறியாமல் தன் நாயிடம் விளையாடிக் கொண்டிருந்த கயானாவைப் பார்த்துக் கையசைத்து எழுந்தாள். அந்தக் கயானாவும் சிரித்தபடி கையசைத்து 'பை' என்றாள்.

# அணங்கே அகிலம் வெல்




## மதிப்புரை

தமிழ்மொழியின் அழகுக்கு மென் மேலும் அழகு சேர்த்துக் காப்பது தமிழ் இலக்கியங்களே! எத்தனை நூற்றாண்டுகள் போனாலும், இளமை மாறாமல் இன்று வரை கோலோச்சும் தமிழன்னைக்கு பக்க பலமாய் கவரி வீசும் இலக்கியங்களைப் பார்த்தோமானால் கவிதைகளுக்கென்றே தனியிடம் உண்டு. கவிமகள் ஜெயவதி நித்தியானந்தனின் முதல் கவிதை நூலும் அப்படியான ஒன்றென சொல்லி மகிழலாம். ‘அணங்கே அகிலம் வெல்’ தலைப்பே, உள்ளடங்கும் காத்திரமான கவிதைகளுக்குக் கட்டியங் கூறி வரவேற்பதைக் காணலாம். இவரின் கவிதை வரிகளில் பெண்களுக்கான அறிவுரைகளும், விழிப்புணர்வைத் தூண்டும் வீரியமிக்க கருத்துகளும் விரவிக் கிடப்பதைக் காணக்கூடியதாக உள்ளது. இவரின் எழுத்து களில் நான் பாரதியைக் காண்கிறேன். பெண்களைப் பற்றிய ஆதங்கம் பெருந்தீயாக மூள்வதைக் காண்கிறேன்.

வாருங்கள், எரிதழலின் வெப்பச் சலனத்தில் புடம் போட்ட சில வரிகளை பக்குவமாய் ரசிப்போம்.

‘தன்னம்பிக்கை’ யின் சொற்கள் கொண்டு விற்போர் செய்கிறார் இப்படி...

‘வாய்ப்பு என்பது
வரமாகக் கிடைப்பதல்ல
வலியோடு போராடு
வானம் உன் வசமே’
‘நாளை எண்ணி
நகர்த்தாதே நங்காய்
நாணாய் இருந்து
நகர்த்திடு அம்பை’

‘கல்வி ஒன்றே
காட்டிடும் நற்கதி
செல்லும் வாழ்வில்
செதுக்கிடும் உள்ளொளி’

தொடுவானம் தூரமில்லை யென்றே கூறி

‘உழைத்து வாழ்பவனுக்கே
வாழ்வது சொந்தம்
ஊக்கம் கொண்டு
வாழ்வினைச் செதுக்கிடு’
முன்னேறிச் செல்ல’
என வழி காட்டுகிறார்.

திருத்தி எழுதுங்கள் (தே)வதைகள் வேண்டாமென்று எனும் கவிதையின் அத்தனை வரிகளும் சாட்டையாய் சொடுக்கிப் போக, எதை எடுப்பது எதை விடுவதென எனக்குள்ளே குழப்பங்கள். எழுச்சியூட்டும் கவிதைகள் பலவுண்டு ரசிக்க. எல்லாமே நூலாசிரியரின் கை வண்ணத்தில் நெய்யப் பட்டு நெக்குருக வைக்கின்றன.

அகிலம் வெல்வாள் இவ்வணங்கு. தமிழுலகு போற்றும் நன்னூல்கள் பல இலக்கியத்துக்காய் படைக்க, இவரின் எழுத்தாணி நிமிர்ந்தெழட்டுமென நல் வாழ்த்துக் கூறுகிறேன்.

- தமிழமின்

# அவளது காதல்

எங்கிருந்தோ வந்த நீ
என்னைப் பார்த்த
ஒரு நொடியிலேயே,
உன்மீது காதல்
கொண்டேனெனக் கூறிவிட்டாய்..

எதிர் பதிலை எதிர் பார்த்து
என் கண்களை நோக்கும் உனக்கு
என்ன பதில் சொல்ல பதட்டத்தில்
பதைபதைக்கிறது என் உள்ளம்...

உன்னைப்போல் அவ்வளவு தைரியம்
எனக்கு இல்லை, பட்டென்று சொல்லிவிட

வடதுருவம் தென்துருவத்தை
ஈர்ப்பது போல் என்னை ஈர்க்கிறது
உன்னுடைய பேச்சு,
காரணம் இன்றி நீ கூறுவதை எல்லாம்
ரசிக்கிறது என்னுடைய மனது..

நானே வாயடைத்து நிற்கும் வண்ணம்
அழகிய கவிதையாய் வர்ணித்து விட்டாய்

இவை எல்லாம் பிடிக்கிறதா?
பிடிக்கவில்லையா? என்று
என் மனம் படபடக்க,
என் இருதய ஓசையோ
என் காதில் கேட்கிறது,
என்ன செய்ய?
இவை எல்லாம் என் வயதின் கோளாறு..

இருந்தும் உனக்கு தெரியுமா?

காக்கை, குருவிப்போல்
சூரியனை பார்க்கும் முன்னே
கண்விழித்து, சக்கரத்தை
காலில் கட்டிக்கொண்டு
ஓயாமல் உழைத்துக்கொண்டிருக்கிறது,
இரு ஜீவன்கள் எனக்காக...

நான் பிறந்த அடுத்த கணமே,
அவர்களுக்கும் ஒரு வாழ்க்கை
இருக்கிறது என்பதை கூட மறந்து,
எனக்காகவே
ஓடிக்கொண்டிருக்கிறார்கள்..

அனலாய் கொளுத்தும் வெயிலில்,
கைகளில் மீண்டும் முள் குத்த
இடம் இல்லையே என்று
முள்ளே வருந்தும் அளவுக்கு
கைமுழுவதும் காயங்களுடன்
கருவேலம்முள் வெட்டி,
இரவு பகல் பாராது உழைத்து,
என் வாழ்க்கையை பற்றி
ஆயிரம் கனவுகாணும் அவர்களுக்கு
உன் ஒரு நொடி காதலையா
நான் பரிசாக கொடுக்க வேண்டுமென்று
மனம் வருந்த கூறினாள் !

**த. கவிதா தாமரைச்செல்வன் (எ) கவிபாரதி,**
பிச்சாண்டாம் பாளையம்

## ஹைக்கூ

தணியாத் தாகத்தால்
திசைமாறும் பறவை
வறண்ட நிலையில் ஆறு.

தொடரும் மழை
வீட்டுக்குள் வரும் நீரில்
அலட்சியத்தின் வாடை.

கல் உடைக்கும் சிறுமி
திசையெங்கும் சிதறுகிறது
இருண்ட எதிர்காலம்.

தொடர்ந்து வந்த நிழல்
மெல்ல விலகும் தருணம்
திசையெங்கும் ஒளி.

அந்தி வானம்
சூரியக்கதிர்களால் சிவக்கிறது
குழந்தையின் முகம்.

**ச. கோபிநாத்**
சேலம்

# கனவுகள்

வறுமைக் கோட்டின்
மத்தியில் வாழ்வொன்றை
நாடி காத்திருந்தாள்
கன்னி யவள்

மலர்ந்த ஒரு பொழுதினில்
கனிந்ததோர் வாழ்வு
கற்பனைகளும் கனவலைகளும்
கரையேறின ஓர் நாள்.

பொறுத்திருந்த பொழுதுகள்
பொன்னாய்
விடிந்ததென
களித்தது அவள் மனம்.

நாட்கள் முன்னேக
கொண்டவன் எல்லைக்
கோடுகள் கொஞ்சம்
கொஞ்சமாய்
சுருங்கித் தான் போயின.

அன்பும் அரவணைப்பும்
அதிகமாகவே
தூரமாயிற்று.

ஊண் உடையில்
குறைவில்லை
உற்றம் சுற்றம் வருகைக்கோ
அனுமதியில்லை.

அண்டை அயல் உறவுகளுக்கும்
உத்தரவில்லை
அதிகாரம் எதிலும் பஞ்சமில்லை.

விடிந்த பொழுதுகள்
ஒவ்வொன்றும்
விடியாபொழுதாய்
மனதின் பாரங்களை
இறக்கக் கூட நேசங்களின்
நெருக்கமில்லை.

சிந்தை மகிழ கண்ட
சிறப்பான வாழ்வு
சிதறியதை எண்ணி
விழியோரங்கள்
வற்றுவதுமில்லை.

செல்வமும் சொகுசும் சேர்ந்திருந்தும்
கம்பியில்லா சிறை வாழ்வு
மீண்டெழ முடியாத
இல்வாழ்வு.

நல்வாழ்வுக்கேங்கி
சுகம் பெறக் காத்திருந்தும்
இல்லாது மறைந்ததே
இனிதான வாழ்வொன்று
காத்திருந்து பெற்றதெலாம்
கனவாய் ஆனதே

**லரீபா பதுர்தீன்**
கலேவெல, இலங்கை

## சொல்லும்செயலும்

ஒழுக்கம், நேர்மை குறித்து
புதிதாகப் பணிக்குச் சேர்ந்த
அலுவலர்களுக்கு
ஒரு மணிநேரம்
வகுப்பு எடுத்து விட்டு
தனியார் நிறுவனம்
பரிசாக வாங்கிக் கொடுத்த
மகிழ்வுந்தில் அமர்ந்து
அன்றைய ஆசைநாயகியைச்
சந்திக்க அவர்தம்
இல்லம் விரைந்தார்
உயர் அதிகாரி!

**- பா.சக்திவேல்**



# பாய்கடை பிரியாணி


## நாகை ஆசைத்தம்பி
கோவை




நாகூர் தர்காவுக்கு போய்ட்டு ரோட்டை கிராஸ் செய்யும்போது பாய் கடை பிரியாணியும் தால்ச்சாவும் மூக்கில் நுழைந்து வயிறை வாட்டியெடுத்தது... பிரியாணின்னாலே அது பாய்கடை பிரியாணிதான் என்ன ஃபார்முலா பயன்படுத்துறாரோ தெரியல மூக்குல நுழையும் வாசம் நாக்குல தண்ணி வர வைக்குது,,,

மனசும் கேக்கல. சரி ஒரு பிளேட்டு சாப்பிடலாமுன்னு போயி சாப்பிட்டேன். குறைவா இருந்தாலும் கொடுக்குற காசுக்கு நிறைவா இருந்தது. ஆகூரில் பாயிக்கடை பிரியாணி ரொம்ப பிரசித்தம். மதியம் மட்டும்தான் கிடைக்கும் வாடிக்கையாளர்கள் வரிசையில்தான் நிற்பார்கள். பாயும் நல்லவர்தான். சிலபேராட்டம் கூட்டம் அதிகமானால் அளவை கம்மி பன்றது கிடையாது. நான் சாப்பிட்டுவிட்டு கை கழுவினேன். மனசு சொன்னது “டேய் உன் பொண்டாட்டி வீட்ல வெறும் ரசம்சோறு தினமும் திங்கிறா ஒரு நாளைக்கு அவளுக்கு வாங்கிக்கொடேன்டா” மனமிருக்கு பணமில்லையே என்ன செய்றது?

பாயிக்கிட்ட தயங்கியப்படியே கேட்டேன். “பாயி ஒரு பிரியாணி பார்சல் கொடுங்க... நாளைக்கு வரும்போது காசு தரேன்”

“அடா கஸ்டமருக்கு பத்தாதுப்போல... உனக்கு பார்சல் வேணுமா கொஞ்சம் இரு பாக்கலாம்”

பாயி நல்லவருதான் நான் எப்படியும் வாரத்தில ஒரு தடவையாவது வந்திடுவேன். பாயி கடை நமக்கு புதுசு

இல்ல. அதனால கொடுப்பாரு நேரம் ஆக ஆக கூட்டம் களை கட்டியது பாய் நம்மல கவனிக்க நேரமில்ல; வியாபாரத்தை கவனித்துகொண்டு இருந்தார்.
சரி இப்போ ஒன்னும் ஆகாதுன்னு புறப்பட தயாரானேன். கடை வாசல்படியை விட்டு இறங்கினேன்.

''ஏய் கண்ணா... பொண்டாட்டிக்கு பார்சல் கேட்டியே வாங்காமல் போறே...'

''கூட்டம் சாஸ்தி இருக்கே பாய் அதான்'' ன்னு தலையை சொறிந்தேன்.

''அடா போப்பா அந்த கல்லாப்பெட்டிக்கு பக்கத்தில ஒரு பார்சல் இருக்கு பாரு அத எடுத்துட்டு போ''

எனக்கு என்ன சொல்வதென்றே தெரியல ''ரொம்ப நன்றி பாய்''

''சாப்பிடுற சாப்பாட்டுக்கு எதுக்குப்பா நன்றி அல்லாஹ் இந்த பிரியாணி இன்னைக்கு உன் மனைவிக்குன்னு எழுதிவிட்டான் அதனால்தான் உனக்கு கெடச்சிருக்கு போ... போயி சந்தோசமா சாப்பிடச்சொல்லு ஆனா காசு கரைக்ட்டா நாளைக்கு கொடுத்திடனும். இது எனது சம்சாரத்துக்காக வச்சிருந்தேன் அவதான் தெனமும் சாப்பிடுறாளே
நீ எடுத்துட்டு போ''
எனக்கு நெகிழ்ச்சியா இருந்தது.

நமக்கானது நமக்கு கெடைக்காதுப் போகாதுப்போல... பாய் நல்ல பிரியாணி மட்டும் கொடுக்கல நம்பிக்கையையும் கொடுத்தார்.

கையில பிரியாணி பொட்டலத்தோடு மனசில மனைவி சிரிப்பு சத்தம் கேட்பதை ரசித்துக்கொண்டே கனவோடு வீடு நோக்கி விரைந்தேன். அடுத்த வெள்ளிக்கிழமை நாகூர் தர்காவுக்கு வரும்போது கண்டிப்பா பாயிக்கு பணம் கொடுத்திடனும் என்ற வைராக்கியத்தோடும்கூட... ■



# உலகம் நம் உள்ளங்கையில்

## தன்முனைப்பு தொடர் – 2

# மனம் என்றோர் மாயாவி

மனதின் ஆற்றலே வாழ்க்கையில் சாராம்சம் என்கிறார் கிரேக்க தத்துவ ஞானி அரிஸ்டாட்டில். அப்படிப்பட்ட மனம் என்றால் என்ன, மனது என்று ஒன்று உள்ளதா, அப்படி என்றால் அந்த மனது எங்கு உள்ளது என்கிற அனைத்து கேள்விகளுக்கும் நமக்கு விடை தெரிய வேண்டும். மனது என்பது இதயம் என்கிற உடல் சார் உறுப்பா இல்லை வெறும் உருவகமா. நாம் இதைப்பற்றி சற்று சுயமாக சிந்தித்து உணரும் போது, நமக்குள் ஒரு தெளிவு பிறந்து இதற்கான விடை கிடைக்கும், அந்த முயற்சியை இந்த பகுதி இரண்டு உங்களை கொண்டு செலுத்தி உணர வைக்க முயற்சிக்கிறது.

மூளை என்றால் என்ன, எண்ணங்களின் தொகுப்பான சிந்தனையின் நிகழ்வுகள் மனித மூளையில் நிகழ்வுறும் செயல்பாட்டிற்கும் மனது என்கிற இதயத்திற்கும் என்ன தொடர்பு. இதற்கெல்லாம் அறிவியல் பூர்வமாக பதில் கிடைக்கும் போது நாம் மனதை முழுமையாக உணர்ந்து கொள்ள முடியும். அதன் மூலம் நம் வாழ்வியல் பயணத்தில் உண்டாகும் வெற்றி தோல்விகளை எப்படி சரி சமமாக கையாள வழி வகைகள் கிடைக்கும்.

நம் வாழ்வியலின் வெற்றி தோல்விகள் அனைத்தும் இந்த மனம் எனும் சிந்தனை சார் உருவகத் தளத்திலே செயல் ஆக்கம்கொண்டுநடைபெறுகிறது.எனவே நாம் சிந்திக்கும் ஆற்றல் பெற்ற மனிதர்கள் என்றால், நாம் நிச்சயம் நம் மனது பற்றி அறிந்தும், தெரிந்தும், உணர்ந்தும் கொள்ள வேண்டும். அப்படி உணர்ந்து கொண்டால், நாம் நம் வாழ்வியல் திறன்களை வளர்த்துக்கொள்ள முடியும்.

இதனால் நம் வாழ்வியல் வெற்றி தோல்விகளை நாமே ஆராய்ந்து, நாமே நமக்குள் நம்மை என்றும் சம நிலைப்படுத்தி கொண்டு எப்பொழுதும் மகிழ்ச்சியாக (Bliss) வாழ முடியும். இதன் மூலம் நாம் நம் வாழ்க்கையை இன்பம் மற்றும் துன்பம் என்கிற இரு எதிர் எதிர் காரணிகளிடம் இருந்து நம்மை விலக்கி என்றும் நடு நிலை நிலையில் நம் வாழ்க்கையை இலகுவாக வழி நடத்திச் செல்ல முடியும். மேலும், பரபரப்பு (Anxitey), கவலை (Sadness), பயம் (Fear), மன அழுத்தம் (Stress) மனச் சோர்வு (Mental Fatigue), மனச் சிதைவு (Schizophrenia) என்கிற மன நோய்க்குள் அகப்பட்டுக்கொள்ளாமல் நாம் நம் வாழ்வியல் உரிய தேவைகளையும், உயரிய இலக்குகளை (Life Achivements)





## பேராசிரியர் நா அருணாசலம்

அடையவும் இது வழி வகுக்கும். இது தவறும் பட்சத்தில் தோல்வி என்கிற ஒரு தற்காலிக இயல்பியலில் நாம் நம்மை தொலைக்காமல், நம்மை மீட்டு எடுத்து வெற்றிக்கான மாற்று வழியை தேர்ந்து எடுக்க இது பெரிதும் உதவும்.

இன்றைய நவீன மனம் பற்றிய உலகியல் கோட்பாடுகள், அறிவியல் அடிப்படையிலான மூளை பற்றிய புரிந்து கொள்ளலின் அடிப்படையில் உருவானவை. எனவே இங்கு அறிவியலின் அடிப்படையில் மூளையுடன் தொடர்புடையது இந்த மனம் என்கிற ஓர் உருவகம் என்பதை நாம் உணர்ந்து கொள்ள வேண்டும். எனவே மனம் என்பது உளவியலின் ஒரு தோற்றப்பாடு ஆகும்.

எல்லா மனித உடலிலும் மனம் என்ற ஓர் உருவகம் ஒன்று இருக்கிறது. பிறப் பில் வெற்றிடமாக இருக்கும் இந்த மனம் கொஞ்சம் கொஞ்சமாக அறிவு (Knowledge), திறமை (Skill), விருப்பம் (Will), அன்பு (Love), பாசம் (Affinity), உணர்வுகள் (Feelings) என்று பலவற்றால் நிரப்பப்படுகிறது. மனம் என்கிற ஓர் உருவகம் இருப்பினும், இதன் செயல்பாடுகள் மனித மூளையிலே நடைபெறுகிறது என்பதே அறிவியல் உண்மை ஆகும். மனம் என்பது இதயத்தில் காணப்படுவதாக பலர் கூறினாலும் இது அறிவியல் உண்மை இல்லை. மனமானது மூளையுடன் தொடர்புடையது. நாம் நமது ஐம்புலன்களால் (Sensory Organs) உணர்பவற்றை மூளை தனக்குள் சிந்தித்து அதை மனதின் செயல்களாக வெளிக்கொண்டு வருகின்றது. மனம் மனித மூளையுடன் சம்பந்தப்பட்டது என மூளை நரம்பியல் ஆய்வுகளில் நிரூபிக்கப் பட்டுள்ளன.

சிந்தித்தல் என்பது மனித மூளையில் முதன்மையாக நடைபெறும் ஓர் அடிப்படைச் செயல் ஆகும். இதை அறிதிறன் வழிமுறை (Cognitive Process) என்று கூறுவர். சிந்தித்தலின் ஊடாக எண்ணங்கள் அல்லது சிந்தனைகள் உண்டாகின்றன. இந்த மனித எண்ணங்கள் மனித செயற்பாடுகளில் பல விதமாக வெளிப்படுகின்றன. சிந்திப்பதும் ஒரு செயற்பாடு ஆகும். அறிவியலும் இது வரை சிந்தித்தல் என்றால் என்ன என்று ஒரு முழுமையான ஆய்வு முடிவுகளை அளிக்கவில்லை. ஆனால் மனம் பற்றிய கோட்பாடுகள் பல நிருபிக்கப் படாமல் அவை சித்தாந்தங்களாகவே வெறும் விவாதப் பொருளாகவே இன்னும் இருந்து வருகின்றன.

சிந்தித்தல் என்பது முதன்மையான ஓர் மனித அகச் செயற்பாடு என்பதால்,

அதை புறவய நோக்கில் விளக்கி நிரூபித்து சொல்வது என்பது கடினமான ஒன்றாகவே இருந்து வருகிறது. இருப்பினும் மனிதர் எப்படி சிந்திக்கிறார்கள், மூளையின் எந்த எந்த பகுதிகள் எந்த எந்த வகையான சிந்தனைகளின் செயல்கள் நடைபெறுகிறது, சிந்திக்கும் பொழுது மூளையில் ஏற்படும் வேதியியல் நிகழ்வுகள் அல்லது மாற்றங்கள் என்ன என்ன என பல வழிகளில் சிந்தித்தல் தொடர்பாக தொடர்ந்து உலக அளவில் ஆய்வுகள் நடைபெறுகின்றன.

இப்படிப்பட்ட எண்ணங்களின் தொகுப்பான சிந்தனைக் செயல் களமான மனம் என்பது, 'நான்' (I) என்கிற 'என்னை' (State of Conscious) உணர்ந்திருக்கும் ஓர் உணர்வு நிலை ஆகும். 'நான்' என்கிற 'எனக்கு' எனக்குள் என்ன விருப்பங்கள் என்கிற எண்ணங்கள் எல்லாம் இணைந்த ஓர் பல்வகை கூட்டமைப்பே மனம் ஆகும். இந்த மனம் என்கிற செயல் நிலையை கொண்டு வர மனித உடம்பில் ஓர் ஊடகம் தேவையில்லை. அது மனிதருக்குள் இயல்பாய் நடக்கும் ஒரு உயிரி வேதி உடல் சார் நிகழ்வே ஆகும்.

'எனக்கு' என எண்ணுகையில் அது என்னைத் தாண்டி தானாகவே எனது உடலுக்குள் வந்து விடுகிறது. எனவே மனம் (Mind) என்பது, சிந்தனை (Thought), நோக்கு (Intention), உணர்ச்சி (Emotion), மன உறுதி (Determination), கற்பனை (Imagination) போன்றவற்றில் வெளிப்படுகின்ற அறிவு (Intellect) மற்றும் உணர்வுநிலை (Consciousness) சார்ந்த அம்சங்களின் தொகுப்பைக் குறிக்கிறது. மனத்தை 'நான் (Consciousness) 'எனக்கு (Mine Possessiveness)' இவற்றிற்கிடையேயான 'இடை நிலை இணைப்பு' (Interface) எனலாம்.

அறிவியல் அடிப்படையில், மனித செயல்கள் அல்லது உலகியல் நிகழ்வுகள் அனைத்தும் நம் ஐந்து புலன்கள் மூலமாக நம் உடலுக்குள் உள்ள மூளையை சென்று அடைகிறது. பார்த்தல், கேட்டல், சுவைத்தல், நுகர்தல் மற்றும் தொடுதல் என்கிற ஐந்து புலன் அறிதல் மூலமாக நம்முள் தூண்டப்படும் உந்து விசையானது நம் மூளைக்குத் தகவலைத் தருகிறது, அந்தத் தகவல் மூளையில் உருப்பெறுகிறது.

மனம் என்பது மனித அனுபவங்கள் மூலமும், உலக சமூக புற காரணிகள் மூலமும் மற்றும் நம்முடைய பரிணாம வாழ்வியல் பயணத்தின் நேரிடையான பெறுதல் மூலமும் வடிவமைக்கப்படுகிறது. எனவே ஒவ்வொரு தனி மனித மனம் மற்றவரிடம் இருந்து மாறுபட்டு அமைகிறது.

ஒரு பொருள் பற்றிய இந்த புலன் வழி அனுபவமே "இது" என்ற முப்பரிமாண படிவத்தை நமக்குள் உருவாக்கி அதற்கு அர்த்தத்தைத் தருகிறது. மனம் வெற்று இடமல்ல, மூளையின் ஏதோ ஒரு இடத்தில் முப்பரிமாணப் படிவம் பதிவாகியிருக்கும், அதுவே "மனதில் எதோ இருக்கிறது" என்பதை வெளிப்படுத்துகிறது. மனதின் முப்பரிமாணப் படிவங்களால் பார்த்தல் (Seeing), தொடு உணர்வுகள் (Touch), வாசனை (Smell), ஓசை (Sound), சுவைகளையும் (Taste) உருவமைப்பு செய்ய முடியும், இதை நாம் நம் கற்பனை மற்றும் கனவிலும் கூட இதனைச் செய்யலாம். மூளையின் பிற பாகங்களில் இருந்து உருவாகும் ஹார்மோன்களின் அடிப்படையில் மனதின் முப்பரிமாண படிவத்தின் உருவகங்களால் உணர்வுகள் மற்றும் மகிழ்ச்சி அல்லது துக்கத்தின் அளவுகளையும் நம்மால் உணர முடியும் சாத்தியக் கூறுகள் உள்ளன.

உடல் இயக்க செயல்பாடுகளைக் கொண்டு, மனம் என்னும் ஒர் ஆற்றல் இருப்பது புலனாகிறது. மனம் ஒரு தனிப்பொருள் இல்லை, மனமெனும் உளம் - வெளியிலிருந்து வரும் தூண்டல்களுக்கு ஏற்பத் துலங்கும் தொகுதியே மனம் என்பது உளவியல் கருத்து.

எனவே குறிப்பிட்ட ஒரு தூண்டல்-

துலங்கல் தொடர்பான செயல் முழுவதும் ஒரு மறிவினை அலகு (Reflex Unit) ஆகும். இவ்வாறு பல அலகுகள் மனதில் உள்ளன. இத்தகைய தூண்டல் - துலங்கல் செயல்களின் தொகுப்பே மனம் ஆகும் என்பது இக்கால உளவியல் கொள்கை. எனவே, ஒருவகை உடல் இயக்கச் செயல்பாடே - குறிப்பாக மூளை இயக்கமே - மனம் என உணரப்படுகிறது.

உயிரியல், நரம்பியல், மற்றும் உளவியல் வல்லுநர்கள் மனத்தை மூளையின் செயல்களினால் ஏற்படும் ஒரு நிகழ்வாகக் கருதி மூளை நரம்பமைப்பின் அடிப்படையில் மனத்தை விளக்குகிறார்கள். இதை நியூரல் கோரிலேட்ஸ் ஆஃப் கான்சியஸ்னஸ் என்று அழைக்கிறார்கள். மனமானது மூளையில்தான் தோன்றி செயல்படுகிறது என்பதற்கு நிறைய ஆதாரங்கள் இருக்கின்றன.

மனம் என ஒன்று தனியாக இல்லை - மூளையின் இயக்கமே மனம் எனப்படுகிறது. மனம் என்பது, உடலின் உள்ளே உள்ள ஓர் உள்ளுறுப்பு அன்று; மூளையிலிருந்து தோன்றும் ஒரு வகை இயக்கமே மனம் மூளை மனத்தின் தோற்றம் - அதாவது, மனம் தோன்றும் இடம், மூளையே என்பது உறுதியாகிறது என்கிறார் சுந்தர சண்முகனார் (2017).

மன மெய்யியல் என்பது மன-உடல் சிக்கல் என்கிற உடலுடன் மனதுக்குள்ள தொடர்பு பற்றியும், பௌதீக உடலுடன் மனதின் இயல்பு உறவு அற்றது என்கிற உண்மையையும், ஒரு குறிப்பிட்ட மனித மன நிலையின் இயல்பும் நனவு நிலையும் எப்படி சாத்தியம் ஆகிறது என்பதை விளக்குகிறது.

மன மெய்யியல் (Philosophy of mind) என்பது மனதின் இயல்பு (Nature of mind), மன ரீதியான நிகழ்வுகள் (Mental Phenomena), மனச் செயற்பாடுகள் (Mental Activities), மனப் பொருள் (Mental Substance), நனவு நிலை (Consciousness) மற்றும் பௌதீக உடலுக்கும், குறிப்பான மூளைக்கும் இவற்றுக்குமிடையேயான உறவு பற்றிக் விளக்கி கூறும் ஓர் பகுதியாகும்.

உளவியல் அறிஞர் சிக்மண்ட் பிராய்டு மன இயக்கத்தை உள்மனம் (Unconscious), இடைமனம், (Preconscious mind), புறமனம் (Conscious mind) என மூன்றாகப் பிரித்து, உள்மனம் என்னும் ஆரம்ப கட்ட கருத்தை முதன் முதலில் உருவாக்கினார். தொடக்கக் காலத்தில் உள்மனம், இடைமனம், புறமனம் என்பன மனதின் மூன்று பிரிவுகளாகத்தான் ஏற்றுக் கொள்ளப்பட்டது. ஆனால் என்றும் அமைதியற்று இயங்கும் மனதை மூன்று வகைகளாகப் பகுக்க கூடாது; அவை மன இயக்க நிலைகள் (Mental processes) என்றும் பிராய்டு கூறிச் சென்றார்.

**தற்பொழுது உலகம் முழுதும் ஏற்றுக் கொள்ளப்பட்ட மனதின் நிலைகள் பற்றி நாம் தெரிந்து கொண்டால்தான் நாம் நம் மனம் பற்றி முழுமையாக தெரிந்து கொண்டு மனதை நாம் நம் கட்டுப்பாட்க்குள் கொண்டு வர முடியும். இல்லை எனில் நம் நம் மனதின் இயங்கு நிலை போக்கில் போய் நாம் நம்மை இழக்கும் சூழல் உருவாகி விடும்.**

அந்த மனித மனமானது தன் உயிரின் படர்க்கை நிலையில், மனம் இயங்கும் நிலைகளை மூன்றாகப் பிரித்துக் காணலாம். அதாவது மேல் மனம் அல்லது புற மனம் (Conscious Mind), நடு மனம் அல்லது உள் மனம் அல்லது இடை (Sub Conscious) மற்றும் அடி மனம் (Unconscious) என்று மூன்று நிலைகளாகும். இதில் அடி மனத்திற்கும் புற மனத்திற்கும் தொடர்புபடுத்தி இருப்பது நடு மனமாகும். இதில் நடுமனம் தான் நமக்கு மிக மிக மிகவும் முக்கியமானது ஆகும்.

உணர்தல், துய்த்தல், கணித்தல், சிந்தித்தல், பதிவுகொள்ளல் என்ற ஐவகைச் செயல்களைக் கொண்ட மனமானது தேவை, பழக்கம், சூழ்நிலை, சந்தர்ப்பம்

# மலையகத்து மண்வாசனை

மலையகத்து மண்வாசனை
காவு கொண்டதென்னை
மங்கை இவள் மனதை
உரசும் தென்றல்தனை
தேயிலை தோட்டத்தில்
தெம்மாங்கு பாடுமென்னை

தெவிட்டாத ரசனை
உள்ள பெண்ணை
தாலாட்டு பாடிடும்
தேயிலை செடிகளின் கீதை
தெரியாமலே இயற்கை மீது
எனக்கொரு போதை

தேவதையோடு ரகசியம்
பேசிடும் வண்டுகள்
தேனீயோடு காலை
உரசிடும் நண்டுகள்
நிறைமாத
பெண்ணன்றோ வாழை
நிமிர்ந்து நிற்கும்
அழகே தாழை

கண் சிமிட்டும்
தூரத்து பச்சை மேனி
காதல்வயப்பட்ட
அழகிய அதிசயக் கன்னி
ஏவல் செய்தது என் விழிகள்

எழில் கொஞ்சும்
மலரின் மொழிகள்

குயிலிசை பாட்டோடு
குன்றத்துகுடில்கள்
குமரியின் ஆனந்தமே
ஒவ்வொரு விடியல்கள்

**மதீரா**
RJ Dubb
ARTIST NEWS READ

இவற்றால் புலன்கள் வாயிலாகத் தொடர்பு கொண்டு செயல் புரியும் போது அச்செயல் பதிவுகள் அதனதன் அழுத்தத்திற்கேற்ப மேல்மனம் அல்லது புறமனம் நடுமனம், அடிமனம் என்ற மூன்றிலும் பதிவுகளை ஏற்படுத்துகின்றன.

அன்றாட வாழ்க்கைக்கு மிக அவசியமான அனைத்து செயல்களும் மேல் மனம் அல்லது புற மனதில் மன இயக்கங்களின் புற மன இயக்கமாக நடைபெறுகிறது. ஐம்புலன்களின் தூண்டுதல்களான பார்வை, செவியுணர்ச்சி, நுகர்ச்சி, தொடுதல், சுவைத்தல் முதலிய மனித உணர்வு செயல்கள் அனைத்தும் வெளி மன இயக்கத்தில் உட்பட்டு நடைபெறுகிறது. இவை மனதில் சிறிய அளவிலே பங்களிப்பாய் நிகழ்கிறது.

இங்கு நாம் முக்கியமாக உணர வேண்டியது ‘‘நாம் என்கிற நாமை: உருவாக்கப்படுத்தி ‘மனித ஆளுமை என்கிற சுயத்தை’ ஒவ்வொருக்கும் அடையாளமாக தருவது’’ நமது உள் மனமே ஆகும். எனவே உங்களின் உள் மனமே நீங்கள். இந்த உள் மனதில்தான் எண்ணங்கள் தோன்றி சிந்தனைகள் என்கிற தொகுப்பு உருவாகிறது. இது புலன் வழி தூண்டல் துலங்கல் என்கிற அனுபவத்தின் அடிப்படையில் நிகழ்கிறது. இந்த உள்/இடைமன இயக்கம் செயல்களையும் நிகழ்ச்சிகளையும் செய்திகளையும் சிந்தித்தல் மூலம், புற/வெளி மனத்திற்கு எடுத்துச் சென்று உணரவைத்து நம்மை இயக்குகிறது.

வெளி மனதின் மூலம் நாம் பெறுகிற அறிவை (Kmowledge) இந்த உள் மனமே புரிந்துகொண்டு (Understanding) நமக்குள் மாற்றத்தை (Learning) உண்டாக்கி அனுபவம் என்கிற முப்பரிமாண உருவகத்தை பதிவு செய்கிறது. இதன் பின் நம் பயன்பாடுகளையும் (Application), பகுப்பாய்வுகளையும் (Analysis) உள் மனமே அடுத்த படி நிலைகளாக செயல்படுத்திக் கொள்கிறது. இதன்

மூலமே நாம் திறன்கள் (Skills) என்கிற வாழ்வியல் செயல் பண்புகளை (Traits) பெறுகிறோம். இந்த தனி மனித செயல் பண்புகளே ஒவ்வொருவரின் வெற்றி தோல்விகளை நிர்ணயம் செய்கிறது.

எனினும் உள் மனம் தான் மனிதரின் அன்றாட செயல்களுக்கும் நடத்தைக்கும் (Behaviours), அவர்களின் பல கருத்துக்களுக்கும், பிறருடன் பழகும் சமூக உறவுகளுக்கும் அடிப்படைக் காரணமாக அமைகிறது.

மனிதருள் பண்பியல் தொகுப்பு (characters) வளரும் சமயத்தில் ஏற்படும் செயல்பாட்டினால் பலவித அனுபவங்களும், இன்பம், துன்பம், ஏமாற்றம், மனநிறைவு முதலிய நிகழ்வு களும் மற்றும் அன்பு, மகிழ்ச்சி, திருப்தி, கோபம், வெறுப்பு, ஏமாற்றம், பயம் போன்றவைகள் ஆகியவை தோன்றுகின்றன.

இவைகளில் மறுக்கப்படும் அல்லது ஒடுக்கப்படும் உணர்ச்சிகள் உள் மனதில் புதையுண்டு விடுகின்றன. இவ்வனுபவங்களும், உணர்ச்சிகளும் அவ்வப்போது புறமனதிற்கு எட்டுவதன் விளைவாகவே மனிதனின் அன்றாட நடவடிக்கைகளும், கருத்துகளும், குறிக்கோள்களும் உருவாகின்றன. பார்த்த மாத்திரத்தில் எந்தக் காரணமுமின்றி ஒருவரை வெறுப்பதற்கோ விரும்புவதற்கோ காரணமாக அமைவன இப்புதையுண்ட எண்ணங்கள்தான்.

`அடிமனம் என்பது நாம் அறிந்து கொள்ள முடியாத ஆனால் சிலசமயங்களில் நம் உள் மற்றும் வெளி மனதை மீறி நம்மை இயங்கச் செய்யும் புலப்படாத மனம் ஆகும். இதைப் பற்றி இனி வரும் பகுதிகளில் நாம் தெரிந்து கொள்வோம்.


ஆன்மிக ரீதியாக பார்த்தோமேயானால் ஆன்மா என்பதே மனமாக பார்க்கப்படுகிறது. மனச்செயல்களினால் உணரப்படும் வாழ்வில் அனுபவங்களையே “மனது” என்கிறது பௌத்தம்.

இங்கு மீண்டும் நாம் முக்கியமாக உணர வேண்டியது ‘‘நாம் என்கிற நாமை: உருவாக்கப்படுத்தி ‘மனித ஆளுமை என்கிற சுயத்தை’ ஒவ்வொருக்கும் அடையாளமாக தருவது நமது உள் மனமே ஆகும்.’’ எனவே உங்களின் உள் மனமே நீங்கள். இந்த உள் மனதில்தான் எண்ணங்கள் தோன்றி சிந்தனைகள் என்கிற தொகுப்பு உருவாகிறது

உடல் என்பது ஒரு பொருள் அதில் ஆற்றல் என்பது உயிர் ஆகும். மேலும் இவை அனைத்திற்கும் இயக்கம் என்பது மூளையின் செயல்பாடான மனமாகும். மனம் என்பது ஒரு அனிச்சை செயல் அதை நீட்சை (Universe Plugin) செய்து, உங்கள் வசம் கொண்டு வந்து வாழ்வியல் திறன்கள் (Life Skills) மூலம் வெற்றிகளை அடையவும், அடைந்த வெற்றிகளைத் தக்க வைத்து கொள்ளவும், தோல்விகளைத் தவிர்க்கவும், இல்லை தள்ளிப் போடவும், அதை வெற்றிகளாக மாற்றவும், இந்த உளவியல் சார் தன்முனைப்புத் தொடர் ஒரு புதிய பங்களிப்பாய் உங்களோடு பயணிக்க இருக்கிறது. பல தன்முனைப்பு தொடர்கள் கோட்பாடுகளை தழுவியே இதுவரை பலர் கொடுத்து இருந்தாலும், இது தமிழில் முழுமையான உளவியல் சார் தன்முனைப்புத் தொடராய் பரிணமிக்க எடுத்திருக்கும் கன்னி முயற்சி ஆகும்.

மனித முன்னேற்றத்திற்கான அறிவு சார் மென் மற்றும் வாழ்வியல் திறன்களோடு சந்திப்போம்.

தொடரும்...



# என்னை இப்படியே...

என் பிடிவாதங்களை
தளர்த்த சொல்கிறார்கள்!
பொறுப்பாய் வாழச் சொல்கிறார்கள்!
இப்படித்தான் வாழ வேண்டும் என்று
பெரும்பான்மை வாக்குகளைப் பெற்ற
சில விடயங்களை எனக்குள்ளும்,
அன்பின் பெயரில்
திணிக்க முயல்கின்றனர்!

என்னை இயல்பாய் வாழ விடுங்கள்,
அதுவே எனக்கு
தேவையாய் இருக்கின்றது!
பசிக்கும் போது உணவுண்பதே இயற்கை!
அலாரம் வைத்து சாப்பிடுவதால்
அந்த உணவின் மீதான பிடிப்பே
போய்விடுகின்றது என்பதனை
எவ்வாறு புரியவைப்பது!

எனது ஆசைகளும் எண்ணங்களும்
உங்கள் மட்டில் வெறும்
வார்த்தையாக  இருக்கும் போது,
உங்கள் எண்ணங்களையும்
அபிப்பிராயங்களையும் கூறி
அதன்படி வாழச் சொல்வதை
உங்களை போலவே எனக்கும்
மறுக்க முடியும் என்பதை
புரிந்துகொள்ளுங்கள்!

அயல் வீட்டாரின் திருப்திக்காக
என்னால் ஒரு பிம்பத்தை
உருவாக்கி வைக்க முடியவில்லை!
நான் முயற்சிக்கவும் இல்லை;
எங்கள் வீட்டில் அடுப்பெரிந்தால் தானே
நாங்கள் உண்ணுகின்றோம்!

எப்படி இவ்வாறு
பதட்டமில்லாமல் இருக்கின்றாய்
என கேட்கின்றீர்கள்!
நானும் தானே கேட்கிறேன்,
எதற்காக இவ்வளவு பதட்டம்
உங்களை தொற்றிக் கொண்டுள்ளது!
எதற்காக இவ்வளவு
அவசரமாக சுற்றிச் சுழல்கிறீர்கள்!
எதற்காக உங்களை தவிர
அனைவரையும் திருப்திபடுத்த
இவ்வளவு சிரத்தை எடுக்கின்றீர்கள்!

மின்விசிறி சுழலும்
விட்டத்தை பார்த்து கொண்டே,
கொஞ்சம் அமைதியாய்
உங்களால் சிந்திக்க முடிகின்றதா!
சாய்வு நாற்காலியில் ஓய்வெடுத்த படியே
ஒரு இஞ்சி போட்ட தேநீரை
ரசிக்க முடிகின்றதா!
ஒரு புத்தகத்தின் வாசனையில்
மனம் லயித்து மூழ்க முடிகின்றதா!
கட்டிலில் படுத்துக்கொண்டே
கொஞ்சம் அரட்டையடிக்க
நேரமிருக்கின்றதா!

பகலுணவு முடித்து விட்டு
இரவுக்கு என்ன சமைப்பது என
மூளையை நச்சரிக்காமல்,
ஒரு கிழங்கும் போட்டிருந்தால்
கருவாட்டுக் குழம்பு இன்னும்
ருசித்திருக்குமே என
மெச்சிக்கொள்ள முடிகின்றதா!

அற்பமாய்,
இந்த நான்கு கேள்விக்கும்
என்னை முறைக்காதீர்கள்!
இந்த விடயங்கள் கூட என்ன
முழுதாய் திருப்தி படுத்துகின்றது!
கொஞ்சம் தண்ணீர் குடியுங்கள்
உங்களால் ஜீரணிக்க முடியாத
உண்மை தான் இது!

ஆம்!
உங்களை திருப்தி படுத்த
பொய்யாய் ஒரு பிம்பத்தை
ஒரு நாளும் நான் தரப்போவதில்லை!
உங்கள் எண்ணங்களை மதிக்கிறேன்,
ஆனால் ஏற்றுக்கொள்ள முடியாது!
உங்களால் முடிந்தால்
என்னை இப்படியே
நேசித்து விடுங்களேன்!

**- அப்ஃரா ஜமீல்** Afra Jameel



**பஹ்ரியா பாயிஸ்**
கொடேகொடைஹெம்மாதாகம
இலங்கை

# தொலைபேசியும் குழந்தைகளும்

குழந்தைகளுக்கு வழிகாட்டியும் நாமே.. வழிகோட்டிகளும் நாமே... அலை பேசி என்பது உயிரற்ற பொருளாக இருந்தாலும் அது உயிருள்ளவைகளுடன் தொடர்புடைய பொருளாக காணப்படு கின்றன. இன்றைய காலத்தில் அலை பேசி பாவிக்காத வீடுகளே இல்லை என்று கூட கூறலாம்.

பொதுவாக நம் வீட்டில் அலை பேசி பயன்படுத்தாவிட்டால் குழந்தை களுக்கு அதை பற்றிய அறிவு 75/100 இல்லை என்று கூறலாம். சிறு குழந்தைகள் எங்களிடம் இருந்துதான் அந்த அஃறிணைப் பொருளை அலை பேசி என கற்றுக் கொள்ளிறார்கள் அதுவும் நாம் அவர்களுக்கு அதை தொலைபேசி என அறிமுகப் படுத்துகின்றோம்.

இன்றைய நவீன உலகிலே குறிப்பாக நான்கு வயதுக்கு உட்பட்ட குழந்தைகளை தொலைபேசியில் காணொளி காட்டி கொண்டுதான் உண வூட்டுகிறார்கள்.

தாய்மார்களின் பெருமையாய் கூறும் விடயம்.. "எங்கட புள்ள வீடியோ பார்த்த கொஞ்சம் திண்ணுற, இல்லாட்டி சாப்பாடு இறங்குறது இல்ல"

இதற்கு காரணம் நாமேதான்.. பெருமையாய் கூறும் தாய்மார்களுக்கு அதன் விளைவுகள் தெரிவதில்லை போலும்...

இதனால் பலவிதமான பிரச்சினை கள் சிறுவயதில் ஏற்படுகின்றன அது மாத்திரமின்றி அதன் தாக்கம் முதுமை வரை இருக்கின்றது

- ☐ குழந்தைகளின் மூளை வளர்ச்சி தடைப்படும்
- ☐ கண்ணில் பலவிதமான நோய்கள் ஏற்படல்
- ☐ குழந்தை வளர்ச்சி விருத்தி இயக்கத்தின்மை தடைப்படல்
- ☐ தொலைபேசிக்கு அடிமைப்படல்
- ☐ உள நோய்கள் ஏற்படல்

இவ்வாறு பல விதமான நோய்கள் ஏற்பட கூடிய வாய்ப்புக்கள் அதிகம்.

உணவில் மாத்திரமல்ல கார்ட்டூன், சிறுவர் பாடல்கள், காணொளிகள் எது வாக இருந்தாலும் முற்றுமுழுதாக தவிர்த்து கொள்வது சாலச்சிறந்தது. உங்கள் குழந்தை களின் எதிர்காலத்தில் ஏற்பாடும் நோய்கள், பாதிப்புக்களில் இருந்து பாதுகாக்க உதவும்.

முனைவர் தமிழ்ச்செல்வியின்
நூறாசிரியம் - அகவல் நூலுக்கு
வாழ்த்துரை

செந்தமிழ்ச் சொற்கள் உன்னில்
செழிப்புடன் இருக்கக் கண்டேன்
அந்தநாள் நினைவைக் கூட
அழகுடன் வடிக்கக் கண்டேன்
தந்தநற் கவியெல் லாமும்
தயக்கமே அன்றி நூலில்
சிந்தியே வாச கர்முன்
சீர்பெற வாழ்த்து கின்றேன்
.
வாழ்வினைச் சொல்லும் போதும்
வளர்ந்ததோர் நாளில் உள்ளத்
தாழ்வினைச் சொல்லும் போதும்
தமிழ்மொழி யாலே உந்தன்
ஊழ்வினை சொல்லும் போதும்
உளமெலாம் பூக்கப் பூக்க
ஆழ்கடல் நீந்தி நீந்தி
அணிகளை வாசிக் கின்றேன்
.
இன்னமும் பலநூல் செய்வீர்
இயற்றமிழ் சொற்கள் கோப்பீர்
தன்னிலை எல்லாம் சொல்வீர்
தழைக்கவே அணிகள் செய்வீர்
மென்மையின் அழகெல் லாமும்
மிளிரவே தாளில் சேர்க்க
இன்பமாய் நான்ப டித்து
இயல்புடன் வாழ்த்து கின்றேன்

**தமிழ்நெஞ்சம் அமின்**
ஆசிரியர் தமிழ்நெஞ்சம்
பிரான்சு

குழந்தைகளுக்கு எதுவும் தெரியாது அவர்களை சரியானமுறையில் வழிகாட்டு வது நமது பொறுப்பில் தங்கியுள்ளது.*

இதுவரைகாலமும் மேற்குறிப்பிட்ட விடயங்களுக்கு உங்கள் குழந்தை அடிமை யாகி இருந்தால் எவ்வாறு இப்போது மீளுவதற்கான சில டிப்ஸ்கள்.

குழந்தை முன் வீட்டில் அலை பேசி பாதிப்பதை தவிர்த்துக்கொள்ளுங்கள்.

1. குழந்தைக்கு உணவூட்டும் போது படிப்பினையூட்டக்கூடிய கதைகளை கூறுங்கள். இயற்கையை காட்டுங்கள். சுற்றுப்புற சூழல் விலங்குகள் என்பதை காட்டுங்கள்.
2. தொலைபேசியில் நீங்கள் காட்டும் பாடல்களுக்கு பதிலாக நீங்கள் அவர்களுக்கு பாடல்களை சொல்லிக் கொடுங்கள்.
3. தொலை பேசி பாவித்தால் ஏற்படும் விளைவுகளை பற்றி விழிப்புணர்வு காட்டி கூறுங்கள்.
4. தொலைபேசியில் கழிக்கும் நேரத்தை செலவிட சிறுவர் புத்தகங்களை வாங்கி கொடுங்கள். புத்தகங்களோடு நேரத்தை செலவிட பழக்குங்கள்.
5. நீங்கள் தொலைபேசி பாவனை நேரத்தை குறைத்து நீங்கள் குழந்தை களோடு நேரத்தை செலவிடுங்கள்.
6. விளையாடுவதற்கு ஊக்கமளியுங்கள்.
7. அலைபேசியை கேட்கும் போது அதனால் ஏற்படும் விளைவுகளை அச்சமூட்டும் வகையில் கூறுங்கள்.
8. பெற்றோர் மாத்திரமின்றி வீட்டில் உள்ள மற்ற குழந்தைகளும் சிறு குழந்தைகள் முன் தொலைபேசி பாவிப்பதை முடிந்தவரை குறைத்துக் கொள்ளுங்கள்.
9. குழந்தைகளுக்கு எது சரி எது தவறு என்று நாங்கள் தான் சொல்லிக் கொடுக்க வேண்டும். பிஞ்சு மனங் களுக்கு எதுவும் தெரியாது.

**''விளைவுகள் வரும் முன் காப்போம்''**

# தலைக்கனம்

மனிதரைப்போல உருவமே கொண்டு
மண்ணுலகதனில் சில பேர்கள்
மற்றவர் வாழ்ந்தால் மனமெரிந்தழுவார்
மதிகெடு வார்த்தைகள் பேசிடுவார்!

பொறாமையில் வீழ்ந்து புழுங்கிடுவார்
போக்கிரித் தனமாய்ப் பிதற்றிடுவார்
தன்னால் இயலாக் காரியம் கண்டால்
தாங்கிட முடியாதவர் எரிவார்!

நமதுணவதனை நன்றெனப் புசிப்பார்
நன்றிகளென்பதை அவரறியார்
பழந்தமிழறிஞர் கூறிய வழிதான்
பலரும் போற்றும் பொன் மொழிதான்!

கூடவே இருந்து குழி பறிப்பார்
குள்ள நரியாய் மாறிடுவார்
தலைக்கனம் பிடித்து ஆடிடுவார்
தறுதலைப் போக்கை நாடிடுவார்!

பேயென அலைவார் பிறர் குறை
மொழிவார்
நாயெனக் குரைப்பாரென்னாளும்
நாறிடும் சமூகக் கேவலமதுதான்
நல்லவர் வாழ விடமாட்டார்!

எதிர்வருங் காலம் இயலாக் கூட்டம்
இல்லா தொழிந்து மறைந்திடுவார்
ஆற்றல்களுள்ளோர் அதி உயர்வாகி
அகிலம் புகழ வாழ்ந்திடுவார்!

இயலா நாய்கள் எதுவும் குரைக்கும்
இலட்சியப் பாதை தவறாதே
கழுதையின் ஒலிக்குக் காது
கொடுத்தால்
கடமைகள் செய்ய முடியாதே!

வெற்றியின் படியில் விரைந்துயர்ந்தேறு
வீழ்ந்திடும் தோல்விகள் மண்ணோடு
மலையென நின்று மனத்துணிவோடு
மறையவன் துணையால் நடைபோடு!

கலாபூஷணம்
**ஏ.ஸீ.அப்துல் றகுமான்**
(ஏரூர்க்கவிக்கோ)
இலங்கை.



# இந்திர இரவுகள்

திருவிழாக்களின்
இரவுகளுக்கு மட்டும்
ஆயிரம் கண்கள்

இரவு
வெப்பமானியின்
பாதரசம் போல
ஏற ஏற
குழந்தைகளின் குதூகலம்
கூடிக் கொண்டே போகிறது

ஆடி ஓடி விளையாடும்
குழந்தைகள் மட்டும்
தடுக்கி விழுவதே இல்லை

அப்படியே தடுக்கி விழுந்தாலும்
அடியேதும் படாத சூட்சுமத்தை
அம்மா சொல்லும்
'குழந்தைகளைப் பூமாதேவி
தாங்கிக் கொள்வாள்'
என்ற ஒற்றை வாசகத்தில்
விளக்கி விடலாம்

ஆடலும் பாடலும்
இல்லாத திருவிழா
ஊடலும் கூடலும் இல்லாத
காதலைப் போன்றது

கவிஞன்
கவிதையைக் கைவிட்டாலும்
கவிதை கவிஞனை
ஒருபோதும் கைவிடுவதில்லை
கவிதையும் தெய்வமும்
வேறு வேறு அல்ல
என் கண்மணி.

**- மு.ஆறுமுகவிக்னேஷ்**

# க்யூபல்

**- கார்த்தி டாவின்சி**

அன்றைய எங்கள் வகுப்பு தொடங்க வேண்டிய நேரம். கல்லூரியின் ஆசிரியர் வகுப்பறைக்குள் இன்னும் வரவில்லை. சில நாட்கள் தாமதமாக வருவதும் சிலநாட்கள் நேரத்திற்கு வருவதும் அவர் வாடிக்கை. மாணவர்கள் நாங்கள் பேசிக் கொண்டிருந்தோம். சிறிது நேரத்தில் ஆசிரியர் வந்தார். வணக்கம் முடிந்திருந்தது. வருகையை கணக்கெடுத்தார். உடனடியாக துறைத் தலைவருக்கு ரிப்போர்ட் செய்தார். பிறகு போர்டில் கொஞ்சம் எழுதினார். அவர் எழுதியதை வைத்தே அன்றைக்கு புதியப் பாடத்தை அவர் தொடங்க இருக்கிறார் என்று புரிந்துக் கொண்டேன். ஆனால் அப்போதைய கணம் போல இனி எனது நேரம் அமைதியான நேரமாக இருக்கப் போவதில்லை என்று அப்போது தெரியவில்லை.

அன்றைக்கான பாடம் பாகிஸ்தானின் ஒரு நாவல். முதல்முறையாக பாகிஸ்தான் போகின்றோம் என்று சிறு ஆவல் எனக்குள் எழுந்துவிட்டது. ஆசிரியர் எழுத வேண்டியதையெல்லாம் எழுதிவிட்டு எங்களிடம் திரும்பினார்.

"ஸ்டுடென்ட்ஸ், இந்த வேர்ட எப்படி படிப்பிங்க?" அவர் சொன்னதும் எங்களது கவனம் முழுவதும் ஆசிரியர் காட்டிய இடம் நோக்கிக் குவிந்தன. கரும் பலகையில் வெள்ளைநிற சுண்ணக்கட்டியில் ஆங்கிலத்தில் எழுதப்பட்ட அந்தச் சொல் *Iqbal*. இதைப் பார்த்தபோது சில நொடிகள் சொல் பிடிபடவில்லை. அச்சொல்லின் எழுத்துக்களை ஓரிருமுறை படித்துப் பார்த்து கண்டுக் கொண்டேன். அந்தச் சொல் ஒரு நபரின் பெயர். உடனே அப் பெயருக்கு சொந்தமானவரைப் பற்றிய ஞாபகமிருக்கும் தரவுகளை என் மூளை அலசி தொகுக்கத் தொடங்கிவிட்டது.

சுதந்திரத்திற்கு முன்பான பிரிட்டிஷ் இந்தியாவில் பிறந்து பிறகு பாகிஸ்தானின் தேசிய மகாகவியாக உயர்ந்தவர், கவிஞர், அல்லாமா முகம்மது இக்பால். அவரது கவிதைகளும் நூல்களும் உலகப் பிரசித்தம். அவரது பெயரைத்தான் அங்கு எங்கள் ஆசிரியர் எழுதியிருந்தார். ஆனால் அவரது பெயரை எப்படி படிப்பீர்கள் என்று கேட்டதற்கு வகுப்பில் யாரிடமிருந்தும் பதிலில்லை. எனக்கு மட்டும் தெரிந்திருந்தது. நான் மனதில் இருந்ததைச் சொல்வதற்குள் ஆசிரியர் அடுத்ததற்கு சென்றுவிட்டார்.

'திஸ் வேர்ட் இஸ் க்யூபல்,' என்று சொன்னார்.

'எது க்யூபலா..?' என்று மனது ஒரு நொடி அதிர்ந்துவிட்டது. ஆசிரியர் சொல்வதை நான் தவறாகவேனும் கேட்டுவிட்டேனா என்று மறுகணம் யோசித்தேன். மீண்டும் அந்த வார்த்தையைப் பார்த்தேன். அது *Iqbal* என்றுதான் காட்டியது.

'எழுதியிருப்பது சரியாத்தான் இருக்குது. ஆனா ஆசிரியர் உச்சரிப்பது சரியா இல்லையே. பேர மாத்தியில்ல உச்சரிக்கிறாங்க. ஒருவேள நான்தான் தப்பா தெரிஞ்சிக்கிட்டிருக்கேனா.? இது க்யூபல்தானா.? இதுவர இந்தப் பேர நான் படிச்சதும் கேட்டதும் இக்பால்னுதானே.? அப்படின்னா எப்படி உச்சரிக்கிறதுனு ஆசிரியருக்கு தெரியலையா.? இல்லல்ல... அதான் நல்லா ஞாபகத்துல இருக்கே, இக்பால்னு.. இவங்கதான் சொல்லத் தெரியாம சொல்றாங்க போல...' இப்படியாக எனக்குள் எண்ணங்கள் உருண்டன.

வகுப்பிலுள்ள மற்ற மாணவர்களைப் பார்த்தேன். அனைவருமே ஆசிரியர் சொல்வதைக் கவனித்துக் கொண்டிருந்தனர். யாருக்கும் எனக்கு இருந்ததைப் போன்ற எண்ணம் இல்லை. ஆசிரியர் சொல்வதை மட்டுமே கேட்டு கொண்டு இருந்தனர். ஆக, இவர்களுக்கு அவ் வார்த்தைப் பற்றி, அந்தப் பெயரைப் பற்றி

எந்த விவரமும் தெரியவில்லை என்று புரிந்துகொண்டேன். வகுப்பில் ஆசிரியரின் குரல் மட்டும் ஒலித்துக் கொண்டிருந்தது. அந்த க்யூபல் என்ற நபர் ஒரு பாகிஸ்தானி கவிஞராம். அவர் எழுதிய ஒரு கவிதை-யோடுதான் இந்த நாவல் தொடங்குகிறதாம். அந்த நாவலின் பெயர் ஐஸ் கேண்டி மேன் என்பதும் நாவலை எழுதியவர் பாப்சி சித்வா என்கிற இங்கிலாந்து வாழ் பாகிஸ்தானி பெண்ணாம். நாவலின் கதை சுதந்திர போராட்ட காலத்தில் நடக்கும் கதை. அதனால்தான் நாவலை பாகிஸ்தானி கவிஞரின் கவிதையைக் கொண்டு தொடங்கி இருக்கிறாராம் ஆசிரியர். ஆங்கிலம் கலந்து சொல்லிகொண்டே செல்லும்போது இடையில் 'பாகிஸ்தானி கவிஞரின் கவிதை' என்று சொன்னது மீண்டும் ஞாபகத்தில் உள்ள தரவுகளை அலசிவிட்டது. அந்த பாகிஸ்தானி கவிஞ-ரின் பெயர், 'இக்பால்.' அதாவது அவரது பெயரைத்தான் ஆசிரியர் வகுப்பறையில் மாணவர்களுக்கு தவறாக உச்சரித்து சொல்லிக் கொண்டிருக்கிறார். எதுவும் தெரியாத மாணவர்களும் இதை அப்படியே கேட்டுக் கொண்டிருக்கின்றனர். இதையெ-ல்லாம் பார்க்கப் பார்க்க நடக்கும் தவறைச் சுட்டிக் காட்ட சொல்லி மனம் கூறியது. ஆனால் நான் வாயை திறக்காமல் நல்ல பிள்ளையாக அமைதியாக இருந்தேன். ஒரு நிமிடம் நகர்ந்து இருந்தது.

வகுப்பில் அந்த நாவலில் வரும் கவிதையை ஆசிரியர் அப்படியே வாசி-த்துக் காட்டினார். வரிகள் கொண்ட கவிதை படித்து காட்டிவிட்டு கடைசியாக மீண்டும் க்யூபல் என்றார். அதாவது எழு-தியவரின் பெயர் க்யூபலாம்.

திரும்பத் திரும்ப க்யூபல் என்று சொல்லிக் கொண்டே இருப்பதை என் மனம் கொஞ்சம்கூட ஒப்பவில்லை.

'அதுக்குன்னு, ஆசிரியரையே தப்புனு சொல்லப்போறியா.? அப்படி சொன்னா என்ன பண்ணுவாங்க தெரியும் இல்ல.? இன்டர்னல் மார்க்கில் கைய வச்சி-ருவாங்க. வாய மூடிட்டு ஒக்காரு.' இப்ப-டியாக எனக்குள்ளிருந்த முற்சார்பு குரல் தான் இப்படி எச்சரித்தது. இதெல்லாம் சில நொடிகளில் நடந்துவிட்டது.



'இது தவறு க்யூபல் இல்ல. இக்பால் தான் சரி,' என்று சொல்ல மனம் என்னைத் தூண்டிக்கொண்டே இருக்க அதை கட்டுப் படுத்திக் கொண்டு இருந்தேன்.

கண்கள் மீண்டும் எழுதப்பட்டிருந்த அந்த வார்த்தையை பார்த்தது அங்கு *Iqbal* என்றுதான் எழுதியிருந்தது. மீண்டும் என் ஞாபகம் இதை உறுதிப்படுத்தியது. உடனே என் வாய் இருக்க முடியாமல் என் அருகில் இருந்தவனிடம், 'இது க்யூபல் இல்லடா. இக்பால். இவங்க தப்பா சொல்லிக்கிட்டு இருக்காங்கடா,' என்று சொல்லிவிட்டேன் அவன் உடனே என்னை ஆசிரியரிடம் கோர்த்து விட்டுவிட்டான் எனக்கோ நெஞ்சில் குத்து வாங்கியதுபோல் ஆகி விட்டது. கூண்டில் மாட்டிய இரையைப் போல நானும் எலியைப் பிடிக்க வந்தப் பூனையைப்போல ஆசிரியரும் இருக்க சிறுபிள்ளைத்தனமாக மாட்டி விட்டு விட்டானே என்று தோன்றியது. இவனைப் போல வயதுக்கேற்ற பக்குவமில்லாத வளர்ந்து கெட்டவர்களும் என் வகுப்பில்.

' ஹேய்.. யூ... மிஸ்டர் ஸ்டேண்டப்.' ஆசிரியர் இப்போது சர்வாதிகாரி ஆகி விட்டார் அவர் சொல்படி கேட்கவில்லை எனில் இன்டர்னல் மார்க்கில் நாமம்தான் என்பதால் எனக்கு வேறு வழியே கிடையாது மாட்டிக் கொண்டேன்.

வாட் த ஃபால்ட் யூ ஃபைண்டவுட்..?' நான் எழுந்து நின்றபின் கேட்டார் ஆசிரி-யர். நான் அமைதியாக இருந்தேன் அதுதான் எனக்கு தற்போது நல்லது என்று தோன்றி-யது. 'டெல் மீ மிஸ்டர். வாட் யூ ஃபைண்டவுட்..?' மீண்டும் என்னிடம் அமைதி.

வகுப்பில் ஆண்கள் பெண்கள் அனைவருமே என்னைப் பார்த்தனர். அவர்களது பார்வைக்கு பொருள், 'இவன் ஆசிரியரையே தப்புன்னு சொல்லிட்டானே. இவனுக்கு எப்படி மார்க் போடுவாங்க..?- டிபார்டமென்டுக்கு கூப்பிட்டு கூப்பிட்டு அலைய விடுவாங்களே..' என்றெல்லாம் அவர்களுக்கு தோன்றியிருக்கும். ஏனெனில் ஆசிரியர்கள் என்ன சொன்னாலும் அப்பப-டியே செய்ய வேண்டும் என்ற பிம்பத்தை கொண்டவர்களாக மாணவர்கள் இருந் தனர். ஆசிரியர்களும் மாணவர்களை காட்டில் வாழும் ஆண் சிங்கத்தின் கீழி-ருக்கும் பெண் சிங்கங்களைப்போல என்று கருதினர். இந்த நடைமுறையில் போயும் போயும் ஒரு மாணவன் ஆசிரியரையே தவறு சொல்வது என்பது வலையில் சிக்கிய மானின் கணக்குதான்.

ஆசிரியரின் கேட்ட கேள்விக்கு பதில் இல்லை என்றால் அடுத்த ஆயுதமாக வசைமாரி மொழியத் தொடங்குவார்கள். என்னால் என்ன செய்ய முடியும் என்று இருந்தேன்.

'என்ன மிஸ்டர்..? ஆன்சர் மீ.' நானோ அமைதியில் இருந்தேன். பிறகுதான் வசையத் தொடங்கினார். 'ஆல்வேஸ் யூ ஆர் டாக்கிங் இன் மை கிளாஸ். எவ்ரிடே. எதுக்கு நீ எல்லாம் படிக்க வர்ற..?

க்ளாஸ்ஸ கவனிக்காம அப்படி என்ன பேச்சு..? என்னத்த படிச்சுட்டேன்னு பேசிக்கிட்டிருக்குற..? இப்படித்தான் மத்த-வங்கள டிஸ்டர்ப் பண்ணுவியா..? இந்த லட்சணத்துல நீ என்னைய தப்பு சொல்ல வந்துட்டியா..?' இதுவரை ஆசிரியர் கேட்ட-தெல்லாம் கேள்வி என்று நினைத்துக் கொண்டால் நாம்தான் முட்டாள். அந்தக் கேள்விகளுக்குள் ஒளிந்திருக்கும் வசை.

'டேக் யுவர் ஐடி கார்ட். கிவ் மீ தட். கெட் அவுட் ஆஃப் மை கிளாஸ்.' கடைசி ஆயுதமாக மாணவர்களை இப்படித்தான் தண்டிப்பார்கள். ஆனால் அப்போது ஆசி-ரியரின் கேள்விக்கு நான் பதில் சொல்ல-வில்லையேத் தவிர, வேறு எந்த குற்றமும் செய்யவில்லையே. அருகில் இருந்தவனிடம் பேசியது குற்றம் என்று நினைத்தால் அங்கு-தான் விசைத்திருப்பம் இருக்கிறது. அன்று ஆசிரியர் என் அடையாள அட்டையைக் கேட்டபோது நான் தரவில்லை. விட்டிருந் தால் பிடுங்கி இருப்பார். நான் வெளியே-யும் போகவில்லை. எனக்குள் ஒரு பிடிவா-தம் உருவாகியிருந்தது. எதுக்காக நான் குற்றவாளியாட்டம் வெளியப்போகனும்..? தப்பாச் சொல்லிக் குடுப்பது ஆசிரியர் தானே..?' என்று எனக்குள் கேள்விகள் ஓட, ஆசிரியர் என்னை வெளியில் துரத்த, வேறு வழியின்றி நான் உண்மையை அப்போது சொல்லிவிடலாம் என்று நினைத்து பேச தொடங்கினேன். ஆசிரியரின் தவறை சுட்டிக் காட்டி விடலாம் என்று முடிவெ-டுத்தேன்

'க்யூபல் இல்லைங்க. *it's* ராங்.' என்று நான் சொன்னது வகுப்பில் அனைவரது கண்களையும் விரிய செய்துவிட்டது.

'எக்ஸ்கியூஸ் மீ.?' ஆசிரியர் கேட்டார்.

'ஸீ, இட்ஸ் நோட் க்யூபல். ஒன்ஸ் செக் த ஸ்பெல்லிங்.'

ஆங்கிலத்திலேயே நான் சொன்னதால் ஆசிரியர் எழுதியதை பார்த்தார் என்ன புரிந்து கொண்டாரோ மீண்டும் பழைய கேள்விக்கே வந்தார். 'டெல் மீ வாட் யூ ஃபைண்டவுட் இன் த, ஸ்பெல்லிங்.?'

'ஐ செட் தட் த ப்ரனன்சியேசன் ஆஃப் த வார்ட் இஸ் ராங்.' மீண்டும் ஆங்கிலத்தில் என் பதில்.

வகுப்பில் எங்கள் உரையாடலை அனைவருமே கேட்டுக் கொண்டிருந்தனர். இது அவர்களது பார்வைக்கு கிட்டத்தட்ட ஒரு சண்டைப்போல. ஆசிரியரின் கற்பித்தலை தவறு எனச் சொல்லும் வழக்கம் யாரிடமும் இல்லை என்பதால், நான் அவர்களது தவறை ஆங்கிலத்திலேயே சுட்டிக் காட்டுவதால், இப்படியெல்லாம் ஆசிரியரிடம் யாரும் பேசியதில்லை என்பதால், என் வகுப்பு மாணவர்களின் கண்ணோட்டத்தில் என்னை அறிவாளியா முட்டாளா என்ற எந்தவித வரையறைகளும் வைத்து பார்க்க முடியவில்லை.

'இப் இஸ் தட் ராங், டெல் மீ த ரைட் திங்.' ஆசிரியர் மீண்டும் கேட்டார். 'கமான். டெல் மீ.' நான் சொல்வதாய் இல்லை.

' ஐ டோன்ட் ஹியர் டு டெல் ரைட் திங். யூ ஆர் அ லெக்சுரர். ஃபைன்ட் அவுட் த ஃபால்ட்..?' நான் இவ்வாறு ஆசிரியரையே எதிர்த்து சொல்லி விட்டேன் என்பதை வகுப்பில் யாராலும் ஒப்புக்கொள்ள முடியவில்லை. ஏனெனில் அவர்களது இலக்கணம் அப்படி.

' ஏய், நான் சொல்றது தப்புன்னா நீயே சரியானதைச் சொல்லேன்.' ஆசிரியர் சொன்னார். இதிலிருந்தே அவரது கற்பித்தலில் ஏதோ ஒரு குறை இருக்கிறது என்பதை ஒப்புக் கொண்டுவிட்டார், அதை சுட்டிக் காட்டுவதால் கிட்டத்தட்ட என்னிடம் இறங்கும் நிலைக்கு வந்துவிட்டார் என்று நான் புரிந்து கொண்டேன்.

' இது எச்.ஓ.டியே எனக்கிட்ட சொன்னது. க்யூபல்னு. பின்ன எப்படி நீ தப்புன்னு சொல்ற.?'

' கியூபல்னு சொல்றீங்க.? இந்தப் ப்ரனன்சியேசனுக்கு ஏத்த ஸ்பெல்லிங்

## கிராமத்துத் திண்ணை

மூன்று புலிகள்
பதினைந்து ஆடுகள்
கட்டங்களுக்குள்
சிக்கிக் கொண்டு
பெரிசுகளின் வம்புச் சண்டைகளைத்
தீர்த்து வைக்கும்
கிராமத்துத் திண்ணை...

தலை விழ
ஒரு நூறு பிரார்த்தனையுடன்
சுண்டப்படும் நாணயத்தை
ஒளித்துக் கண்ணாமூச்சியாடும்
கிராமத்துத் திண்ணை...

அடுக்கிய ஐம்பத்திரண்டு சீட்டுக்கள்
தொடைக்கு கீழ் வைத்த துருப்புச்சீட்டு
காட்டிக் கொடுக்காமல் விளையாடும்
கிராமத்துத் திண்ணை....

நிலாச் சோற்றைப் பாப்பாவுடனும்
தெரு நாயுடனும்
பகிர்ந்துண்ணும்
கொடுத்து வைத்த
கிராமத்துத் திண்ணை....



அம்மாவைப் பார்க்க
அதிரசத்தோடு வந்து
விட்டுப் போகும் பாட்டியின்
வைராக்கியத்திற்குத் துணை நிற்கும்
கிராமத்துத் திண்ணை..

உதிரிப்பூக்களோடு
தெருப் பெண்களின் கதைகளைத்
தொடுக்கும் கிராமத்துத் திண்ணை.....

யார் பெற்ற பிள்ளையோ....
வாடிய முகத்திற்குச் சோறு போடும்
அம்மாவின் பாசத்தைப்
பங்கிடும் கிராமத்துத் திண்ணை...

இன்று வளர்ந்து விட்டது...
மூன்று தளங்களுடன்
அடுக்கு மாடிக் குடியிருப்பின் முற்றமாக..
நிறுத்தி வைக்கப்பட்ட
இரு சக்கர வாகனங்களோடு
ஒன்றுக்கும் உதவாத
ஒப்பனைச் செடிகளுடன்..

**- ஷர்ஜிலா பர்வீன் யாகூப்**
கம்பம்

இருக்கான்னு பாருங்க.’ ஆசிரியர் பார்த்தார். அதே வார்த்தைதான் இக்பால் என்று இருந்தது. திரும்ப என்னைப் பார்க்க, நான் சொன்னேன். ’க்யூ பக்கத்துல யூ ஸ்பெல்லிங் வந்திருக்கணும். இல்லையே. அது மட்டுமா.? க்யூக்கு முன்ன ஐ லெட்டர் வர்றதையே கவனிக்கலையே.’ நான் சொன்னதைக் கேட்ட ஆசிரியருடன் மாணவர்களும்தான் ஆங்கில எழுத்துக்களைச் சரிபார்த்தனர்.

நான் சொல்வது சரியாக இருக்கிறது என்று சிலரது முக மாற்றத்தை வைத்தே தெரிந்து கொண்டுவிட்டேன். ஆனால் ஆசிரியர் அச்சொல்லை முதன்முதலில் அறிமுகப்படுத்தும்போது க்யூபல் என்றுதானே சொல்லியிருக்கிறார், எது சரி என்று ஆசிரியருக்கு தெரிந்திருக்குமே, அவரே தவறாகச் சொல்வாரா.? என்ற எண்ணம், அங்கே அவர்கள் கண்ட உண்மையை முழுமையாக ஏற்பதற்கு தடையாக இருந்தது. என்ன நடக்கிறதோ பார்க்கலாம் என்றுதான் அவர்கள் இருந்தனர்.

எப்படியோ ஆசிரியரை யோசிக்க வைத்து விட்டோம். இனிமே உட்கார்ந்து கொள்ளலாம் என்று நான் அமர்ந்து கொண்டேன். என் அருகில் இருந்த கோள் மூட்டியோ ஆசிரியர் அடுத்து என்ன சொல்வாரோ என்று பார்த்துக் கொண்டிருந்தான் ஆவலாக. வகுப்பில் சிலர் என்னை பார்க்க, சிலர் கரும்பலகையை பார்க்க, ஆசிரியரையும் பார்த்தனர்.

’ ஐ வில் ரெஃபர் இட் வித் எச்.ஓ.டி.’ ஆசிரியர் மெதுவாகச் சொன்னார். வகுப்பினருக்கு சூழலின் முடிவு என்ன என்று அறிந்து கொள்வதில் ஆர்வம் அதிகமாகிவிட்டது. ஒரு கதையின் முடிவில் இருக்கும் அழுத்தத்தை எதிர்பார்ப்பதைப் போல இருந்தது அவர்களுக்கு. அவர்களுடன் நானும் காத்திருக்கத் தொடங்கினேன். மறுநாள் ஆசிரியர் வந்தார். வகுப்பில் ஆசிரியரின் முடிவை கேட்க வேண்டி அனைவரும் காத்திருந்தனர் நானும்தான்.

அந்த உரையாடலுக்குப் பின் என் தரப்பு வாதத்தை நிரூபிக்க என்னிடம் இருந்த ஒரு புத்தகத்தை கையோடு எடுத்து வந்திருந்தேன். நீ எதை வைத்து தவறு என்று சொல்கிறாய் என்று கேட்டால் புத்தகத்தை எடுத்து ஆதாரமாக காட்டி விட வேண்டும் என்று நான் தயாராக இருந்தேன். ஆசிரியரோ வந்ததும் கரும்பலகையில் எழுதினார். அதில் இக்பால் என்ற வார்த்தையும் இருந்தது.

இந்த வார்த்தையை பார்த்ததும் அனைவரின் பார்வையும் கூர்மையடைந்தது. அடுத்ததாக ஆசிரியர் நான் சொன்னதே சரி என்றோ தவறு என்றோ அதேநேரம் ஆசிரியர் சொன்ன உச்சரிப்பு தவறு என்றால் சரியான உச்சரிப்பை நான் சொல்வேனா இல்லையா என்று மனவிவாதம் போய்க்கொண்டிருந்தது.

ஆசிரியர் எங்களைப் பார்த்து நின்றபோது எங்களது கவனமெல்லாம் அவர்மீது குவிந்தன. அவர் என்னைப் பார்த்துவிட்டு எழுப்பினார். நான் எழுந்தபோது அச்சச்சோ இவன் இன்னிக்கும் மாட்டப்போறான். என்ன சொல்ல போறாங்களோ தெரியல... என்பதை சிலர் நினைத்து கைகளை உதறிக் கொண்டனர்.

## பிஞ்சு மனமும் இன்ப மழையும் !

பிஞ்சு மனங்கள்
கொஞ்சும் மொழி பேசி
இன்ப மழையில் நனைந்து
குறும்புகள் செய்வதை
குடு குடு கிழவனும்
கம்பு ஊன்றி கண்டு மகிழ்வான்!

சாரல் காணும் மழையை
இளமை முதுமை
கள்ளமில்லா உள்ளங்கள்
தள்ளாடும் தாய்மையும்
மகிழ்வுடன் வரவேற்கும்!

செல்லமான இன்ப மழையில்
சிறுவர்கள் காகிதக்கப்பல்
கத்திக்கப்பல் மிதக்கவிட்டு
கூக்குரலிட்டு ஆடிப்பாடி
கும்மாளமிடுவதைக் கண்டு
குழந்தைகள் மட்டுமல்ல
இனிய இன்ப மழையும்
குளிர்ந்து நாளும் மகிழும் !

**கவிஞர் பொன்விலங்கு பூ. சுப்ரமணியன்,**
பள்ளிக்கரணை சென்னை

'ஐ ரெஃபர்டு இட் வித் எச்.ஓ.டி எஸ்டர்டே.' அவரது குரலில் சாந்தி இருந்தது. 'நவ் ஐ நீட் யூ டெல் மீ வாட் இஸ் த கரெக்ட் ப்ரனன்சியேஷன் ஆஃப் த வேர்ட்...?'

அவரது தேர்வை நான் ஏற்கிறேன் என்று யாரும் யோசிக்கும் முன்னரே தேர்வுக்கு நான் தயாராக இருந்தேன். 'இக்பால்.'

கேள்வி முடிந்த உடனே நான் விடை அளித்துவிட்டேன். ஆசிரியர் அதை கேட்டதைப் போலத்தான் அனைவரும் கேட்ட னர். நான் சொன்ன உச்சரிப்பு முறையும் ஆங்கிலத்தில் எழுதப்பட்டிருந்ததும் சரியாக பொருந்திப் போவதையும் அனைவரும் கண்டடைந்தனர். ஆனால் இப்போது ஆசிரியர் என்ன சொல்ல போகிறார் என்பதில்தான் முடிவு இருக்கிறது. ஆக மாணவர்கள் ஆசிரியரைப் பார்க்க, ஆசிரியர் என்னைப் பார்த்து விட்டு வகுப்பினரை பார்த்தார்.

' ஹீ இஸ் பர்ஃபெக்ட்லி கரெக்ட்,' என்றார்.

வகுப்பில் அனைவருக்கும் அது வாவ் மினிட் தான். ஏனெனில் இதுவரை ஆசிரியர் என்ன சொல்கிறாரோ அதை அப்படியே மனதில் ஏற்பது என்ற இலக்கணத்தை உடைத்து காட்டி, தவறு என்பது அனைவருக்கும் பொருந்தும் என்றும் சரியானதை யார் சொன்னாலும் ஏற்க வேண்டும் என்றும் அன்று அவர்களுக்கு புரிந்தது. இந்த வழிமுறை இனி அவர் களுக்கு தேவைப்படலாம்.

எப்படிப்பா இக்பால் னு கரெக்டா தெரிஞ்சுகிட்டன்னு ஆசிரியர் என்னிடம் கேட்டார். இதைக்கேட்ட உடனே நான் புத்தகத்தை எடுத்துக் காட்டவில்லை. நான் பதில் அளித்தேன். இக்பால்னா புகழ்னு பொருள். புகழ் எப்பவும் லேட்டாதான் வருமாம். அதுதான் படிச்சு தெரிஞ்சுக் கிட்டேன்.'

'ஆனஸ்ட்,' என்று சொல்லிவிட்டு தன் வகுப்பு பாடத்தை எடுக்க தொடங்கினார் ஆசிரியர். மாணவர்கள் ஆசிரியர்கள் அனைவருக்கும் அன்றிலிருந்து தொடங்கியது என் மீதான நற்பார்வை. ■

# சுதந்திரம்

அமைதியை தேடுகிறோம்
அச்சம் விலகாத
மனதின் சுதந்திரம்

ஆதிக்க வெறியகலாத
அடக்கு முறையில்
உறங்கும் சுதந்திரம்

இறைவனை வேறுவேறாக்கி
இதயங்களை கல்லாக்கி
இருளில் சுதந்திரம்

ஈன்றெடுத்தவள் ஏக்கம்
ஈரம் கசியும்
விழிகளில் சுதந்திரம்

உள்ளதை கூறாமல்
உள்ளொன்று வைத்து
புறங்கூறும் சுதந்திரம்

ஊக்கத்தோடு தொடரும்
உழைப்பைச் சுரண்டும்
ஊழல் சுதந்திரம்

எல்லோர்க்கும் எல்லாம்
கிடைப்பதாய் கூறும்
பொய்மை சுதந்திரம்

ஏழைகள் வீட்டில்
ஏகாந்தமாய் விளையாடும்
வறுமை சுதந்திரம்

ஐம்பூதமும் விற்கப்பட்டது
லாபம் தொடர்ந்தது
விற்பனை சுதந்திரம்

ஒற்றை விரல்
சனநாயகம் சிறைப்பட்டது
பணநாயக சுதந்திரம்

ஓதிடும் கல்வி
வியாபாரமாய் மாறியது
வணிக சுதந்திரம்

ஔடதங்கள் விற்பனைக்கு
பலியாகும் மனிதன்
மருந்தியல் சுதந்திரம்

**- செ. இலட்சுமணக்குமார்**
ஈரோடு

குறும்பா, ஹைக்கூ, லிமரிக்கூ, தன்முனைக் கவிதைகள்

# அறிமுகக் குறிப்புகள்

– பாவேந்தல் பாலமுனை பாறூக்

மேற்குறிப்பிட்ட பாக்கள் தமிழ்ப் பாவடிங் களுக்குள் அடங்குவன அல்ல. ஆயினும், தமிழில் ''வரவுப் பாவடிவ''ங்களாக இவை வந்து சேர்ந்துள்ளன.

**குறும்பா [Limerick]**

குறுகியதும் குறும்பு தருவதுமான பா குறும்பா.

Edward lier ஐ தந்தையாகக் கொண்ட, அயர்லாந்து நாட்டுக்குரியதாகக் கொள்ளப் படுகின்ற Limerick என்ற பாவடிவமே இலங்கைக் கவிஞர் மஹாகவி து.உருத்திர மூர்த்தி அவர்களால் தமிழுக்கு குறும்பா வாக அறிமுகம் செய்யப்பட்டது.
.
மஹாகவி தமிழுக்கு கொண்டு வந்த குறும்பா வடிவத்தின் வரைபுச் சட்டகம்,

காய் காய் தேமா
காய் காய் தேமா
காய் காய்
காய் காய்
காய் காய் தேமா என்பதாகும்.

குறும்பா ஒரே எதுகையுடைய மூன்று அடிகளில் அமையும் என்பதும், முதலாம் அடியின் மூன்றாம் ஆறாம் சீர்களும், மூன்றாம் அடியின் இறுதிச்சீரும் இயைபுத் தொடை பெற்றிருக்கும் என்பதும் மஹா கவியின் குறும்பா நூல் முன்னீட்டில் எஸ். பொ. தருகின்ற குறிப்பு. ஓசை ஊறுபடாமல் காய்ச்சீருக்கு பதிலாக விளம் வருவதையும், வெண்சீர் வெண்டளைக்கு பதிலாக இயற்சீர் வெண்டளை வருவதையும் அவரின் முன்னீடு அனுமதிக்கும்.

மஹாகவியின் குறும்பா 3 அடிகளைக் கொண்டது என்ற போதிலும் 5 வரிகளில் அமைந்திருக்கும்.

முதலாம் அடி, இரண்டு வரிகளில்,
இரண்டாம் அடி உட்சாய்ந்து, இரண்டு வரிகளில்,
மூன்றாம் அடி, முதலாம் அடிக்கு நேராக அமையும். 13 சீர்களில் அது அமையும்.

எடுத்துக் காட்டாக அவ்வரைபுச் சட்ட கத்தில் 13 சீர்களில் அமைந்த மஹா கவியின் குறும்பா இது.

முத்தெடுக்க மூழ்குகின்றான் சீலன்
முன்னாலே வந்துநின்றான் காலன்
  சத்தமின்றி, வந்தவனின்
  கைத்தலத்தில் பத்துமுத்தைப்
பொத்திவைத்தான் போனான்முச் சூலன்!

- மஹாகவி

இதேவரைபுச்சட்டகத்தில் இன்னுமொரு குறும்பா.

பிள்ளைகளில் அவர்க்கதிகம் பற்று
பெருமளவில் சேர்த்தாராம் சொத்து
பிள்ளைகளோ சண்டையிட்டுப்
பிரித்தனராம் தனித்தனியாய்
உள்ளதெலாம் வேறாக்கி விற்று!

லிமரிக் என்ற ஆங்கில வடிவத்தில் குறும்பாவின் 3ம் 4ம் வரிகளிலும் இயைபுத் தொடை பேணப்படும். அப்படி அமைந்த குறும் பா இது.

காதலனைக் கன்னியெதிர் பார்த்து
கால்கடுக்க நின்றிருந்தாள் காத்து
காதலனோ லேற்று
காலமதோ வேஸ்ற்று
சென்றுவிட்டாள் நின்றவன்கை கோத்து!

குறும்பாவில் தமிழகக் கவிஞர்கள் அதிகம் ஈடுபாடு கொண்டதாகத் தெரியவில்லை. (தமிழகக் கவிஞர் மீரா, அறுபதுகளில் வெளியானமஹாகவியின் குறும்பாக்களை பலமுறை படித்துச் சுவைத்துள்ளதாகக் குறிப்பிட்டிருக்கின்றார். எனினும் அவர் குறும்பாக்களை எழுதவில்லை.. மஹாகவியின் குறும்பாக்களின் மீதிருந்த ஈடுபாட்டால் அவர் ''குக்கூ''க்களை எழுதினார். குறும்பு, இயைபுத் தொடை என்பவற்றை குக்கூக்கள் ஏற்றிருந்தன)

இலங்கையிலும் கூட குறும்பா எழுதுவோர் சிலரே. மஹாகவியின் பின்னர், எழுபதுகளில் எம் எச்எம். ஷம்ஸ், கலைவாதி கலீல், ஜவாத் மரைக்கார், போன்றோர் குறும்பாக்கள் எழுதுவதில் கவனஞ் செலுத்தியுள்ளனர்.

எழுபதுகளில் குறும்பா எழுதுவதில் அதிகம் அக்கறை காட்டியவராகவும், இளங்கவிஞர்களை குறும்பாத்துறையில் வளர்த்துவிட பத்திரிகைகளில் வசதி செய்து கொடுத்தவராகவும் எம்.எச்.எம். ஷம்ஸ் கணிப்புப் பெற்றிருக்கிறார்.

50 குறும்பாக்களை கொண்ட, ''காசா லேசா'' என்ற பெயரில் அவரால் தொகுத்தெடுக்கப்பட்ட அவருடைய குறும்பாக்கள் நூலுருப் பெறாமல் போனது நமது துரதிஷ்டம்.

தொடர்ந்து...

கொக்கூர் கிழான், குறிஞ்சி தென்னவன், சிவசேகரன் (இலண்டன் பனிமலரில் எழுதியவர்), ஏ.பீர்முகம்மது என்று சிலர் குறும்பாக்களை அவ்வப்போது எழுதியுள்ளனர். அல்அசூமத் பூபாளத்தில் குறும்பாக்களை எழுதியுள்ளதோடு குறும்பாவின் வடிவ மாற்றம் கருதிய குறிப்புகளையும் எழுதியுள்ளார். எண்பதுகளில் குறும்பாவில் அதிக அக்கறை காட்டியவராக அவரைக்குறிப்பிட முடியும். அவருடைய யாப்பியலுரை நூலிலும் ''வரவுப்பா'' வடிவமாக குறும்பாவைக் குறிப்பிட்டு விபரித்துள்ளார். தீரன் நௌசாத் தூதுவில் குறும்பாக்களை எழுதியவர். தொடர்ந்து, குறும்பாக்களை எழுதியும், பரிசோதனை முயற்சிகளை மேற்கொண்டும் நீட்சி, விரிவு தொடர்பான குறிப்புகளை எழுதியும் வருபவராக பாலமுனைபாறூக் குறிப்பிடப்படுகின்றார்.

நூல்கள்

- சிவபாலன் - நகை
- எஸ்.ஜலாலுத்தீன் - சுடுகின்ற மலர்கள்.
- ஜே. வஹாப்தீன் - வெட்டுக்கற்கள்
- பாலமுனை பாறூக் குறும்பாக்கள்
- மு.தயாளன் குறும்பாக்கள்.
- சிவசேகரன் - ஒரு கூடைக் குறும்பூ
- குறிஞ்சி தென்னவன் - குறும்பூ

இலங்கையில் குறும்பாக்களை எழுதி வருபவர்களாக இன்னும் சிலர் மேலெழுந்துள்ளனர். இவர்களில் சிலர் தொடர்ந்தும், சிலர் அத்தி பூத்தாற்போல் அவ்வப்போதும் எழுதிவருகின்றனர்.

ஏஎம்எம் அலி, கிண்ணியா அமீர் அலி, அஷ்பா அஸ்ரப்அலி, மெய்யன் நடராஜ், மதியன்பன், எம்எல்எம்.அன்சார், எம். பீ.சிராஜுதீன், அக்கரையூர் அப்துல் குத்தூஸ், ஜின்னா ஷரிபுத்தீன், வில்லூர்

பாரதி, அபூ அப்கான், அச்சுமுகம்மது இஸ்மாயில், எழுகவி, கிராமத்தான் கலீபா, என்று சிலர் இக்குறிப்புகளை எழுதும் போது நினைவில் வருகின்றனர்.

கும்பலங்கையில் இருந்து ஒரு பெண் கவிஞர் 1983 காலப் பகுதியில் குறும்பா எழுதியிருப்பதாக அல்அசூமத் அவர்களின் குறிப்பின் மூலமாக தெரிய வருகின்றது. பெயர் தெரியவில்லை (தெரிந்தவர்கள் அதுபற்றி விபரங்களைத் தந்தால் சேர்த்துக் கொள்ளலாம்)

## மௌனத்தின் சப்தம்

மௌனங்களின் சப்தம்
மௌனமாகவே கேட்கப்படுகிறது!
மௌனமாகவே உணரப்படுகிறது!
பல நேரங்களில்
முற்றிலும் சம்மதமாய்
இன்னும் பல நேரங்களில்
வெற்று புன்னகையாய்
சில நேரங்களில்
வெரும் கண்ணீராய்
இன்னும் சில நேரங்களில்
எதுவுமற்று!
சந்தர்ப்பமும் காலமுமே
நிர்ணயித்துக் கொள்கின்றன
மௌனங்களின் வினையையும்
எதிர் வினையையும்!
வார்த்தைகளுக்குப் பின்
வரும் மௌனமும்
மௌனத்திற்குப் பின்
வரும் வார்த்தைகளும்
விலைமதிப்பற்றவை!
சிரிப்பையும் அழுகையையும் விட
மௌனம் மதிப்பீடற்றது!
வார்த்தைகளை விட
மௌனமே வெல்கிறது
மௌனத்தை காத்தவர்களும்
மௌனத்தை சரியாய்
புரிந்தவர்களும்
யாருமில்லை இங்கு!



**- மகிழை. சிவகார்த்தி**

இனி, ஹைக்கூ பற்றிப் பார்ப்போம்.

**ஹைக்கூ (Haiku)**

சின்னதாக இருக்கும் பெரிய அற்புதம் ஹைக்கூ.. ஜென் தத்துவம். ஜப்பானிய கவிதை வடிவம். பாஷோவால் அறிமுகம். மகாகவி சுப்பிரமணிய பாரதியாரால் 1916ல் சுதேசமித்திரனில் எழுதிய கட்டுரை மூலமாக தமிழுக்கு அறிமுகம்.

சுஜாதா, அப்துல்ரகுமான், தமிழன்பன், அமரன், முனைவர் ரமேஷ், க.நா.கல்யாண சுந்தரம், பாலகிருஷ்ணன், அனுராஜ், இளையபாரதி என்று இவர்களோடு சேர்ந்த ஒரு பெரும் ஹைக்கூ படையே தமிழ்நாட்டில் உண்டு.

3 வரி
5 – 7 - 5 அசை
உவமை, உருவகம் இல்லை. நேரடியாகக் கூறுவது. உணர்ச்சியை வெளிப்படையாக கூறாது, மின்னலென ஒரு திருப்பத்தோடு ஈற்றடியில் அமைத்தல். உண்மைத்தன்மை, மெல்லிய நகைச்சுவை.

**ஈழத்தில் ஹைக்கூ கவிஞர்கள்**

- சு.முரளீதரன் - கூடைக்குள் தேசம் 1988
- கல்லறைக்குள் கதிரவன் - சாள்ஸ் 1990
- ஹைக்கூ கவிதைகள் - கப்டன் மலரவன் 1998
- உயிர்ச் சிறகுகள் - அஸீஸ் எம் பாயிஷ் 2001
- மனசின் பிடிக்குள் - பாலரஞ்சனி சர்மா 2001
- பச்சை இறகு - வேலணையூர் பொன்னண்ணா 2001
- நுங்கு விழிகள் - இ.சு முரளிதரன் 2007
- வானவில் - பெரிய ஐங்கரன் 2007
- அம்மா என் ஹைக்கூ - வி க்னா

பாக்கிய நாதன் 2007

- இயற்கை இயல்பு - பஸ்லி ஹமீட் 2013
- நறுக் - மொழி வரதன் 2016
- கவிநுட்ப துளிப்பாக்கள் - பாயிஷா நௌபல். 2017
- 1000 முத்துக்கள் 100 பன்னாட்டுக் கவிஞர்களின் ஹைக்கூ தொகுதி . தமிழ்நெஞ்சம் வெளியீடு. தொகுப்பு கவிநுட்பம் 2017 இலங்கை,

மேலே நூல்களைத் தந்தவர்களோடு, ரசிகுணா, சத்தார் எம் ஆஷாத், நஸீரா எஸ் ஆப்தீன், பாலமுனை பாறூக், ஜே. வஹாப்தீன், டாக்டர் அப்துல் ரஷாக், நஸ்மின் நாஸர், நிர்மலா சிவராச சிங்கம், மருதூர் நப்ரிஸ், ஏஎ.சபீக்கா றிஸ்வான், முஹம்மது அலி, ஜீவிதன், பழனியாண்டி கனகராஜா, லோஜி, ஆலெமு இர்சாத், மெய்யன் நடராஜ், வபீரா வஃபி ஆகியோரும் ஹைக்கூ கவிதைகளை எழுதிவருகின்றனர்.

இந்தியாவில் இருந்து வெளியான உலகளவிலான ஹைக்கூ சாதனை நூலில் (ஹைக்கூ2020 - தமிழ் நெஞ்சம் வெளியீடு) இவர்கள் ஒவ்வொருவரினதும் 20 ஹைக்கூக்கள் இடம் பெற்றுள்ளன. இது 11 ஹைக்கூ வித்தகர்களால் தெரிவு செய்யப்பட்ட 2020 ஹைக்கூக்களைக் கொண்ட இதுவரை வெளிவந்த நூல்களில் அதிக அளவிலான ஹைக்கூக்களைக் கொண்ட நூலாகும்.

உதிர்ந்த மலர்
கிளைக்குத் திரும்புகின்றது
ஓ.. வண்ணத்துப் பூச்சி

(மோரி டேகே) - ஹைக்கூ வுக்கு எடுத்துக் காட்டாக முன்வைக்கப்படும் பா.

ஹைக்கூவில் அந்தாதி எழுதி இருப்பவர் தமிழக கவிஞர் அமுத பாரதி.

இலங்கையில் ஹைக்கூ பற்றி முகநூலில் பயிற்சிக் குறிப்புகளை சத்தார் எம் அசாத் வழங்கி வருகின்றார். நஸீரா ஆப்தீன், ஹைக்கூவில் கரைவோமா என்னும் நூலினை வெளியிட்டுள்ளார். ஹைக்கூ - குக்கூ, சென்றியூ, பழமொன்றியூ, மோனைக் கூ, எதுகைக் கூ என்று விரிவாக்கம் பெற்றுள்ளது.

குக்கூ 3 வரி மரபை மீறும்.
பறவைகள் பேச்சைக் கேட்டுக் கெட்டன
இலைகள், பாவம் பறக்க முடியாமல்
விழுந்து விட்டன.
கவிஞர் மீரா

சென்றியூ 3 வரி. நகைச்சுவை உணர்வு அதிகமிருப்பின் சென்றியூ கவித்துவம் அதிகமிருந்தால் ஹைக்கூ.

ஆயிரம் பேரோடு
வேட்புமனுத் தாக்கல்
ஐம்பது வாக்குகள்!

பழமொன்றியூ பழமொழிகள் சேர்ந்து வருவது

அன்னையும் பிதாவும் முன்னறி தெய்வம்
ஆகாத வயதில்
முதியோர் இல்லம்!

எதுகைக்கூ, நம்மவர்களாலும் எழுதப்பட்டு வருகின்றது.

**எதுகைக் கூ**

விழி நனைந்தது
வழி பிரிந்தது
வலி, காதலர் பிரிந்தார்.

ஹைக்கூவில் பரிசோதனை முயற்சி

விடுகவிக் கூ, மணிக்கூ இவற்றை நஸீரா ஆப்தீன் செய்து பார்த்துள்ளார். 3 வரிதான் விடுகதை போல அமையும்.

ஊரெல்லாம் பிரகாசம்
வானிலோர் புதிய ஒளி
மின்னல்

மணிக்கூ 3 வரிக்கவிதை

பிரிந்து இணைந்து
பிளந்து பிரித்தது
கத்தரிக்கோல்

தற்போது இலங்கையில் தொடர்ந்து ஹைக்கூ கவிதை எழுதி வருபவராக அய்சத் அப்சத் என்பவர் உள்ளார். இவருடைய நூற்றுக்கும் மேற்பட்ட ஹைக்கூக்கள் இந்தியாவில் திரு கா.ந.கல்யாண் சுந்தரம் நடத்துகின்ற உலக ஹைக்கூ கவிதை மன்றத்தில் இடம்பெற்றிருக்கின்றன. பரிசுக்குத் தேர்வாகி அங்குள்ள இதழ் களிலும் பிரசுரமாகின்றன.

**லிமரைக் கூ [Limeriku]**

குறும்பாவும் (Limerick) ஹைக்கூவும் (Haiku) கலந்து வத்திருக்கின்ற பா இது.

குறும்பாவிலிருந்து குறும்பையும், இயைபுத் தொடையையும் பெற்றுக்கொண்டு, ஹைக் கூவில் இருந்து மூன்று வரி அமைப்பைப் பெற்று வருகின்ற கவி வடிவம்.

முதலாம் வரியின் இறுதிச் சீரும், மூன்றாம் வரியின் இறுதிச் சீரும் இயைபுத் தொடை பெற்று வரும். இரண்டாம் வரி மற்ற இருவரிகளையும் விட நீண்டிருக்கும்.

லிமரைக் கூவின் தந்தையாக Ted Pauker என்ற ஆங்கிலக் கவிஞனைச் சொல்வர். தமிழுக்கு இதனைக் கொண்டு வந்தவர் கவிஞர் ஈரோடு தமிழன்பன். ''சென்னிமலை கிளியோபாத்ராக்கள்'' என்பது அவரின் லிமரைக்கூ கவிதைகளின் தொகுப்பு.

லிமரைக்கூ சில எடுத்துக்காட்டுகள்

ஊது வத்திச் சின்னம்
கட்சி வென்று கோட்டை பிடித்தும்
நாற்றம் போகலை இன்னும்.
ஈரோடு தமிழன்பன்

தமிழில் பேசிடத் தயக்கம்
தரமிகு தமிழ்மொழி தவிக்கும் சிலருக்கு
ஆங்கிலம் மீது மயக்கம்
மகிழ்நன் மறைக்காடு

ஒன்லைனில் நடக்கிறதாம் வகுப்பு
ஒழுங்கு செய்தார் அப்பா,
மகன் ஒன்லைனில்
''லவ்வ''ரோடு களிப்பு

**தன்முனைக் கவிதைகள்**

ஆங்கிலக் கவிதை வடிவமான லிமரிக், குறும்பாவாகி தமிழில் நீட்சி பெற்றிருப்பது போல, ஜப்பானியக் கவிதை வடிவமான ஹைக்கூ, துளிப்பாவாகிப் பல பெயர் களில் விரிவு பெற்றுவருவது போல, தெலுங்குக் கவிதை வடிவமான நானிலு, தன்முனைக் கவிதைகளாகத் தமிழில் சுவை சேர்க்கின்றது.

2017ல் திரு கா.ந.கல்யாண சுந்தரம் அறிமுகப்படுத்தியுள்ள தன்முனைக் கவிதை வடிவம் சாரதா க.சந்தோஷ், அனுராஜ், இளவல் ஹரிஹரன், அன்புச்செல்வி சுப்புராஜு, கவிஞர் ஜென்ஸி செல்வராஜ் ஆகியோரின் உறுதுணையுடன் நானிலுவில் இருந்து நீட்சி பெற்று, தமிழுக் கேற்றாற் போல விதி அமைத்து வளர்த்தெடுக்கப்பட்டி ருக்கின்றது.

ஹைக்கூ 3 வரிக்கவிதை, தன்முனைக் கவிதை 4 வரி. தன்முனைக் கவிதையில் ஒரு வரி அதிக பட்சம் 3 வார்த்தைகளையே கொண்டிருக்கும். மொத்தமாக கவிதை 12 வார்த்தைகளுக்கு மேற்படக் கூடாது.

எளிய சொற்கள். பொருள் அடர்த்தி, முதலிரு வரிகளும் ஒருநிகழ்வை அல்லது காட்சியை தொடக்கிவைக்க, அதனோடு தொடர்புடைய சாதகமான, அல்லது முரண்பட்ட உணர்ச்சியை - கருத்தை வெளிப்படுத்துவதாக அடுத்து வரும் இருவரிகளும் அமையும்.

தன்முனைக் குழுமத்தின் குறிப்பொன்றில்

இருந்து 2022 இன்றுவரை 24 தன்முனைக் கவிதை நூல்கள் வெளிவந்திருப்பதாக அறிய முடிகின்றது.

இலங்கையில் தன்முனைக் கவிதை நூலைத் தந்திருப்பவர் நஸீரா எஸ் ஆப்தீன். வானும் மண்ணும் நம் வசமே (தமிழ்நெஞ்சம் பதிப்பகம், பிரான்சு 2020)

தன்முனைக் கவிதைகள் சில..

புத்தனுக்குப் பேராசை காட்டி
அழைத்த போதிமரம்
இலையுதிர்த்து தனது துறவில்
ஞானம் பெற்றது
கா.ந. கல்யாணசுந்தரம்

வயலை உழுகின்ற உழவன்
அரை நிர்வாணமாய்
வரப்பில் நின்ற பொம்மை
அழகான ஆடையுடன்
அனுராஜ்

கருவைச் சுமந்த
கருப்பையின் வலி கண்டு
அழுதே பிறக்கின்றன
மழையும்,மழலையும்
சாரதா க சந்தோஷ்

என்னால் முடியும்
என நிமிர்ந்தேன்
தூரத்து மலையும்
சிறு புள்ளியாக!
அன்புச்செல்வி சுப்புராஜு

உறங்கிக் கொண்டிருந்தால்
கனவு வரும்
உழைத்தால் தான்
விடிவு வரும்
ஜென்ஸி செல்வராஜ்

பூந்தோட்டத்தில் புதர் மறைவில்
காதலர் சோடி
பின்னால் நின்று படமெடுக்கிறது
நாக பாம்பு!
நஸீரா எஸ் ஆப்தீன்.

மேலும் அழகானது
எனது முற்றம்
நிலவும் நீயும்
ஒன்றாய் வந்தபோது!
சுமதி சங்கர்

கையேந்தும் உன்னைத்
தினம் கடந்து செல்கிறேன்
கல்நெஞ்சக் காரனில்லை
என்னிடத்தில் ஒன்றுமில்லை
அய்சத் அப்சத், இலங்கை

இலங்கைக் கவிஞர் அய்சத் அப்சத் தன்முனைக் கவிதைகளை தன்முனைக் கவிதை மன்றத்தில் (இந்தியா) தொடர்ந்து எழுதி வருவதனை அவதானிக்க முடிகின்றது.

தன்முனைக் கவிதைகள் முனைவர் வே. புகழேந்தி அவர்களால் தேர்ந்தெடுக்கப் பட்டு ஆய்வு செய்யப்பட்டு ஆங்கில, கன்னட மொழிகளில் மொழிமாற்றம் செய்யப்படுவதோடு அவை ஆய்வுக்காக பல்கலைக் கழகங்களுக்கு அனுப்பி வைக்கப்படும் தகவல்களையும் முகநூல் மூலம் அறிய முடிகின்றது.

வரவுப் பா வடிவங்களில் தேடல் உள்ள வர்கள் ஒரு தொடக்கக் குறிப்பாகப் பயன் படுத்திக் கொள்ள முடியுமென்ற நம்பிக்கையில் இக்குறிப்புக்கள் இங்கு தரப்படுகின்றன.

(கட்டுரையில் பெயர் குறிப்பிடப் படாமல் எடுத்துக்காட்டுகளாக சொல்லப்பட்டுள்ள குறும்பா, எதுகைக் கூ, லிமரிக்கூ ஆகியன கட்டுரை ஆசிரியரால் எழுதப் பட்டவை யாகும்)

*(தினகரன் செந்தூரம் பகுதியில் தொடர் கட்டுரையாக வெளிவந்த இக் குறிப்புக்கள் மீளப் பிரசுரம் பெறுகின்றது.)*

# சரித்திர தேர்ச்சி கொள்

கடலோடும் கலம்கொண்டு களம்கண்டு நிலம்வென்ற
கவிபாடிப் புகழ்கொண்டோம் அந்நாள்
அடஏறு தழுவத்தான் அடலேறும் எழுந்தார்கள்
வரலாற்றை மீட்டார்கள் இன்று
குடவோலை முறையாலே குடிமக்கள் ஆள்கின்ற
குடியாட்சி சொன்னார்கள் அன்றே
உடன்வாழ்ந்தோர் உயிர்போனால் உடன்போகும் பழக்கத்தால்
உடன்கட்டை ஏறாமல் தடுத்தோம் - 1

மரம்நட்டச் சொன்னார்கள் குளம்வெட்டித் தந்தார்கள்
மழைபெய்யும் முப்போகம் விளையும்
வரைகின்ற படம்போல வழிவிட்டு மனைகட்டி
வாழ்ந்தார்கள் சான்றாகும் கூடல்
அரசாட்சி காலத்தில் ஆராய்ச்சி மணிகட்டி
மனுநீதி காத்தார்கள் அன்றோ?
பரல்சாட்சி உண்டென்று பறைசாற்றித் தமிழ்ப்பெண்ணும்
படைத்தாளே சிலம்போசை கேட்டோம் - 2

துரையாட்சிக் கெதிர்ப்பாக எழும்சிப்பாய் கலகத்தின்
துடிப்பெல்லாம் கனல்தோற்றுப் போகும்
வரலாற்றின் கறையாக டயர்அன்று சுட்டாரே
வதைக்காட்சி இதுபோலும் உண்டோ?
வரலாறு படைத்தாரே அயல்நாட்டில் அங்கேபோய்
உதம்சிங்கும் சுட்டாரே படித்தோம்
உரமிக்க வ.உ.சி க் இரண்டாயுள் சிறையென்றார்
உயிர்வாங்கி நிலைத்தாரே வாஞ்சி - 3

பசியாற்ற வயலுக்குள் புகும்யானை யதுபோல
பறிக்காதே வரியென்று சொன்னார்
பசியாற்ற யானைக்குக் கவளச்சோ றிடுவார்போல்
வரிவாங்கும் முறைசொல்லித் தந்தார்
பசிக்கின்ற வயிறுண்டேல் பாரெல்லாம் தீவைப்பேன்
பாரென்றான் முண்டாசுக் கவிஞன்
விசைகொண்ட உழைப்பாளர் உரிமைக்கே போராடி
உழைப்பாளர் தினம்கண்டார் பாரீர் - 4

தரையெங்கும் வென்றாலும் தருக்கின்றி அலெக்சாண்டர்
தன்கையை  விரித்துத்தான் போனார்
அரசாண்ட சித்தார்த்தன் அறிவுக்கண் அதுபெற்றார்
அதனாலே அவர்புத்தர்  ஆனார்
உரையென்றால் சி(க்)காகோ உரையென்பார் அன்பாலே
உணர்வூட்டும் செங்காவிச் சிங்கம்
உரைக்கூத்தில்  அரிச்சந்(தி)ரன் உளம்தன்னைப் பார்த்துத்தான்
உருவானார் நம்நாட்டுக் காந்தி - 5

தேரென்றால் காளையர் திருக்கோயில் தேரென்பார்
தியாகத்தின் வடிவாக நிற்கும்
நேரென்றே பனையோலை நினைவோலைக் கிணையாக
நினைவெல்லாம் காட்டாதோ படித்தோம்
சேரென்றே தொல்பொருள் கீழடி ஆராய
தெளிந்தோமே இன்னும்பார் உண்டே
யாரென்ன சொன்னாலும் ஏனென்றும் எதற்கென்றும்
கேளென்றார் சாக்ர(ட்)டீஸ் கேட்போம் - 6

வடலூரரார் இறப்பில்லா வாழ்க்கைக்கு வழிகாட்டி
வாழ்கின்றார் ஒளியாக இன்றும்
அடயாரும் கேட்டோமா அவர்பாதை நடந்தோமா
அறிவார்ந்த பெரியோரே சொல்வீர்
படைகொண்டோர் முப்பந்தல் போட்டாலும் அந்நாளில்
பாட்டி(ன்)சொல் தட்டாமல் இணைந்தார்
நடப்பெல்லாம் பின்னாளில் வரலாறாய் உருவாகும்
நாமெண்ணிப் பார்ப்போமே இந்நாள் - 7

**கவிஞர் சு.அய்யப்பன்**
கோவில்பட்டி - 628 501



# புலம்

அயாத் அக்பர்

நகிரி – 517590.

வாழ்க்கையின் ஒட்டுமொத்த மகிழ்ச்சி குடியிருப்பவர்கள் கூடி இருப்பதில்தான் இருக்கிறது. இத்தனை மகிழ்ச்சியையும் ஒட்டுமொத்தமாக அனுபவிக்கும் அத்தருணத்தில் ஈழப் போர் வெடித்தது. உற்றார், உறவினர்கள் ஒருவருக்கொருவர் திசைமாறி நான்கு திசைகளிலும் அலையென வீசி அலைக்கழிக்கப்பட்டோம்.

அது 17 அல்லது 18 மே 2009 மேதகு என்று எல்லோராலும் அழைக்கப்பட வேண்டிய தலைவர் பிரபாகரன் ஐயா அவர்கள் பயங்கரவாதி என்ற காரணத்தால் சுட்டுக் கொல்லப்பட்டார்.

சொந்தமான விவசாய நிலங்களையும், சொந்த மண்ணையும் விட்டு விட்டு வயிற்றுப் பாட்டுக்கு "புலம்பி புலம்பி" கடைசியாக புலம்பெயர்ந்தவர்கள் என்ற பட்டியலில் அகதிகள் என்ற அடையாளத்தோடு பல நாடுகளில் குடி புகுந்தோம்; "இல்லை இல்லை" தஞ்சம் அடைந்தோம் பாழாய்ப்போன இந்த உயிர்களை காப்பாற்றிக்கொள்ள.

அப்படி நாங்கள் வந்து கரை ஒதுங்கிய இடம்தான் தமிழர்களின் தாயகம் தமிழ்நாடு. ஊரை விட்டாலும் தன் மொழி பேசும் மக்களுடனே இணைந்து விட்ட உற்சாகத்தில் வாழ்வுதனை தொடங்கினோம். வாழ்க்கையில் வசந்தங்கள் வீசவில்லை என்றாலும் வறுமை வீசியது.

ஒரு பக்கம் போர்க்காலத்தில் போர்க்களத்தில் தப்பித்த எங்களால்; கடலின் இராட்சத அலைகளில் தப்பித்த எங்களால் இந்த வறுமை இடமிருந்து மட்டும் தப்பிக்க முடியவில்லை. இன்னும் நான் யார் என்று உங்களுக்கு சொல்லவில்லை அல்லவா.என் பெயர் மகிழன். திசைக்கு ஒரு பக்கம் சென்றதில் அதில் நான், என் தங்கை, என் பாட்டி இப்பக்கம் வந்து சேர்ந்தோம்.

அப்பா, அம்மா எந்தப்பக்கம் சென்றார்கள் என்று யார் அறிவார்? நாங்கள் வந்த போது என் வயது பத்து. ஐந்தாம் வகுப்பு அங்கு படித்துக் கொண்டிருந்தேன்.

இங்கு புலம்பெயர்ந்தவர்களுக்கு ஒதுக்கப்பட்ட அகதிகள் முகாமில் சிறு தார்பாயில் எங்களுக்கென்று ஒரு சிறிய கூடாரத்தை அமைத்துக் கொண்டோம்.

அங்கிருந்த பள்ளியில் சேர்க்கப்பட்டோம். நான் அவ்வளவு மகிழ்ச்சியை எங்கள் ஊரிலிருந்து வந்த பிறகு எப்போதும் இந்தளவிற்கு அனுபவித்ததில்லை. பள்ளியில் சேர்ந்ததற்கா இத்தனை மகிழ்ச்சி ? என்று நீங்கள் கேட்கலாம். அங்கே போடும் மதிய சாப்பாட்டிற்காகவே நான் இவ்வளவு மகிழ்ச்சி அடைந்தேன். வயிறார உண்டு பல மாதங்களான எனக்கு அந்த மதிய வேளை சாப்பாடு அமிர்தத்தை விட மிகவும் சுவையாக இருந்தது.

நானும் என் தங்கையும் அந்த மதிய சாப்பாட்டை நாங்கள் ஒருவேளை சாப்பிட்டு மறுபடியும் போய் கேட்போம். அங்கு இருக்கும் மதிய உணவு போடுபவர் முறைத்துப் பார்த்தாலும் சிரித்த முகத்துடனே பரிமாறுவார். அவருக்கும் எங்கள் துன்பம் தெரியும் போலும்.

ஆனால் அங்கிருந்த மற்ற பிள்ளைகள் மகிழ்ச்சி என்ற பெயரில் எங்களை ஏளனம் செய்தனர். எத்தனை முறை வாங்கி சாப்பிடறாங்க பாரு. அவர்களுக்கு என்ன தெரியும் இந்த உணவுதான் எங்களுக்கும்,பாட்டிக்கும் இரவு உணவு என்று. காலையில் பச்சைத் தண்ணீரும், மதியம் இந்த உணவும் இல்லையென்றால் எங்கள் வாழ்க்கை என்றைக்கோ முடிந்திருக்கும்.

ஞாயிற்றுக்கிழமை மற்ற பிள்ளைகளுக்கு சொர்க்கம்; எனக்கு மட்டும் ஏனோ நரகமாகவே கழிந்தது.

பிள்ளைகளின் கேலியும் கிண்டலும் மதிய உணவு நேரத்தில் அளவை மீறியது. எங்களுக்கு கண்களில் கண்ணீர் கொட்டினாலும் கிண்டலடித்த அவர்கள் மகிழ்ச்சி அடைந்தார்கள். என் தங்கை மட்டும் விசும்பி விசும்பி அழுதாள். எவ்வளவோ ஆறுதல் கூறினேன். ஆனால் அவள் அழுவதை மட்டும் நிறுத்தவில்லை.

மகிழ்ச்சி என்பது அடுத்தவரின் மனம் நோகடிக்காமல் சிரிக்க வைப்பதுதான் என்று எப்போது என் தோழர்கள் உணர்ந்து கொள்வார்கள் என்று ஏங்கினேன். அவர்கள் இந்நிகழ்வு நடக்கும் வரை உணர்ந்து கொள்ளவே இல்லை.

என் தங்கை ஒரு நாள் யாருக்கும் தெரியாமல் குளத்தில் போய் குதித்து விட்டாள். ஊர்முழுக்க தேடினேன். எங்கும் காணவில்லை. இரண்டாம் நாள் தண்ணீரில் மிதந்த போது தான் தாங்கமுடியாத வேதனை வலி இத்தனை நாள் கேலி கும்மாளம் செய்த எங்கள் பள்ளி தோழர்கள் அனைவரும் அன்று அழுத அழுகை என்றைக்கும் என் மனக்கண்ணில் இருக்கின்றது. கைகள் சுட்ட பிறகு இலையை பிடித்து என்ன லாபம்.

ஒரு விளையாட்டு இப்படி வினையாகும் என்பதை அவர்களும் உணர்ந்து பார்க்கவில்லை. அப்போதிலிருந்து அந்தப் பள்ளி மாணவர்கள் மகிழ்ச்சி என்றால் என்ன என்பதை புரிந்து கொண்டார்கள். யாரையும் புண்படுத்தாமல் சிரிக்க வைப்பதுதான் சிரிப்பு என்பதும் நம்மால் எள்ளளவும் அடுத்தவருக்கு எந்த அளவிலும் துன்பம் தரக் கூடியதாய் அது இருக்கக் கூடாது என்பதையும் அன்று உணர்ந்தார்கள். இரவு நேரங்களில் எனக்கும் என் பாட்டிக்கும் டப்பாக்களில் உணவைக் கொண்டுவந்து

கொடுத்தார்கள். ஞாயிற்றுக்கிழமைகளில் கூட சோறு வந்தது.

எத்தனையோ பேருக்கு சோறு போட்ட என் பாட்டியின் கை இன்று மற்றவர் கொண்டு வந்து கொடுக்கும் உணவிற்கு கையேந்தியதை பார்க்கும்போது எனக்கு மனம் வலித்தது.

இந்த உணவு என்பது எவ்வளவு அபூர்வமானது என்பதை அப்போது உணர்ந்து கொண்டேன். எவ்வளவுதான் நான் இன்று பெரிய படிப்பு படித்து கொண்டிருந்தாலும் என்னை சார்ந்தவர்களுக்கு எப்படியேனும் மூன்று வேளை உணவை கொடுத்துவிட வேண்டுமென்ற முடிவுடனே இவ்வளவு வறுமையிலும் என் பொறியியல் படிப்பை தொடர்ந்து படித்துக்கொண்டிருந்தேன்.

என் பாட்டி மட்டும் நான் நல்லா படிச்சு பெரிய ஆளா வரணும் அப்படி என்று ஆசைப்பட்டுகிட்டே இருப்பாங்க. எங்க ஊர்ல எங்க பாட்டி கையால சாப்பிடுவதற்கு எத்தனையோ பேர் தவம் கிடப்பார்கள் அப்பேர்ப்பட்ட பாட்டி இன்னிக்கி வீட்ல அடுப்பை எரிப்பதற்கு பல நாள் ஆகுது; சமைக்க தெரியாமல் இல்லை; சமையல் செய்ய பண்டடங்கள் இல்லாமல்.

இப்பேர்ப்பட்ட சூழ்நிலையில் தான் எனக்கு ஒரு யோசனை சின்னதா தோன்றியது. நான் கல்லூரிக்கு போய் வந்து மாலை நேரத்திலும், விடுமுறை நாட்களிலும் வேலை செஞ்சு கொஞ்சமா சேத்து வச்சு பணத்துல சமையல் செய்வதற்கு பாத்திரங்களும், உணவுப் பண்டங்களும் ஒரு நல்ல அலைபேசியை வாங்கினேன்.

எல்லோரும் அதுல பல விளையாட்டுகளை விளையாடும் போது. நான் மட்டும் கொஞ்சம் கொஞ்சமா அதை ஒரு நல்ல காரியத்திற்கு பயன்படுத்த வேண்டுமென்று நினைத்தேன்.

இதென்ன பெரிய விஷயமா அப்படியென்று நீங்க கேட்கலாம்! ஆனால் அங்கு இருக்கிற எங்களுக்கு அங்கு மாசாமாசம் போடுகிற ரேசன்அரிசியும், யாரோ உங்களை போல நல்ல உள்ளங்க தருகிற பொருள்களும்தான் மிச்சம் இருக்கற எங்க உயிருக்கு ஒரு தூண்டுகோல்.

எங்ககிட்ட இருக்குற பொருள்களும், உதவியா கிடைச்ச பொருள்களையும் பார்த்து எனக்கு வந்த யோசனையின் பேரில் " பாட்டி பேரன் சமையல் " அப்படின்னு ஒரு யூடியூப் சேனல் தொடங்கினேன்.

எங்க பாட்டி ரொம்ப நாளைக்கு அப்புறமா முதல்முதலா ஆசைஆசையாய் நிறைய காய்கறிகள்போட்டு சமைச்சாங்க அதை அப்படியே படமா எடுத்து யூடியூப் சேனலில் போட்டேன்.

அது பெருசா வெற்றி அடையவில்லை. இப்படியே நாட்கள் நகர நகர எங்க பாட்டி அவங்களுக்கு தெரிஞ்ச கதைகளையும் நல்ல மருத்துவ குறிப்புகளையும் அவங்க முறையில் சொல்லி சமைச்ச உணவுகளையும் படமாயெடுத்து போடும்போது மெதுவா விருப்பங்கள் அதிகமாச்சி அதை பார்க்கிற பார்வையாளர்கள் அதிகமானார்கள்.

அதன் மூலமா வருமானம் வர ஆரம்பித்தது. இன்னும் கொஞ்சம் பெரிய அளவில் சமையல் செய்ய ஆரம்பித்தோம். அந்த உணவை எங்க முகாமில் இருக்கிற சின்ன பசங்களுக்கு பரிமாறினோம். அப்போ உணவை வயிறார உண்ட குழந்தைகள் என்னை கட்டிப்பிடித்து கள்ளம் கபடமில்லாது அவர்கள் சிரித்தபோது நான் அடைந்த மகிழ்ச்சிக்கு அளவேயில்லை அதை வார்த்தைகளால் சொல்ல முடியல.

இந்த நிகழ்வுகளையெல்லாம் படம் பிடித்து காட்டும்போது இன்னும்

சப்ஸ்கிரைபர்ஸ் அதிகமானாங்க லைக்குகளும் அதிகமாச்சி அதன் மூலமா யூடியூப்ல இருந்து வருமானமும் அதிகமாச்சு.

இந்த வருமானத்தைக் கொண்டு இன்னும் நிறைய சமைக்க ஆரம்பித்தோம். இத்தனை நாள் வரை குழந்தைகளுக்கு மட்டுமே உணவு கொடுத்த நாங்கள் அன்றிலிருந்து முகாமில் இருக்கிற தாத்தாக்களுக்கும், பாட்டிகளுக்கும் உணவை சமைத்து போட்டோம். மெதுவாக ஆரம்பித்த இந்த பயணம் பல பாராட்டுகளையும், பலகைதட்டல்களையும், மூணு வேளை உணவுக்கும் வழி வகுத்தது.

திசை மாறிப் போன எங்க சொந்தங்கள் எல்லாம் இந்த காணொளி காட்சிகளை பார்த்து இருப்பாங்கபோல... அவங்களும் மகிழ்ச்சியடைந்து அவர்களால் முடிந்த உதவிகளை செஞ்சாங்க.

அரசாங்கம் கிட்ட உதவி கேட்டோம். கொஞ்ச நிலத்தை எங்களுக்கு விவசாயத்துக்கு பயன்படுத்துற மாதிரி ஓரமாக ஒதுக்கி கொடுத்தாங்க. அங்கு இயற்கை விவசாயம் செஞ்சோம். உண்மையா கஷ்டப்பட்டோம். இன்னைக்கு எங்க இடத்தில இருக்கிற 500 பேருக்கு எங்களால உணவை சொந்தமா தயாரிக்க முடியும். அந்த அளவிற்கு சொந்தமா முன்னேறி வந்தோம்.

இந்தக் காணொளிக் காட்சியை போட்டபோது எத்தனையோ பேர் அதை பார்த்து பாராட்டினாங்க. ஒரு நாள் எனக்கு இன்ப அதிர்ச்சி என் முன்னாடி ஒரு ரெண்டு பேரு வந்து நின்னது.

கண்ணுல கண்ணீர் தாரைதாரையாக வந்தது. அது எங்க அம்மாவும்,அப்பாவும் அந்த காணொளி காட்சி மூலமாக நான் எங்க இருக்குன்னு தெரிஞ்சிகிட்டு வந்தாங்க. எங்க அப்பா எங்க பாட்டி கால்ல விழுந்து ஆசிர்வாதம் வாங்கினார்.


பாட்டி என்னை அவங்க கையில ஒப்படைத்தார்கள்.உச்சி முகர்ந்த எங்க அம்மாவும், அப்பாவும் எனக்கு முத்தம் கொடுத்தாங்க அந்த மகிழ்ச்சியை நான் எப்படி தான் சொல்லப் போறேன்னு தெரியல உங்க கிட்ட. அதை உணர்ந்து பார்த்ததான் தெரியும் அதை வார்த்தைகளால் என்னால வடிக்க முடியல.

அன்னைக்கு நான் சம்பாதித்த பணத்தில் எங்க அம்மாவுக்கு ஒரு புடவையும் எங்க அப்பாவுக்கு வேட்டி சட்டையும் கொடுத்து அவர்கள் காலில் விழுந்து ஆசிர்வாதம் வாங்கினேன். அவர்கள் என்னைப் பார்த்த பார்வை உலகத்தையே வெற்றி கொண்டு வந்தால் எப்படி இருக்குமோ அப்படி இருந்தது அவங்க பார்வை.

இத்தனைக்கும் நடுவுல யூடியூப் சேனல்ல அதிகமாக பார்த்த நிகழ்ச்சி " பாட்டி பேரன் சமையல்" அப்படி என்று எனக்கும் எங்க பாட்டிக்கும் விருது கொடுக்கிறதா அறிவிச்சாங்க.

பேரறிவாளன் 18 மே 2022 யில் விடுதலை செய்யப்பட்ட செய்தியை கேட்டு பலர் கொண்டாடினார்கள் சிலர் வேதனை அடைந்தார்கள். இந்த நாளில்தான் எங்களுக்கு சமையலுக்காகவும் , சரியான முறையில் உணவை பகிர்ந்தமைக்காகவும் விருது வழங்கினார்கள். இதைப் பெரிதாக ஊடகங்கள் கொண்டாடின.

என் உற்றார், உறவினர் அம்மா, அப்பா இவங்க முன்னாடி அந்த விருதை வாங்கும் போது அந்த மகிழ்ச்சி என் கண்ணீர் துளிகளில் எட்டிப்பார்த்தது. ■




தி.கலையரசி எழுதிய இரண்டாவது கவிதைத் தொகுப்பு

"உன் பொய்களில் உண்மையாகிறேன்"

ஓவியங்களோடு கூடிய கஸல் தொகுப்பு நூலுக்கு
கவிஞர்.சிவநேசன் அவர்களின்

# மதிப்புரை

பொதுவாகவே எவ்வளவு எழுதினாலும் படித்தாலும் சலிப்பு தட்டாதவை காதல் கவிதைகள். சிலருக்கு கனவு சிலருக்கு நினைவு என ஏதோ ஒரு வடிவில் நிழலாகித் தொடரும் காதலை கஸல் வடிவிலானக் கவிதைகளாய் தனது இரண்டாவது தொகுப்பான 'உன் பொய்களில் உண்மையாகிறேன்' நூலில் கொண்டு வந்திருக்கிறார் தி.கலையரசி.

பெரும்பாலும் அவர் எழுதும் சமூக கவிதைகளில் அனல் தெறிக்கும் என்றால் காதல் ஒளிரும் இந்தக் குறுங்கவிதைகளில் நிலவின் வெளிச்சம்.

உதாரணத்திற்கு சில..

**ஓரிரு வார்த்தை பேசிவிட்டு**
**மௌனமாகிப் போகிறாய்**
**அதற்கு பிரசங்கமே நடத்தி விடுகிறது காதல்.**

**உயரம் தெரியாமல் பறக்கும் பட்டம் நான்**
**உன் விரல் நுனியில்**
**நூல்கண்டாய்ச் சுழல்கிறது விதி.**

**உன் புயலைக்கூட கடந்து விடுகிறேன்**
**உனதன்பின் தூறல்**
**எனை மூர்ச்சை ஆக்குகிறது.**

**என் கடவுள் நம்பிக்கையோடு**
**சாத்தான் சண்டை இடும்போதெல்லாம்**
**உன்னை காதலிக்கத் தொடங்குகிறேன்.**

**உன் ஞாபக இழைகளை நெய்கிறேன்**
**அதை ஆடையாக**
**போர்த்திக் கொள்கிறது பிரபஞ்சம்.**

காதல் கவிதைகள் எழுதுவதில் இருக்கும் ஆபத்து வரிகளில் கொஞ்சம் சறுக்கினாலும் அது வெற்றுப் புலம்பலாகவும் உளறலாகவும் ஆகிவிடக்கூடும். ஆனால் அதை அநாயசமாகக் கடந்திருக்கும் கவிஞர் பல இடங்களில் காதலை ஆன்மாவோடும் ஆன்மீகத்தோடும் தொடர்புபடுத்தி இருப்பது தொகுப்புக்கு நிறைவைத் தருகிறது.

நறுக்கு தெறித்தாற்போல வந்து விழும் கவிதைகள் பலவும் காலக்குப்பியில் தளும்பும் நினைவுகளைத் தொட்டு மயிலிறகாய் வருடுகின்றன.

கையடக்க வடிவமைப்பு, கவிதைகளுக்கு ஏற்ற சிறப்பான திண்டுக்கல் தமிழ் பித்தனின் ஓவியங்கள் என சிறப்பாக வெளிவந்திருக்கும் இந்த நூலின் விலை ரூ.120

வெளியீடு : படைப்பு பதிப்பகம்

கவிஞரின் எழுத்து மேன்மேலும் சிறக்க வாழ்த்துகள்!

**- ந.சிவநேசன்**

# வேதாளம் பதில்கள்

**தொடரும் கேள்விகளை கேட்கலாம்.**

இன்றைய சூழலில் விஞ்ஞானம் சிறந்ததா? மெய்ஞானம் சிறந்ததா?
கவித்தென்றல் சௌ.நாகநாதன்
சின்ன இரெட்டையூரணி

மெய்ஞானம்தான் சிறந்தது
விஞ்ஞானத்தின் வயது குறைவு

அதிர்ஷ்டம் இருந்தால் போதும் என்கிறார்கள். அப்போது திறமையால் எந்த பயனும் இல்லையா???
சுஜாதா அருணாசலம்

அதிர்ஷ்டம் ஒன்றிரண்டில் வேண்டுமானால் கை கொடுக்கலாம். திறமைதான் இறுதிவரைத் துணைவரும்

ஆர்வம் இருந்தும் வேலைப்பளுவினால் நேரம் கிடைக்காமல் தம்மை வளர்க்க இயலாதவர் பற்றி..
மகேஸ்வரி முருகையா, சாத்தூர்

அது அவரின் துரதிஷ்டம்

தாய்மொழி வழிக் கல்வி என்ற கருதுகோள் உயிரோடு இருக்கிறதா?
அன்புவல்லி தங்கவேலர்,
பட்டுக்கோட்டை

இருக்கிறது. உயிரோடு இருப்பதெல்லாம் நடமாடவேண்டும் என்ற அவசியம் இல்லையே

பச்சோந்தி எப்படி நிறம் மாற்றுகின்றது?
மெய்யன் நடராஜ், டோகா

அதன் மேல்புறம் அமைந்துள்ள போட்டானிக் படிகச் செல்களின் செயல்பாடுகளால்..

இன்றைய காலகட்டத்தில் தமிழ் நம்மை வளர்க்கிறதா நாம் தமிழை வளர்க்கிறோமா?
ஜெயசீலி தயாளன், ஈரோடு

தமிழை வளர்ப்பதாகச் சொல்லிக் கொண்டு நாம் வளர்கிறோம்

காதலிக்கும் போது இருக்கும் அன்பும் பாசமும் கல்யாணத்திற்கு பிறகு காணாமல் போவது ஏன்?
ராஜி கணேஷ், திருவாரூர்.

வேலைப்பளு அதிகமாவதுதான்

எத்திசை நோக்கிச் செல்கிறது இக்காலத்தமிழ்?
கு கதிரேசன் திருச்சி

நற்றிசை நோக்கி...

கவிதைகளில் புதிய வடிவங்களைப் படைப்பது தகுமா? அல்லது பழையனவற்றை மட்டுமே பின்பற்றிச் செல்ல வேண்டுமா ?
நஸீரா எஸ்.ஆப்தீன்
ஏறாவூர், இலங்கை

தமிழில் இல்லாத வடிவங்கள் இல்லை. அதனை முழுவதுமாக அறியாதவரே புதிய வடிவம் வேண்டுமென்பர்.

கோபம் ஏன் வருகிறது... வருவது ஆரோக்கியமானதா?
குழலி குமரேசன் தஞ்சாவூர்

எதிர்பார்ப்புகள் பொய்க்கும்போது கோபம் வரும்; கோபம் வருவது ஆரோக்கியமானது இல்லை.

# சித்தன் போக்கு.. சிந்தையில் தாக்கு

மூலப்பதிவிதுவோ.. மூவிரண்டு வயதினிதோ,
காலக் கணக்கினிலே கண்வழி விளைச்சலிங்கோ,
பால பாடமென பாவை சொல்லியவை,
சாலச் சிறந்தவையோ  சாத்தியமா கண்ணம்மா.

எண்சாண் வீதியிலே ஏழிரண்டு வாசலுண்டே,
மண்சூழ் காயமிது மகிழ்வுக்கு தவிக்கிறதோ,
கண்சூழ் காட்சியிலே கலையாத ஓவியமே,
பண்ணிங்கு பாலமுதோ பரிவுண்டோ கண்ணம்மா.

முத்துப்பல் சிரிப்பாலே முழுமதி யானவளே,
பித்தம் தலைக்கேறி பெருந்தீங்கு செய்தேனோ?
அத்தை மகளா நீ ஆரணங்கே கண்ணம்மா,
நித்தம் நெருப்பாகி நெஞ்சகம் கொதிக்கிறதே.

செந்தழல் விரிந்திங்கு செதுக்கிய சிலையா நீ,
வெந்தழல்  உணர்விங்கு வீரியம் கொள்கிறதே,
தந்திட மனமுண்டா தளிர்மேனி தவிக்கலையா?
முந்திய தாமரையாய் முளைத்தவளே கண்ணம்மா.

செம்பொன் சிலையா நீ சேர்ந்த நல்லுறவா நீ,
பைம்பொன் அழகுடனே பருவமலர் நீ தானே,
ஐம்பொன் மெருகேறி ஆடிவரும் திருத்தேரே,
எம்மனப் போக்கறிந்து எழுந்து வா கண்ணம்மா.

எட்டா நினைவெல்லாம் எட்டி எட்டிப் பார்க்குதடி,
விட்டிட  முடியலையே விளைந்தவளே புரிகிறதா,
ஒட்டி உறவாடிடவே உளம் நிறைந்து அழைக்கின்றேன்,
கட்டுடலும் காய்கிறதே கனிந்து வா கண்ணம்மா.

கொல்லன் உலை போல கொட்டிய கனவிங்கே,
அள்ளிடும் சேதாரம் அதிகமெனப் புரிகிறதா?
வெல்லும் வழிதேட வீரியப் போர் நடக்க,
கல்லும் கரைந்திடுமே.. கண்பார்ப்பாய் கண்ணம்மா.

ஊற்றுச்சுவை நீரோ.. உயிர்ப்பூ வரலாறோ,
மாற்றம் இல்லையடி மனதுள்ளே குழப்பமா?
தேற்றிய வாழ்விங்கே தேவை அறிந்திருக்க,
கூற்றில் பொய்யெதற்கு கொண்டவளே கண்ணம்மா.

# பரணி சுப சேகர்

வாழை மடலா நீ வளமையின் பொருள் தானே,
ஏழை மனதுள்ளே எதிர்பாரா வரவா நீ,
கோழை நானில்லை.. கோமகளே நீ யறிவாய்,
பேழை சந்தனமாய் பூத்தவளே கண்ணம்மா.

காற்றடைத்த பைக்குள்ளே கனவுஏன் கண்ணம்மா,
தோற்றுப் போக வேண்டாமே துணை யாகி மகிழ்வோமே,
மாற்றமில்லா மனதிங்கே மயக்கத்தில் நிற்கிறதே
ஆற்றலுண்டே உன்னிடத்தில் ஆட்டமினி தொடர்வோமே.

மாமன் பெற்ற மாணிக்கமே மனம் புகுந்தாய் கண்ணம்மா,
பூமணக்கும் கோவிலுக்கு பொடி நடையாய் போவோமா?
நா மணக்கும் நற்பாட்டு நாமினிது எழுதிடவே,
தாமதம் இனியெதற்கு தலை வாழை விருந்துனக்கு.

அந்தரங்க ராகத்தை அகத்துள்ளே வைக்காதே,
மந்திரத்தில் மாங்காய்கள் மடிமீது வாராதே,
சந்திரனைக் குழைத்தெடுத்து சந்தனமாய் பூசினாயா?
வந்ததோர் பொழுதிங்கு வந்து பார் கண்ணம்மா.


காட்டானை அழகிங்கோ கருவிழிகள் கருவண்டோ,
நாட்டமுடன் நீ யிங்கோ  நறுமணமே கண்ணம்மா,
கூட்டமில்லா நந்தவனம் குளிருக்கு இதமாக,
வாட்டமெல்லாம் போக்கிடவே வாலிபப்பூ பறிப்போமா.

உச்சிமுதல் பாதம்வரை உயிர்துடிப்பு நரம்புகளோ,
இச்சை கொண்டு எழுதிடவே இன்பப் பால் குடிப்போமா?
பச்சை வண்ண பசுஞ்சோலை பஞ்சு மெத்தை போட்டிருக்கு,
மிச்சமில்லா இரவாக மச்சம் பார்ப்போம் கண்ணம்மா.

மூக்குத்தி போட்டவளே முன்னழகு அழைக்கிறதே,
வாக்குறுதி நினைவிருக்கா வாழ்ந்து விட வேண்டுமடி,
தாக்கீது வேண்டாமே தளர்ந்திடாதே கண்ணம்மா,
ஆக்கமொன்று நமக்கென்று அகத்துள்ளே புரிகிறதா.

காமப் பூ பூத்திருக்கா கனவெல்லாம் இனிக்கிறதே,
மாமன் மகள் நீ தானே மையலுண்டா கண்ணம்மா,
தேமதுரக் களியாட்டம் தேவதையே உன்னாட்டம்,
நாமணக்கும் நற்கவிக்குள் நங்கையே  விளையாடு.

தொடர்ச்சி அடுத்த இதழில்.....




மீ. தங்கவேலனார்
01.07.1918 - 20.10.1996



தமிழ்ச்சிட்டு -
தென்றல் கவி



தங்க அன்புவல்லி



பெர்னாட்ஷா



# வேரும் விழுதுமாய் தமிழ் ஆலமரங்கள்

- **தங்கவேலனார்**
- **தங்க அன்புவல்லி**
- **பாவேந்தன்**
- **தமிழ்ச்சிட்டு - தென்றல் கவி**
- **பெர்னாட்ஷா**

தமிழ்நெஞ்சம் அமின் நேர்காணலில் – பா. பாவேந்தன்

வணக்கம்!

சிறந்த தமிழறிவும் ஆங்கிலப் புலமையும் அரசியல் கூர்நோக்கும் உடையவராய்த் தங்களைத் தமிழ்நெஞ்சம் வாசகர்களுக்கு அறிமுகம் செய்வதில் மகிழ்ச்சி அடைகிறேன் தங்கள் நேர்காணலுக்குச் சில வினாக்களை முன்வைக்கிறேன்.

● தங்களை அறிமுகம் செய்துகொள்ளுங்கள்.

■ வணக்கம். மகிழ்ச்சி. நன்றி.

முதலிலேயே உங்களுக்கும், தமிழ்நெஞ்சம் ஆசிரியர் குழுவுக்கும், வாசகர்களுக்கும் என்னுடைய முன்வைப்பு ஒன்று உண்டு. தமிழ் நெஞ்சத்தில் நேர்காணல் தந்திருக்கும் சான்றோர் பெருமக்கள் வரிசையில் என்னை வைத்துக் காணல் அடாது. எடுத்துக்காட்டாய்க் கொள்ளுமளவு எல்லாம் எந்த வகையிலும், துறையிலும் நான் வெற்றியாளன் அல்ல என்பதை வேறு யாரையும் விட நான் நன்கு அறிவேன். வாழ்வெனும் ஓட்டத்தை மற்ற எல்லாரையும் போலத்தான் நானும் தொடங்கினேன். கடந்த ஐம்பத்து ஐந்து ஆண்டுகளில் என்ன நிலைமை இன்று எனத் தமிழ்நெஞ்சம் அளித்த வாய்ப்பின் வாயிலாக ஒரு மீள்பார்வை என்ற வகையில் மட்டுமே எனது கருத்துகளை உங்களுடன் பகிர்ந்து கொள்ளுகிறேன்.

நான் பட்டுக்கோட்டையில் பிறந்தேன். முதல் 14 ஆண்டுகள் வளர்ந்த நிலம் என்னும் நன்றி உண்டு. மற்றபடி சொந்த ஊர் என்றெல்லாம் சொல்லிக்கொள்ள இயலாது. விழுந்த இடத்தில் முளைத்துக் கொள்ள விதிக்கப்பட்டவர்களில் நானும் ஒருவன். அது விளைநிலமோ, சுவர் விரிசலோ, கிடைத்த இடம் கிடைத்ததற்கு; முளைத்த அளவு முளைத்ததற்கு. நிலஉரிமை அற்ற சேவைக்குலங்களின் வாழ்க்கை முறை அவ்வளவுதானே?

அதனால்தானோ என்னவோ யாதும் ஊரே என்ற ஈராயிரம் ஆண்டுக்காலக் குரல் நாங்கள் உவந்து ஏற்பதாகவும், அன்றும் இன்றும் அது எங்களுடையதுதான் என்று உரிமை பாராட்டுவதாகவும் அமைந்திருக்கிறது என்று எண்ணுகிறேன். எனது தற்போதைய இருப்பு திருச்சி அருகே உள்ள மாத்தூரில்.

● உங்கள் கல்வி பட்டயப்படிப்பு என்று அறிகிறோம்
பட்டங்கள் என்று எதனையும் தேர்ந்து கொள்ளாதது ஏன்?

■ நாற்பது ஆண்டுகளுக்கு முன்பு 1982 பட்டயப் படிப்பு மதிப்பு வாய்ந்ததாகவே இருந்தது. மாநிலம் முழுமைக்குமே 15 அரசுக் கல்லூரிகள் மட்டுமே அக்கல்வியைத் தந்தன. நல்ல மதிப்பெண் பெற்ற, நடுத்தர வகுப்பு மாணவர்களுக்கு வேலைவாய்ப்பு அதிகம் தருகிற படிப்பு என்ற எண்ணத்தில்தான் என்னை ஆற்றுப்படுத்தியோர் அதனைப் பரிந்துரைத்தனர். ஆனால் நான் சேர்ந்ததற்கு அடுத்த ஆண்டே (1983) அரசுக் கல்விக் கொள்கை மாறிவிட்டது. தனியார் கல்லூரிகளுக்கு பெரும் அளவு அனுமதிகள் வழங்கப்பட்டன. காசுக்கு இடங்களை விற்றுப் பணமீட்டக் கிடைத்த அரும் வாய்ப்பாக தனியார் துறை ஏராளமான கல்லூரிகளைத் தொடங்கியது. அதே வேளையில் அரசு படித்தவர்களுக்கு வேலை தருவது தன் கடமையில்லை என்று விலகிக் கொண்டது. நான் படித்துக் கொண்டு இருக்கும் போதே தொடங்கி விட்ட எல்லா வகைப் பட்டயப் படிப்புகளின் மதிப்புச்சரிவு மிகச்சில ஆண்டுகளுக்கு உள்ளாகவே அப்படிப்புகள் அனைத்தையுமே செல்லாக்காசாக்கி விட்டது.

தாயார் தங்க அன்புவல்லி, தங்கை தமிழ்ச்சிட்டு - தென்றல் கவி, தம்பி பெர்னாட்ஷா மற்றும் குடும்பததாருடன் பா.பாவேந்தன்.





இல்லறத்துணையுடன் அன்று...

நான் படித்து முடித்த உடனேயே தனியார் துறையில் வேலைக்குச் சேர்ந்து விட்டேன். வேலையிலிருந்து கொண்டே பகுதி நேரமாய்ப் படித்துப் பொறியியல் பட்டம் பெறத் தேவையான உழைப்பு, நேரம், பொருள், அனைத்தும் செலவிடுவது இயலாதது ஆகிவிட்டது. நான் சேர்ந்திருந்த ஆலையில் பட்டப் படிப்புக்குப் பெரிய தேவையிருக்கவும் இல்லை. எனக்கும் பொறியியல் பட்டம் பெறுவதில் பெரிய நாட்டமில்லை,

அப்போது நான் சார்ந்து இருந்த அரசியல் இயக்கத்தின் பல தோழர்கள் முதுகலை, முனைவர் பட்டங்கள், படிப்புகளைத் துறந்துவிட்டு முழுநேர மக்கள் பணிக்கு வந்திருந்தனர். அவர்களோடு இணைந்து வேலை செய்த போது பட்டங்களைப் பெறுவதற்காகப் படிப்பது நாணமாயும் இருந்தது. இருந்தாலும் சென்னைப் பல்கலைக்கழகத்தில் அஞ்சல் வழியில் ஆங்கில இலக்கியத்தில் இளங்கலை பட்டம் பெற்றேன். மதுரை காமராசர் பல்கலைக்கழகத்தில் தத்துவம் முதுகலைப்பட்டம் சேர்ந்து ஓராண்டு மட்டுமே முடித்தேன். முறையான பட்டங்கள் பெறுவதைத்தான் கைவிட்டேனேயன்றிப் பயிலுவதை இன்றளவும் கைவிடவில்லை. ஒருவகையில், இதுதான் என் துறை என்று வரம்பிட்டுக் கொள்ளாது, எல்லாவற்றையும் முனைந்து படிக்கிற வழக்கம் அதன் உடன் விளைவுதான்.

● உங்கள் பெயருக்கே ஓர் அதிர்ச்சி மதிப்பீடு உண்டு. நீங்கள் உணர்ந்ததுண்டா அந்தப்பாவேந்தர் வழி நீங்கள் தேர்ந்தது உண்டா?

■ நீங்கள் ஒன்றை ஒத்துக்கொள்ளவே வேண்டும். பாவேந்தன் என்று நானே எனக்குப் பெயர் வைத்துக் கொண்டிருக்க முடியாதுதானே! அப்பெயரின் பொருள்



தாயார் புலவர் தங்க அன்புவல்லி அவர்களுடன் இன்று...

அறிந்த உடன்  இது என்னடா நமக்குப் போய் இந்தப் பெயரா என்று அதிர்ந்தது முதலில் நான்தான். பாரதிதாசனின் தமிழை, அழகியலை, உணர்வை, காதலை, மானிடப் பரப்பின் மீது இருந்த அக்கறையை, கவிக்களத்தின் விரிவை, தமிழ் மரபின் சாரமனைத்தும் உள்வாங்கிப் புது மரபு சமைத்த திறத்தை எல்லாம் பாவேந்தரின் கவிதைளில் தோய்ந்து, அறிந்து, உணர்ந்து என் அம்மா புலவர் தங்க அன்புவல்லி அவரது முதற்பிள்ளைக்குச் சூட்டி மகிழ்ந்த பெயர் அது.

இப்போது போல அன்றி அக்காலத்தில் அப்பெயர் பரவலாய்த் தெரியாத பெயர்தான் என்றெண்ணுகிறேன். பாவேந்திரன் பாலேந்திரன் பவேந்தன் பாவேடன் பாவந்தான் என்றெல்லாம் அழைக்கப்பட்டிருக்கிறேன். பெயரின் பொருள் என்ன என்று என்னிடமே கேட்பார்கள். பெயர் கேட்ட உடனேயே' யாரடா நீ' என்று வினவி இனங்கண்டு கொண்டவர்களும் உண்டு. அவர்கள் அடுத்தது 'எங்கே அவருடைய பாடல்களில் உனக்குப் பிடித்தவற்றைச் சொல்' என்று தொடங்கிவிடுவார்கள். ஆகவே அதிர்ச்சி மதிப்பீடு நான் உணர்ந்தது உண்டு! உண்டு!

இன்று இணையத்தில் பல இளைஞர்களுக்குப் பாவேந்தன் என்ற பெயர் வைத்திருப்பது கண்டு மகிழுகிறேன். இரண்டு பாவேந்தன்கள் எனக்கு முகநூல் நண்பர்கள் ஆக இருக்கிறார்கள். . பாரதிதாசனைத் தமிழகம் எந்த அளவு தன் சமூக வாழ்வியலுக்குள் ஏற்றிருக்கிறது என்பதன் ஓர் அலகே அது.

இங்கே மற்றொன்றையும் பதிவு செய்யவே வேண்டும். பாரதியின் நூற்றாண்டு விழா 1982ல் வந்தது. அரசு விழாக்கள் ஒளி-ஒலிக்காட்சிகள்,

புகைப்படக் காட்சிகள், பள்ளிகளில் போட்டிகள், பரிசுகள் என ஓராண்டுக்காலம் தமிழகமெங்கும் கொண்டாடித் தீர்த்தார்கள். அப்போது பாரதியார் கவிதைகள் நூல் கையடக்கப் பதிப்புகள் உள்ளிட்டு பல வடிவுகளில், நேர்த்தியான அச்சோடு, மிகக்குறைந்த விலையில் பரவியது .

அடுத்த பத்தாமாண்டில்-1991- பாரதிதாசன் நூற்றாண்டு விழாவும் வந்து அவ்வண்ணமே நடந்திருக்க வேண்டும்தானே? அவரது நூல்களும் பரவியிருக்க வேண்டும்தானே என்றால் அவ்வாறு நடக்கவில்லை. ஒரு சடங்கு போல அவரது படத்துக்கு அமைச்சர்கள் மாலை அணிவித்தது, பத்திரிக்கைச் செய்தி வெளியிட்டது, இரண்டொரு விழாக்களை நடத்தியதோடு அது கடந்து போய் விட்டது.

வானொலியில் தண்டபாணி தேசிகரின் துன்பம் நேர்கையில், , சீர்காழியின் புதியதோர் உலகம் செய்வோம், டி எம் எஸ் சின் சங்கே முழங்கு, சித்திரச் சோலைகளே, சுசீலாவின் தமிழுக்கும் அமுதென்று பேர் எனச் சில பாடல்களைக் கேட்டதுண்டு,- திரை இசையில் மொத்தமாகவே 33 பாடல்கள் மட்டும்தான் வந்தன என்று அறிகிறேன் - இளையராஜா, ரகுமானின் இசையில் பாரதிதாசன் பாடல்கள் எதுவும் வந்ததாக நினைவில் இல்லை. மக்கள் கலை இலக்கியக் கழகம் தஞ்சையில் பெரிய விழா எடுத்து பாடகர் கோவன் கலைக்குழு பாடிய ஓர் ஒலிநாடாவும் குறுந்தகடும் வெளியிட்டது. திரை இசை, வானொலி, இசைத்தகடுகள், ஒலி நாடாக்கள், குறுந்தகடுகள் எனத் தொழில் நுட்பங்கள் விரைந்து மாறிய ஒரு காலப் பகுதியினூடே வளர்ந்தவன் என்பதால் அவற்றில் அவரை இருட்டடிப்பே செய்தார்கள் என்று துணிந்து .சொல்லமுடியும்.

நூற்றாண்டுகளுக்கு முந்திய அச்சுத் தொழில்நுட்பம் சார்ந்தே அவரைப் பயில முடிந்தது. இன்றளவும் அவர் பெயரை வைத்துக் கொண்டிருக்கும் என்னிடமே அவரது முழு நூல் தொகுப்பு கிடையாது. குயில் ஏட்டில் அவர் எழுதிய கட்டுரைகள் ஒன்று கூட இல்லை. வீட்டில் பார்த்த பழைய குயில் ஏடுகளின் நினைவு மட்டுமே உள்ளது. இணையம் வந்தபின்புதான் சில உணர்வாளர்கள், அவரது எல்லா நூல்களையும் இல்லை என்றாலும், பல நூல்களைப் பொதுவெளிக்கு கொண்டுவந்து அந்தக் கலி தீர்த்தனர்.

பாரதிதாசனின் நெறி என்பது தமிழுணர்வு, பெரியாரியம் நாத்திகம், தமிழ்த்தேசிய இன உணர்வு, திராவிடநாடு பொதுவுடைமை, மானுடம் என்று பல படிநிலைகளில் இயங்கியது. தொகுக்கப்பட்டு இதுதான் பாவேந்தரின் கருத்தியல் என்று எந்த நூலும் வந்து உள்ளதாக எனக்குத் தெரியவில்லை. அவர் போற்றிய சுயமரியாதை இயக்கத்திலிருந்து அவரைப் உயர்த்திப் பிடிக்கும் குரல்கள் தோழர் அருள்மொழி சுப.வீ எனச் சிலரோடு நிற்கிறது. திராவிட இயக்கங்களின் தொடக்க காலத்தில் இருந்த சிலரோடு அவரைச் சுட்டிப் பேசுவது குறைந்து, குறைந்து, இன்று நின்றே போய்விட்டது. பொதுவுடைமை இயக்கங்கள் மிகச் சிரத்தையோடு பாரதியைத்தான் கொண்டாடின. பாரதிதாசன் எதிர்க்கட்சிக் கவிஞராகிப் போனார். இவர்களிடையே, பாவலரேறு பெருஞ்சித்திரனார், தென்மொழி இதழ் வழிவந்த முதல் தலைமுறை தமிழ்த் தேசியம் மட்டுமே உணர்வெழுச்சியுடன் ‘சொல்லிய பாட்டின் பொருளுணர்ந்து’ சொல்லி இறுதி வரை அவரைப் போற்றிக் கொண்டாடியது. இன்று நிலை பெற்று உள்ள தமிழ்த் தேசிய இயக்கங்களுக்கு திருட்டு திராவிடம் என்று பேசுவது நல்ல பலனீட்டித் தந்து கொண்டு இருப்பதால் பாரதிதாசனுக்குக் கிராக்கி இல்லை என்றாகிவிட்டது. இலக்கிய உலகில் இன்று அவரது

பாடல்களை ஆய்வு செய்து பேசுவதற்கே ‘அவரது இறைமறுப்பு பெரியார் ஆதரவு பெரும்தடை. அவர் பாரதி போன்ற கவிஞனில்லை. ஏன் அவருடையதெல்லாம் கவிதையே இல்லை’ என்றெல்லாம் கூறக்கூட சில பீடங்கள், ‘ஆசான்கள்’ தலைப்பட்டிருக்கிறார்கள்.

எனது அரசியல் கருத்தியலைக் கட்டமைத்த தொடக்கமே பெரியாரிலிருந்து என்பதால் அவரை அச்சட்டகத்தோடு சேர்த்து இணைத்துக்கொள்ள எந்தத் தடையும் இருக்கவில்லை. என் குடும்பத்தின் இலக்கியச் சூழல் அவரை எனக்குத் தேவையான அளவு அறிமுகம் செய்துமிருந்தது. தொடர் மார்க்கெட்டிங் உத்திகளால் பாரதியியல்தான் பரவலாக எல்லாருக்கும் புகட்டப்பட்டு இருந்தது. இன்று அவருடைய நெறி என்ன என்று நானே அமைத்துப் பார்க்க முற்படுகையில் பெரிதும் உதவுவது எனது அம்மாவும் குடும்பச் சூழலும் ஊட்டிய அறிவே. இன்றும் பாரதிதாசனை விரித்துரைத்து விளக்க என் அம்மாவைப் போல வெளியிலும் இயக்கங்கள் சாராத பல தமிழ்ச்சான்றோர்கள் இருப்பது பெரிய நிறைவுதான்.

● பொதுவுடைமைக் தத்துவத்தில் ஆழ்ந்த பற்றுறுதியும் செயல்பாடும் கொண்டிருந்திருக்கிறீர்கள். தங்கள் பணிகளால் தங்கள் இலக்குகளை அடையமுடிந்திருக்கிறதா?

■ இலக்குகளை அடைய முடியவில்லை என்பது வெள்ளிடைமலை. தத்துவத்தில் பற்றுறுதி, செயல்பாடு குறித்துச் சில கருத்துகள் சொல்லுகிறேன்.மக்களுக்குப் பொதுவுடைமைத் தத்துவத்தின் மீதான பற்றுறுதி மாறுமா அல்லது குறையுமா இல்லாமலே போய் விடுமா?

.

ஒருசிறு விழுக்காட்டினரிடம் தொடர்ந்து பொருள் குவிந்துகொண்டே




செல்கிறது. நேரெதிர் முனையில் வறிய மக்கள்தொகை கூடிக் கொண்டே போகிறது. OXFAM நிறுவனம் கொடுத்த ஓர் அறிக்கை இந்தியாவில் 2017ல் பணக்காரர்களான 1% பேருக்கு நாட்டில் உருவாக்கப்பட்ட செல்வத்தில் 73% சென்றது. அதே சமயம் 67 மில்லியன் இந்தியர்களின் செல்வம் 1% மட்டுமே அதிகரித்தது என்கின்றது. இந்த நிகழ்ச்சிப்போக்கு இன்றைய ஆட்சி அரசியல் போட்டியில் உள்ள கட்சிகள்/ தத்துவங்களை கடுமையாக கேள்விக்குள்ளாக்குகிறது. பொதுவுடமைத் தத்துவத்தைத் தவிர வேறெதுவும் இந்த நிலையை மாற்றும் அரசியல்திட்டத்தை முன்வைக்கவில்லை. இந்த முரண் தீரும் வரை அல்லது சாத்தியமான வேறொரு மாற்றைத் தத்துவங்கள்/இயக்கங்கள் காட்டும் வரை மக்களுக்குப் பொதுவுடமைத் தத்துவத்தின் மீதான நம்பிக்கை, பற்றுறுதி மறையாது. மாறாது.

பற்றுறுதி கொண்டிருந்தீர்கள் என்று

இறந்தகாலத்தில் வினவுகிறீர்கள். இருந்தேன், இருக்கிறேன், எதிர்காலத்திலும் கூட அதே பற்றுறுதியுடன் இருப்பேன் என்பது என் விடை.

இதன் அடுத்த பகுதி செயல்பாடு குறித்த உங்கள் கேள்வி. இப்போது இருக்கிற குழுக்கள் கடந்த காலத்தில் காட்டிய திட்டங்கள், வழிமுறைகள் வெற்றியடையவில்லை. அதன் காரணங்கள் என்ன என்று அறிந்து மாற்றிக் கொள்ளவும் இல்லை. தொடர்ந்து மார்க்சின் லெனினின் படைப்புகளில் ஏதோ ஒரு வரியைத் தவறாகப் படித்துவிட்டதால்தான் இலக்குகளை அடையமுடியவில்லை என்றே நம்புகின்றன. அதற்கு பிறரது நூல்களைப் பாராமல் ஒதுக்கி வைத்துவிட்டு மறுபடி மறுபடி அவர்களது மூல நூல்களைப் பயில்வது மட்டுமே தீர்வென்றும் சொல்லுகின்றன. சிலர் மாற்று என்ற பெயரில் ஸ்டாலினுக்கு மாற்றாக ட்ராட்ஸ்கி, காவுத்ஸ்கி என்று அதே காலத்தின் சாம்பல்களைத் தீற்றிக் கொண்டு இருக்கிறார்கள். இன்னும் சிலர் பின் நவீனத்துவம் என்ற பெயரில் எந்த வகையான கூட்டு முன்னெடுப்பும் கூடவே கூடாது,பெருங்கதையாடல், பயனில்லை என்று எல்லாவற்றையும் விளையாட்டாகக் கட்டுடைத்துச் சிதற அடிப்பது என்று ஏதோதோ பினாத்துகிறார்கள். எங்கேயோ மந்திரத்தைத் தவறாகச் சொல்லிவிட்டதால்தான் வேள்வியின் பயன் கிட்டவில்லை என்று சாதிக்கும் மனநிலைதான் இயக்கங்களின் பெரும்போக்காக இருக்கிறது. நான் சொல்வது சரியா நீங்கள் சொல்வது சரியா என்று கேட்டால் இலக்கைச் சென்று அடையாததால் இருவருமே தவறு என்று மட்டும்தான் சொல்ல முடியும். ஓடியவர்கள் களைத்துப் போனால். புதியவர்கள் அவர்கள் இடத்தை நிரப்புவார்கள். சரியான ஒரு வழிமுறையை கண்டு பிடித்து வென்ற பின் கடந்த காலத்தில் எப்படியெல்லாம் 99 தவறான வழிகளின் மூலம் எண்ணிய முடிவுக்கு சென்று சேராமல் போய் இருந்திருக்கிறோம் என்று அனுபவமாகத் தொகுத்துக் கொள்வார்கள். எனக்கு விடை தெரியவில்லை என்றால் கேள்வி தவறு என்று பொருள் கொள்ள முடியாதல்லவா? அதுபோலத்தான். கேள்வி இன்னும் முழு உயிர்ப்போடுதான் இருக்கிறது. சரியான விடை கிடைக்கும் வரை அது இருக்கவே செய்யும். தனிப்பட்ட முறையில் இயக்கத்தில் என் செயல்பாடுகள் நின்று போனதற்கு இது முழுக்காரணம் இல்லை என்பதையும் சேர்த்துத்தான் சொல்லுகிறேன். இதற்குமேல் இங்கே இதனை விளக்கி உட்புக வேண்டாம் என்று கருதுகிறேன்.
.

● தமிழ் இலக்கியம் செய்யுள்களால் அரசு நடத்தி இலக்கணம் சிறையென்று வசனகவிதைக்கு வந்து இப்போது புதினங்களால் புதுநடைபழகி வருவது பற்றி என்ன சொல்கிறீர்கள்

■ எந்த இலக்கியத்திலும் எல்லா வடிவமும் அதை நுகர்வோருக்காகவே அமைக்கப்படுகிறது. இலக்கண விதிகளின்படி செய்யுள் வடிவம் படைக்கவும், அதை நுகரவும், தேவையானோர் இருந்தபோது அந்த வடிவம் போதுமானதாக இருந்தது. நுகர்வோர் பெரும் அளவு கூடும் பொழுது அவர்களது தேவைக்கேற்ப புதிய தளர்வான வடிவங்கள் தோன்றின. அச்சு ஊடகம் தோன்றிய பின்பு முதலாளித்துவ வளர்நிலைக் காலத்தில் பெரும் இலக்கிய உற்பத்திக்கான தேவை எழுந்தது. புதினம் என்ற வடிவம் அதன் சமூக உற்பத்தித் தன்மைக்குப் பொருத்தமானதாக இருந்தது. வடிவங்களில் மாற்றம் தோன்றுவது மொழிக்குக் கேடு என்று நான் கருதவில்லை. மொழிக்கு அந்த ஆற்றல் இருப்பதால்தானே எப்படிப்பட்ட புதிய வடிவமும் சாத்தியமாகிறது? ஒரு புது வடிவம் தோன்றிவிட்டால் அதற்கு முந்தைய வடிவங்கள் முற்றிலும்

அழிந்து போய் விடும் என்றெல்லாம் சொல்வதற்கில்லை. புதினம் என்ற வடிவம்தான் முற்போக்கு என்று நம்ப இடமில்லை. பழைய வடிவங்களின் செழுமையான படைப்புகள் சமூகத்தால் மறந்துபோகப்படுவதும் இல்லை. அப்படி மறந்து மறைந்து போய்விடும் என்றால் நாம் ஏன் பாவேந்தர் குறித்து இன்றும் பேசுகிறோம்?

● தமிழ்ப்புதினங்கள் நாட்டார் வழக்கென்றும் வட்டார வழக்கென்றும் தலித் இலக்கியமென்றும் இட ஒதுக்கீடு பெறுவது போல் இருக்கும் தற்காலப் போக்கிற்கு என்னசொல்வீர்கள்?.

■ தமிழ்ப் புதினங்கள் காவிரிக் கரையின் மேன்மைகள், காற்றில் மிதந்து வந்த கல்யாணி ராக ஆலாபனை, தளிர் வெற்றிலைகளை மெல்லுவதில் உள்ள சுவை, பித்தளை டம்ளரில் தரப்பட்ட டிகிரி காப்பி, சூடே ஒரு ருசி சிவப்பே ஒரு அழகு, ரீதிகௌளையின் சொகுசு வளைவு, இதயம் என்று சொல்வதை விட ஹ்ருதயம் என்பது நெருக்கமாக இருக்கிறது என்றெல்லாம் தகுதி அடிப்படை இலக்கியங்களைப் 'படைத்துக்' கொண்டு இருந்தன அல்லவா? அதில் இருந்து எந்த ஒதுக்கீடு பெற்றும் அல்ல, மாறாக ஒதுங்கி நாட்டார் வழக்கு, வட்டார வழக்கு, தலித் இலக்கியம், என்றெல்லாம் மாறி வரத் தற்காலம் வரை ஆகிவிட்டது என்றும் சொல்லலாமே?

சமூகத்தின் பெரும்பான்மையான பிரிவுகளுக்குத் தனியே இலக்கியங்கள் உண்டா? மொத்த இலக்கியமும் ஒரே மாவு. அவித்துப் போட்டால் இட்லி சுட்டுப் போட்டால் தோசை என்றுதானே இருந்தது? வந்திருக்கும் இலக்கியங்களே போதும் போதும் என்று சித்தரித்து முடித்து விட்ட அதே பழங்கதைகளுக்குப் பதில் வேறு கதைகளையும்தான் கேட்போமே! ஒரு கி.ராஜநாராயணன் மூலம் மட்டுமே



மனைவி மக்களுடன் பா. பாவேந்தன்

நாட்டார் வழக்கின் ஆழமும் பொருளும் நாம் உணரவில்லையா? இமையமோ கண்மணி குணசேகரனோ, நடராஜன் காளிதாசோ உலகில் இப்படியும் உண்டு என்று நமக்கு அதிர்வூட்டி அறிவுறுத்தவில்லையா? என் கருத்தில் சமூகத்தின் செயல்பாடுகளில் நேரடியாகச் சிக்கி உழன்று கொண்டு இருக்கின்ற பெரும்பகுதியானோரின் இலக்கியம் இன்னும் வரவேவில்லை. அதனால் கொஞ்ச காலமாவது முழுவதுமே அவர்களுடையதாகவே வந்தாலும் தப்பில்லை..

● புனைவு அபுனைவு என்ற வகையை விளக்குங்கள்.

■ 'பொய் புகலேன் புனைந்துரையேன் சத்தியம் புகலுகின்றேன்' என்று வள்ளல் பிரான் உருகுவார். உண்மையை ஒருநிலையிலும் பொய் புனைவு என்பனவற்றை எதிர்நிலையிலும் வைத்துக் காணுகிறார் என்போம். பொய் நடந்ததற்கு மாறாகக் கூறுவது. புனைவு நடக்காததை நடந்ததாகக் கூறுவது அல்லது நடந்ததைக் கூட்டி / குறைத்துக் கூறுவது என்று வைத்துக் கொள்ளலாம்தானே? புனைவு என்றால் அலங்கரித்துக் கொள்ளுவது, இருப்பதைக் காட்டிலும் கூட்டிக் கொள்வது, தளைப் படுத்துவது - பொய்படும் ஒன்றோ புனைபூணும் கையறியாப் - பேதை வினைமேற் கொளின் என்று வள்ளுவர் சொல்லுகிறாரே? பேதை ஒருவன் வினை

செய்யப் புறப்பட்டானேயாகில் ஒன்றா பொய்யாகி (தவறாகி) விடும், மாட்டியும் கொள்ளுவான். சிறைப் படுவான். அவன் சொன்னதுக்கு நான் என்ன புனையா? பொய்யும் புனைசுருட்டும் என்றெல்லாம் மக்கள் வழக்கில் உண்டு. உயர்த்திக் காட்டுதல் - வசிட்டனே புனைந்தான் மௌலி - என்று பலவாறாக புனை புனைவு கையாளப்படுகிறது. ஆகவே புனைவு என்பது இன்றைய காலத்தில் இலக்கியத்தில் சுவைக்காக ஏற்றியும் கூட்டியும் உரைக்க அனுமதிக்கப்படும் இடத்தைக் காட்டுகிறது. fiction என்று ஆங்கிலத்தில் சொல்லுவது.

அ-புனைவு என்பது தமிழ் இலக்கணத்துக்குட்பட்டதா என்பது தெரியவில்லை. வடமொழியில் சுபம் அசுபம், மங்களம் - அமங்களம், க்ரமம் - அக்ரமம் (முறையாகச் செய்வது - முறையின்றிச் செய்வது) என்று அ எதிர்மறை முன்னொட்டாய் வரும். non-fiction என்பது பொதுப் பொருளில் மெய்யானது கற்பனை கலவாதது. கதை என்றால் கற்பனையானது fiction. கட்டுரை என்று சொல்வது non-fiction.

பின்நவீனத்துவத்தில் எல்லாமே fiction தான் என்பர். அவர்களுக்கு எல்லாமே கட்டி அமைத்த உரை என்னும் பொருளில் கட்டுரைதான். கட்டுரை உண்மை என்பதற்கு எதிர்ச்சொல் அல்ல. உண்மை என்பதே கட்டி அமைக்கப்பட்டதுதான் என்பார்கள்.

Fact + Fiction = Faction என்றொரு வகை உண்டு. உண்மையாக இருந்தவர்களிடையே நடக்கும் உரையாடல்களைப் புனைந்து சொல்லும் ஒரு முறை. நார்மன் மெயிலர் என்பவரின் Armies of the Night என்ற ஒரு புதினத்தை creative non-fiction என்ற வகையென்று சொல்லுகிறார்கள். அதை எப்படி மொழியாக்கம் செய்வது என்றே எனக்குப் பிடிபடமாட்டேன் என்கிறது. புனைந்துரைத்த கதையல்ல என்றா கதையில்லாக் கதை என்றா? அந்த நூல் இங்கே கார்முகில் என்றொரு நூலகத்தில் கண்டதுண்டு. வரலாறு புதினமாக, புதினமாக வரலாறு History as Fiction, Fiction as History என்று அட்டையில் எழுதியிருக்கும். பொதுவாக அவரது கதைகள் மிக நீளமாக இருக்கும். இந்தக் கதை நீளமானது இல்லை. ஆனால் நான் படித்ததில்லை.

இந்தப் புதுவகைகள் எல்லாம் கொஞ்ச காலத்துக்கு பரபரப்பாக இருக்கும். அப்புறம் புதினம் என்றே சொல்லி விடுவார்கள். மெயிலரின் நூலோ 1967 ல் வெளிவந்தது. ஆனால் நூலகங்கள் புதினம் என்ற வரிசையில்தான் வைத்திருக்கும். அ-புனைவு, மாய எதார்த்தம் Magical realism என்பது போல ஏற்கனவே ஒரு கருத்தின் எதிர்மறை சொல்லுக்கு இன்னொரு எதிர்மறை முன்னொட்டை இணைக்கிற புத்துருவாக்கச் சொல் neologism. மாய எதார்த்தம் காப்ரியல் கார்சியா மார்க்குவெசின் ஒரு நூற்றாண்டுத் தனிமைக்குப் பிறகு மிகப் பரபரப்பான ஒன்றாய் இருந்தது. சல்மான் ருஷ்டியின் புதினங்களில் மாய எதார்த்தம் என்ற தலைப்பில் பல ஆய்வுகள் உண்டு. நானும்கூட ஒருவருக்கு எழுதிக் கொடுத்திருக்கிறேன். இப்போது வரும் ருஷ்டியின் புதினங்கள் / நூல்களில் மாய எதார்த்தம் என்று அட்டையிலேயே அறிவிப்பது இல்லை.

● பழந்தமிழ் செவ்வியல் மரபு பற்றிய தங்கள் கருத்து என்ன

■ தமிழின் இலக்கியங்கள் நமக்குக் கிடைத்திருக்கும் அளவில் கூட உலகின் தலைசிறந்த இலக்கியங்களின் வரிசையில் வைத்துப் போற்றவேண்டியவை. அவற்றைத் தேடித் தேடி எடுத்துப் பதிப்பித்த தமிழ்த் தாத்தா உ.வே.சா விற்குக் கட்டாயம் இன்றைய தமிழர்கள் கடமைப் பட்டிருக்கிறோம். அதே சமயம் அவருக்குச் சுவடிகளைக் கொடுத்து

உதவ அத்தனை நூற்றாண்டுகளாய் அந்த நூல்களைப் போற்றிப் பாதுகாத்து வைத்திருந்த அந்தப் பெயரறியாப் பெருந்தகைகளை நாம் மறந்து விடுகிறோம். நமது மரபை நமக்குக் காத்துக் கையளித்த அந்தப் புலவர் பெருமக்கள்தான் நமக்குக் குலசாமிகள். மூலவர்கள். மகோ மகோபாத்யாயர் புதிய கோபுரம் எழுப்பிக் குடமுழுக்கு செய்து தந்தார் என்று சொன்னால் அது நாள் வரை நம் தெய்வங்களைக் கரையான் தின்ன விடாது காப்பாற்றியவர்கள் பங்கையும் சேர்த்துத் தானே சொல்ல வேண்டும்?. இன்னும் கொஞ்சம் விளக்குகிறேன். .

எகிப்திய வரை எழுத்துகள் hieroglyphs எழுதிய பாப்பரைஸ் சுருள்கள் மலை போன்ற பெரும் பிரமிடுகளின் உள்ளே புதைந்து 4500 ஆண்டுகள் காக்கப் பட்டிருந்தன. சுமேரியர்களின் ஆப்பெழுத்துகள் மண்ணில் புதைந்து காக்கப் பட்டிருந்தன.. பத்தொன்பதாம் நூற்றாண்டில் ஐரோப்பியர்கள் அவற்றைத் தோண்டியெடுத்த போது அவற்றை என்ன என்று படித்துச் சொல்ல அங்கிருந்த மக்கள் ஒருவருக்குமே தெரியாதிருந்தது.

ஐரோப்பியர்களே அங்கே கிடைத்த இருமொழி ரோசெட்டா பலகை, பெஹிஸ்டுன் (Behistun inscriptions) பொறிப்புகள் உதவியால் அவற்றை மறுபடிப் படிக்க வழி கண்டுபிடித்தனர்.. அசிரியன், எலாமைட், அக்கேடியன் மொழிகள் படிக்கிற முறையின் தொடக்கம் 1802ல் ஜியோர்க் பிரடெரிக் க்ரோட்பெண்ட் (Georg Friedrich Grotefend.) என்பவரால் அமைந்தது. 1820ல் ழீன் பிரான்சுவா ஷாம்போல்லியன் ரோசெட்டா பலகை துணையோடு (Jean-François Champollion) எகிப்திய எழுத்துகள் படிக்கும் முறையைக் கண்டறிந்தார். 1835ல் ஹென்றி ராவ்லின்சன் (Henry Rawlinson) என்ற கிழக்கிந்திய கம்பனியின் அலுவலரால் பாபிலோனிய, சுமேரிய மொழிகளை, பழைய பாரசீக மொழியின் துணையால் படிக்கிற வழிமுறை கண்டறியப்பட்டது, ஒரு நூற்றாண்டுக்கு மேல் ஆகி விட்ட போதும் இன்றளவும் சிந்துசமவெளி எழுத்துகள் படிக்கப் படாமலேயே இருக்கின்றன என்பதையும் நினைவில் கொள்ள வேண்டும். ஏன் இந்த நீளத்துக்கு இதைச் சொல்லுகிறேன்?

உ.வே.சா வின் பெரும்பணி ஒரே நூலின் பல சுவடிகளைத் தேடிக் கண்டுபிடித்து ஒப்புநோக்கி பாடபேதம் இடைசெருகல் கண்டு இறுதி அச்சு வடிவுக்கு கொண்டு வந்ததே. அவருக்கு சுமேரியன் எகிப்தியன் போன்று தமிழ் எழுத்துகளைப் படிக்கிற வழிமுறையைக் கண்டறியத் தேவை இருக்கவில்லை. அதற்குக் காரணம் இங்கே யாரும் இளங்கோவடிகள் கைப்பட எழுதிய சுவடியைத் தேடியெடுத்துக் கொடுத்து அதிலிருந்து சிலம்பை நமக்கு மீட்டுத் தரவில்லை. அந்தச் சுவடி என்றில்லாது எல்லாத் தமிழ் நூல்களையும் தலைமுறை தலைமுறையாய் பனையோலைகளில் கீறி எழுதியிருந்த எழுத்தெல்லாம் படித்துப் பொருளோடு நெஞ்சில் பதித்துக் கொண்டு தமிழ்ப்புலவர் பெருமக்கள் பாடம் சொல்லியும் படி எடுத்தும் வைத்திருந்தார்கள் இல்லையா அங்கே தொடங்குகிறது நம் மரபு.

மனையாளுடன் பா. பாவேந்தன்



[இருபது நூற்றாண்டுகள் சாகாமல் அவர்கள் அப்படிக் காத்து வைத்த மரபை அச்சில் ஏற்றி நிலை பேறுடையதாய் ஆக்கிக் கொடுத்தது உ.வே சாவின் சிறப்பு. அதைக் குறைத்து மதிப்பிடவில்லை]

இதற்குப் பொருள் தமிழ் தொடர்ந்து பயிலப்பட்டு வந்தது என்பதுதான். இன்றைக்கு நிலைத்து நிற்கிற பாடல்கள் அந்த வகையில் இத்தனை ஆண்டு கால வாசகர்களால் படித்துப் பொருளுணர்ந்து காக்கப் பட்டவை. கால உரைகல்லில் தேய்த்துப் பார்த்து தேறி நின்று நிலைத்தவை.

இன்றைய எகிப்தியர்களுக்குக் கிடைத்தது 4500 ஆண்டுகளுக்கு முன் உயிரோடு இருந்து அதன் பின் பாடம் செய்யப் பட்ட மம்மிகளோடு சேர்த்துக் கிடைத்த கூட்டை ஒத்த மொழி. தமிழ் தொடர்ந்து கண்ணுக்குள் வைத்துக் காக்கப்பட்டு நமக்குக்  கொடுக்கப்பட்ட உயிர்ப்பு மாறா மொழி.  நமக்கு அடுத்து வரும் தலைமுறைகளுக்குச் அந்தத் தமிழ் நாம் சிதையாது காத்து கொடுக்க வேண்டிய குல சொத்து. அறிவியல் காலத்தில் வாழும் நாம் அந்த மரபை அறுந்து விடாது காக்க வேண்டியவர்கள்.

பழந்தமிழ் இலக்கியங்களை எனக்கு எவ்வளவு தெரியும்?

வாங்கும் கவளத்து ஒரு சிறிது வாய் தப்பின்
தூங்கும் களிறோ துயறுரா -
ஆங்கதுகொண்டு
ஊரும் எறும்பு இங்கு ஒருகோடி உய்யுமால்
ஆரும் கிளையோடு அயின்று.

என்று நீதிநெறி விளக்கத்தில் குமரகுருபரர் பாடுவாரில்லையா அப்படிப் பல களிறுகள் உடன் வாழப் பேறு பெற்றிருந்தாலும்  எறும்பின் வயிறு எவ்வளவுதான் கொண்டு விடும்? ஒரு பருக்கை உண்ணுவேன். சுவை வியப்பேன். மயங்குவேன். மறுபடியும் ஒரு பருக்கை. இப்படித் தெரிந்து கொண்டதுதான். சுவை அமுத மலைத் தேனூற்றே எதிரே இருந்தாலும் குடிக்கிற வயிறு தானே அளவு! அதனால் என்ன? உயிர் இருக்கிற வரை பசி இருக்கத்தான் போகிறது. எனக்கும், இன்னும் பல கோடி பேருக்கும் உண்ணும் சோறும், பருகும் நீரும், தின்னும் வெற்றிலையாக இருந்தாலும் சற்றும் குறைவுபடாது தமிழும் இருக்கும்.

● தமிழ் எழுத ஆர்வலர்கள் மிகுந்திருக்குமளவு ஆழமின்மை என்ற குறைபாடும் உள்ளதே உங்கள் கருத்து என்ன?

■ ஆழம் அகலம் இரண்டில் எதைத் தேர்ந்தெடுப்பது என்றால் நான் அகலமாக்குதல் என்ற பரவலாக்குவதைத்தான் தேர்ந்தெடுப்பேன். நிறைய பேர் எழுதட்டும். எது நிலைத்து இருக்கிறதோ அது இருந்து விட்டுப் போகிறது. ஆழம்தான் எழுதுவதற்கே முன்நிபந்தனை என்றெல்லாம் விதிக்க வேண்டியதில்லை. விதிக்கவும் கூடாது. நீங்கள் கூட ஆழமின்மை ஒரு குறைபாடு என்று சொல்லுகிறீர்கள் அல்லவா? அதனுள்ளே. ஆழமானதும் சில இருக்கிறது என்றுதானே பொருள், விதிவிலக்குகள் விதியைத்தான் உறுதி செய்கின்றன.

● நிறைய நேரம் எடுத்துக்கொண்டு பலவற்றைப் பகிர்ந்து கொண்டீர்கள் நன்றி. தமிழ்நெஞ்சம் ஆசிரியர் குழுவின் வாழ்த்துகள்.

■ உங்களோடு உரையாடியது மிகுந்த மகிழ்ச்சியடைகிறேன். நன்றி. என்னுடைய கருத்துகளைப் பகிர வாய்ப்பளித்த தமிழ்நெஞ்சம் ஆசிரியர் குழுவுக்கு எனது உளமார்ந்த நன்றி. ■

# தேடலில் தொலைகிறேன்

மனிதநேயம் தேடியொரு
நெடுந்தொலைவுப் பயணம்.
மயங்கி வீழ்வேனோ என்றெண்ணும்
தருணம்.

வன்முறை வளைக்குள்
அன்பு நெறி சுருக்கிக் கொண்ட
மனிதர்கள்.

கரம் கொடு எனும் பலவீனப்
பார்வைக்கிங்கே
இல்லை அங்கீகாரம்
மானுட மனங்களில் துளியுமில்லை
பரோபகாரம்

கனிவொழுகப் பார்க்கும் பார்வை
கலைந்து போன தேசம்
தனித் தனி தீவென்றே புதைந்து போனது
நேசம்

காட்டுக்குள் காணுகின்ற காருண்யம்
வீட்டுக்குள் காணவில்லை மனிதநேயம்.

கழுத்தறுத்து குழி பறித்து
வீழ்த்திடவே மனிதர் இன்று
தோள்கொடுத்து  கரம் கொடுக்கும் மனிதர்
காண்பது என்று.

கள்வனுமாகி... காவலனுமாகி..
காணும் காட்சியில்
இலக்கணப் பிழைகள்

காட்சிகள் மாறி
சூழ்ச்சிகள் ஏறி
மனதில் தினமும்
கருணைக் கொலைகள்.

புரிந்தும் புரியாதது போல
தெரிந்தும் தெரியாதது போல...
பெரும் நாடகங்கள்

சூரியனைச் சூன்யமாக்கி சூன்யம்
சூரியனாக்கி இங்கே போதனைகள்

பந்தொன்று நிலவென்றாக
நிலவொன்று பந்தொன்றாகிப் பல
வேதனைகள்

விடிகின்ற பொழுதில்
இடி வந்து விழுகின்றது
பூகம்பம் தாளாமல் பூவொன்று
அழுகின்றது

**மக்கொனையூராள்**

## விழியே கதையெழுது

விழியே கதையெழுது
அழகான நினைவுகளோடு
அழியாத கனவுகளோடு
நீங்காத சுகங்களோடு

வாழ்வின் வரமாகப்
பிரியாத காதலோடு
நேசப் பெருவெளியின் மாறாததாக

விழிகள் என்ன
மாயப் பொய்கையோ
என்னை இழுத்து
வளைத்து விட்டனவே

சிக்கித் தவித்து
இன்பமாய் மூழ்கி
இனிய நாதமாகப்
பிணைந்து கொண்டனவே

இனியவளே கவிமொழியில்
கலந்திட்ட காவியமே
இதயத்தில் பதிந்த
ஓவியமானாய் காதலியே

**பர்ஹத் றியா (என்.எம்.ஆரிபா)**
ஏறாவூர், இலங்கை

# தே(யா)யிலை...!



"A cup of tea may be a hug of love" ஆமாங்க, ஒவ்வொரு விடியலும் நமக்குஅன்பான விடியலா ஒரு கப் டீ யில் ஆரம்பிக்குது. அன்பை பரிமாற ஒரு கப் டீ போதும் அதனாலேயோ என்னவோ கௌதம் வாசுதேவன் மேனன் படங்கள்ல டீ சாப்பிடற மாதிரி ஒரு சீன் இல்லாமல் இருக்காது. மனிதர்களின் மனதை பரிமாற செய்யும் இந்த டீ நமது வாழ்வின் ஒரு அங்கமாக மாறியது எப்படி?

தேயிலையை முதல் முதலா அறிமுகப் படுத்திய நாடு சீனா. சீனமொழியில் தே அல்லது சா அதுல இருந்து தான் ஆங்கிலத்தில் டீ என்றும் இந்தியில் சாய் என்றும் உருவானது. கி.மு மூன்றாம் நூற்றாண்டில் சீனர்கள் தேயிலையை ஒரு மருந்து பொருளா பயன்படுத்தி வந்த போது, அதை சே நாங் என்ற துறவி மக்களிடையே பிரபலமடையச் செய்தார். சீனாவிலிருந்து ஜப்பானுக்கும் திபேத்துக்கும் வணிகம் செய்துக் கொண்டு இருந்தார்கள். திபெத் தேனீர்க் கென்று ஒரு விழா நமது தைப்பொங்கல் போல மக்களெல்லாம் ஒன்று கூடி இன்றைக்கும் கொண்டாடி வராங்க.



மஞ்சள் மிளகு இவை எல்லாம் சீனாவுக்கு இந்தியா ஏற்றுமதி செய்த போது ஜப்பான் திபெத்க்கெல்லாம் அறிமுகப் படுத்தப்பட்ட தேயிலை ஆரம்ப காலத்துல இந்தியர்களுக்கு அறிமுகப்படுத்தப்பட, இன்னைக்கு இந்தியால நம்ம எல்லாரும் பயன்படுத்தக்கூடிய டீ தேயிலையால் தயார் செய்தது இல்லை. தேயிலை டஸ்ட், டஸ்ட் டீ தான் நம்ம சொல்லனும். ஒரிஜினல் தேயிலைகள் வெளிநாடுகளுக்கு ஏற்றுமதி செய்து, தேயிலை டஸ்ட் களை மட்டும் ஆங்கிலேயர்கள் காலத்தில் இந்தியர்களுக்கு அறிமுகப்படுத்தப் பட்ட தால் தேயிலையை விட டஸ்ட் டீயை நாம் அதிகம்விரும்ப ஆரம்பித்தோம்.

தேயிலை மூலமாக தயாரிக்கப்பட்ட டீயை குடிக்க ஆசை பட்டபோது சென்னை அண்ணாநகரில் உள்ள கெட்டில் என்ற இடத்தில்தேயிலையைக் கொண்டு தயார் செய்த டீ-ஐ சாப்பிடலாம்னு போனப்ப ஒரு கப்டீ ரூபாய் 600 லிருந்து ஆரம்பமாகிறது என்பதை கண்டு வியந்தேன். அந்தக் கடையே முதல் மாடியில் மலை மீது இருப்பது போல் அமைக்கப்பட்டிருக்கும்.

1600 காலகட்டங்கள் போர்ச்சுகீஸ்சால் இங்கிலாந்துக்கு அறிமுகப்படுத்தப்பட்ட டீ இங்கிலாந் துக்கும் சீனாவுக்கும் ஒரு போர் காரணமாக இருந்தது. வசதியானவர்களின் விருந்துகளில் பரிச்சயமான தேனீர் சீனா உடன் சண்டை போட்டு ஒபிஎம் போர் மூலமாக தேயிலை இறக்குமதி செய்கிற உரிமையை பெற்றது இங்கிலாந்து. ஒருவேளை சீனா நாளடை வில் மறுத்தால் என்ன செய்வது, இந்த யோசனையில் தான் இந்தியாவில் உள்ள

அசாம் மீது இங்கிலாந்து முதலில் கை வைத்தது. அது 17ஆம் நூற்றாண்டு இங்கிலாந்து கிழக்கு இந்திய நிறுவனம் மெதுவாக இந்தியாவிற்கு காலடி வைத்த காலகட்டம் அசாம் போலவே மலை பிரதேசங்களை தேடியபோது டார்ஜிலிங், ஊட்டி, கர்நாடகா போன்ற இடங்கள் தென்பட்டது.

சான் சல்லிவன் (ஜான் சல்லிவன்; John Sullivan) 1815 முதல் 1830 வரை அன்றைய பிரித்தானிய அரசின் கோயம்புத்தூர் மாவட்ட ஆட்சியராக இருந்தவர். நீலகிரியின் தந்தை என அழைக்கப்படும் இவராலேயே, 1819ம் ஆண்டுவாக்கில் நீலகிரி மாவட்டம் கண்டுபிடிக்கப்பட்டது. 1804ம் ஆண்டு சென்னை கிழக்கிந்திய நிறுவனத்தில்



சாதாரண எழுத்தராக சேர்ந்த சல்லிவன், தனது கடின உழைப்பால் படிப்படியாக உயர்ந்து 1839ம் ஆண்டு ஆளுனர் அவை உறுப்பினராக உயர்ந்தார். இயற்கை, சுற்றுச்சூழலில் மிகுந்த ஆர்வம் கொண்டவர். இவரின் முயற்சியாலேயே ஊட்டி ஏரிவெட்டப்பட்டதோடு ஊட்டி நகரம் உருவாக்கப்பட்டது.

தேயிலைக்காக சீனாவையும் இந்தியாவையும் ஆங்கிலேயர்கள் அடிமைப்படுத்தினாலும் நமது நாட்டினர் செய்து கொடுக்கும் பால் கலந்த தேநீர் ஆங்கிலேயர்களால் அதிகம் விரும்பப்பட்டது. அதனால்தான் ஆங்கிலேயர்கள் டீ செய்து கொடுப்ப தற்காக என்று மசால்ச்சி வேலை என்ற அரசுவே லை ஒன்றை அறிமுகம் செய்தனர் கலெக்டர் அலுவலகங்களில் இன்றைக்கும் அந்த வேலை உள்ளது. சுதந்திரத்திற்கு பின்பு சில டீ மாஸ்டர் களையும் இங்கிலாந்து அழைத்துச் சென்ற வரலாறு உண்டு.

இப்பேர்பட்ட தேனீர் இந்தியர் களின் ரத்தத்தால் ஆனது என்பதை எரியும் பனிக்காடு என்ற நாவலில் சொல்லப்பட்டு இருக்கிறது, அதை தழுவிய திரைப்படம்தான் இயக்குனர் பாலா இயக்கிய பரதேசி திரைப்படம்.

இப்படி இந்தியர்களுக்கும் தேநீருக் கும் ஒரு வரலாறு உள்ளது.இப்படிப்பட்ட டீ தான் இன்று க்ரீன் டீ, மசாலா டீ, தந்தூரி சாய் என்றெல்லாம் மக்கள் மத்தியில் பரவலாக காலம் காலமாக வரவேற்பைப் பெற்றுள்ளது.

சரி வாங்க கௌதம் வாசுதேவன் மேனன் படப் பாடல்களோடு சூடா ஒரு கப் டீ சாப்பிடலாம்...

காரைக் கவிஞர் எழிலி,
காரைக்குடி, இந்தியா
9176631565



# எழுதிப் பழகுவோம்

## - தமிழ்ச்செம்மல் இராம வேல்முருகன்

வெண்பா எழுதுவது ஒன்றும் கடினமன்று;
எளிதுதான்.
பதினைந்து சீர்கள் போதும்
இது முடியாதா என்ன?
ஏழு ஏழாக பதினான்கு சீர்களை
முதலில் எடுத்துக் கொள்ளுங்கள்
முதல் அடிக்கு நான்கு
இரண்டாம் அடிக்கு மூன்று
இப்போது நான்கு சீர்கள்
ஒரே எதுகை வருமாறு அல்லது
இரண்டிரண்டு சீர்களாக
ஒரே எதுகை வருமாறு
எடுத்துக் கொள்ளுங்கள்

**அன்பே**
**இன்பம்**

**கண்போல்**
**பண்பே**

அடுத்து

இவற்றிற்கு ஏற்றாற்போல்
நான்கு மோனை அமைவது போல
நான்கு சீர்கள் எடுத்துக் கொள்ளுங்கள்

**ஆசை**
**ஏந்திழையே**

**காப்பதற்கு**
**பாடு**

இப்போது

இடையிடையே ஒரு சீர் போடுங்கள்

இங்குதான் நிபந்தனை

கவனியுங்கள்
முந்தைய சீரைக் கவனியுங்கள்
**அன்/பே** நேர் நேர் தேமா
இவ்வாறு ஒற்றை எழுத்தில்
நிறைவு பெற்றிருந்தால் இரட்டை
எழுத்தில் தொடங்குங்கள்

மோனைஉள்ள சீர்கள்
ஒற்றை எழுத்தில் தொடங்கினால்
இரட்டை எழுத்தில் நிறைவு செய்யுங்கள்
அல்லது மூன்று சீர் எனில்
ஒற்றை எழுத்தில் நிறைவு செய்யுங்கள்

**அன்பே** - இது ஒற்றை எழுத்தில் நிறைவு
( மா ச் சீர்)
**அரு** ... எனத் தொடங்கலாம்
**அறு** ... எனவும் தொடங்கலாம்
(நிரையசை )

மோனை ... **ஆசை**

இதுவும் ஒற்றை எழுத்தில்தான் உள்ளது
எனவே இரட்டை எழுத்து அல்லது
மூவசைச் சீரில் ஒரு வார்த்தை வேண்டும்

**அருமருந்தே**
**அறுசுவை**
**அறுசுவையே**
இவ்வாறு இருக்கலாம்

நான்காவது சீர்
எப்படி இருக்கலாம்
இரண்டாவது போலவேதான்

3 ம் 5ம் பார்க்க வேண்டும்
3 - **ஆசை**
5 - **இன்பம்**

இதற்கும் அதே நிபந்தனைதான்
**ஆசை நறுந்தேனே**

நான்கையும் சேர்த்துப் பாருங்கள்

**அன்பே அருமருந்தே ஆசை நறுந்தேனே**
இதே போல் அடுத்த 3 சீர்கள்
**இன்பம் சுரக்கின்ற ஏந்திழையே-**

அடுத்த இரண்டு அடிகள் பார்ப்போம்

**கண்போல் ... காப்பதற்கு**
**பண்பே ... பாடு**

**உனையிங்கு ... நானுண்டு**
இதனை முதலடியில் சேருங்கள்

**கண்போல் உனையிங்கு**
**காப்பதற்கு நானுண்டு**

**பண்பே ... பாடு**
இதற்கு ஒரு சொல் வேண்டுமே

**ஒருபாடல்**
**ஒருவெண்பா**

சேர்க்கலாமா

**பண்பே ஒருபாடல் பாடு**

இப்போது பாருங்கள்

**அன்பே அருமருந்தே**
**ஆசை நறுந்தேனே**
**இன்பம் சுரக்கின்ற ஏந்திழையே -**

**கண்போல் உனையிங்கு**
**காப்பதற்கு நானுண்டு**
**பண்பே ஒருபாடல் பாடு**

இதில் 14 சீர்கள் உள்ளன
இன்னும் வெண்பா முடியவில்லை

எட்டாவது சீர் வேண்டுமே

முதல் இரண்டடிகளின்
எதுகையாக வந்தால் நன்று

**என்னுயிரே**
**பொன்மானே**
**இன்னுயிரே**
**பொன்னெழிலே**

இப்படி
எதை வேண்டுமானாலும் போடலாம்

அன்பே அருமருந்தே ஆசை நறுந்தேனே
இன்பம் சுரக்கின்ற ஏந்திழையே - இன்னுயிரே
கண்போல் உனையிங்கு காப்பதற்கு நானுண்டு
பண்பே ஒருபாடல் பாடு

இது இருவிகற்ப நேரிசை வெண்பா

இப்போது
வெண்பா எழுதுவது எளிதுதானே!

# ஆண்டவனிடம் ஓர்வரம் கேட்டல் - நேரிசை வெண்பா

ஏற்றியே வைத்தவென் ஏணியே; தோணியாய்
தேற்றியே காத்தவென் தெய்வமே - போற்றவே
பெற்றமைக் காத்துநற் பேரறி வாக்கினீர்
உற்றதமிழ் ஊற்றளிப்பீர் ஓர்ந்து.

**படைக்களப் பாவலர் துரை மூர்த்தி**

நீலவான் மேலே நிதம்சிரித்து வாழ்த்துரைக்கக்
காலம் முழுதும் கடவுளே - கோலச்
சிறுகுடில் கட்டிச் சிறப்புடன் வாழ
நிறையருள் செய்வாயே நீ!

**தில்லைவேந்தன்**

.
நெஞ்சில் நினைக்கிறேன் நித்தம் கடவுளை
அஞ்சாமை வேண்டுகிறேன் ஆண்டவனே-வஞ்சியின்
நெஞ்சறியும் சித்தினை நீயளிக்க நின்னடியே
தஞ்சமென வந்தேனே தாங்கு

**கண்ணன் நடராஜன்.**

ஊழிவழி ஆட்டுவிக்கும் உள்ளுறை மாதவனே!
ஆழியில் பள்ளிகொண்ட ஆண்டவனே! - யாழிசைத்துப்
பாடுகிறேன் வண்ணம் படர்ந்த வடிவழகை
நாடுகின்ற நன்னலம் நல்கு!

**வானதி சந்திரசேகரன்.**

தூணில் துரும்பில் துயில்கின்ற மாயோனே
ஆணிபோலே நின்றிட்ட ஆண்டவனே - பேணிடுவாய்
தோணியாய் நின்று தயங்காது காத்திடவே
ஏணியாய் நிற்பாயே ஏற்று.

**பாண்டிச்செல்வி கருப்பசாமி .**

எண்ணமும் வாழ்வில் எழிலுற எந்நாளும்
அண்டமும் சீராகும் ஆண்டவனே! வண்ணத்துடன்
கண்களில் காணும் கனவும் மலர்ந்திட
மண்ணில் மறைந்திடும் மாசு!

**நிறைமதி நீலமேகம்.**

ஊழியில் ஆடும் உமையின் தமையனே!
ஆழியில் துஞ்சும் இறைவனே! - வாழி!
அருந்தவர் வாழ்வின் அமைதியை என்றும்
அருளிட வேண்டும் எனக்கு.

**கோ. அருண்**

.
ஈட்டும் பொருள்வழி இன்பம் அளிப்பதன்றி
கேட்டையும் நீக்கு கடவுளே - வாட்டம்
வருத்தமெல்லாம் வேண்டாத வாழ்வொன்றே கேட்பேன்
பொருத்தமுறத் தந்துவிடேன் பார்த்து.

**பக்ருதீன் இப்னு ஹம்து**

.
நல்லவர்குக் காலமில்லை, நாடறிந்த உண்மையிதே!
வல்லவர்க்கே நல்வாழ்வா ஆண்டவனே? - புல்லிருக்கும்
ஓரிடமே புல்லினம் சேர்வதுபோல், உந்தன்நற்ச்
சீரிடம்வந் தேனருள் தா.

**முனைவர். சுந்தரராஜ் தயாளன்**

துன்பம்செய் வோரின் துணிவை உடைக்கவே
இன்றே வருக இறைவனே! நன்மக்கள்
எங்கும் பயமின்றி இன்பத்தைப் பெற்றிடவே
எங்கள் தலையேவா இங்கு.

**நா.பாண்டியராசா.**

கண்ணின் மணிகள் கருணை பொழிந்தெங்கும்
கண்குளிரச் செய்யுங் கடவுளே - வெண்மதியால்
மங்களமாய் என்றென்றும் மாசின்றி நானெழுதத்
தங்கத் தமிழழகைத் தா

**கவிஞர் வீக பொன்னையா.**

வேண்டும் வரந்தந்து வேதனை தீர்த்துவைக்க
ஆண்டியாய் வந்துநின்ற ஆண்டவனே-வேண்டுகிறேன்
வேண்டும் எனுமாசை வேண்டா தொழியவே
வேண்டும் எனக்கோர் வரம்

**இரா.அழகர்சாமி.**

இல்லாத தாகி இருக்கிறாய் என்பவர்க்கு
இல்லா(து) இருக்கும் இறைவனே - பொல்லாத
ஆசைஇலா நெஞ்செனக்(கு) ஆற்றினால் நாள்தோறும்
பூசையுஞ் செய்வேன் புகழ்ந்து

**க.சங்கரபாண்டியன் .**

மாறா மனத்துக்குள் மாசும் இருப்பதனால்
ஆறாத் தவிக்கிறேன் ஆண்டவனே - ஆறாய்
விரைந்தோடி யாழழுக்கை வேரோடு நீக்கிக்
கரைசேர்ப்பாய் என்னுள் கவிந்து.

**நெடுவை இரவீந்திரன்**

,
ஓடியோடிக் கற்றும் உனைப்பாடச் சொற்களைத்
தேடித் திரிகின்றேன் தெய்வமே! - ஈடில்லா
நற்றமிழில் ஓசையுடன் நான்பாட உன்பாதம்
பற்றினேன் நெஞ்சுள் பதித்து!

**பாவலர் அருணா செல்வம்.**

ஆந்தை அலறிடும்;  கூகை குழறிடும்;
காந்துநரி ஊளையிடும், ஆண்டவனே! - சாந்தமிலா
மாந்தர் பலரிவைபோல் மேவுசினச் சீற்றமொடு
பாந்தமிலா வாரிருப்ப தேன்.

**மதுரை . கு . லோகநாதன்.**

எங்கும் எதிலும் இயங்கிடுவாய் என்றெண்ணி
அங்கெல்லாம் தேடினேன் ஆண்டவனே...எங்குமுனைக்
காணாதென் கண்களினால் கண்டுவிட்டால் பின்தொடர்ந்தே
நாணாது நான்வருவேன் நம்பு...!

வ.இராமதாசு

.
உண்மையாய் ஏழைக்  குதவிசெய்யும் எண்ணத்தில்
அண்மையாய் வாராத  ஆண்டவனே;~மண்ணில்
உனக்குமட்டும் ஆயிரமாய்  உல்லாசம்; நாளும்
எனக்குமட்டும் ஏனோ  இடர்...?

ஐ.க.நாகப்பன்

வேண்டுதல்க ளேராளம் வேண்டினாலுங் கிட்டிடுமோ?,
ஆண்டவர்கள் மீண்டுவர ஆண்டவனே - தோண்டிப்
புதைத்த உடலங்கள் பூமிக்கு ளேனோ?,
விதைத்த வினைகளை வெல்

**சுதேன் சுதேகி.**

பூமியிலே உள்ளசுகம் பூரா அனுபவிக்க
ஆமுகத்துச் சாமியாக்கு ஆண்டவனே: - பூமியிலே
காணாத உன்னுருவில் காட்சி யளித்திடுவேன்
கோணாமல் வாரிக் கொடு.

**புகழேந்தி.**

என்னுறக்கம் தான்கலைந்தே இன்பநிலை யானடையக்
கன்னியரைக் காட்டு கடவுளே - மன்னிப்பாய்
அன்னமெனும் பெண்களையான் ஆளும் திறன்தந்தால்
புன்னகையில் பூத்தரும்பும் பூ !

**பாவலர் கோவதன்.பட்டர்வொர்த்.**

என்னசொல்லி நான்கேட்பேன் எல்லாமே பொய்யயான
பின்னிங்கே? ஏனோ? இறைவனே! - நின்னையலால்
யாரறுப்பார்? யாரறிவார்? யார்பறிப்பார்? அந்தத்தின்
வேரறுத்து மீட்பதற்கு வா!

**சுரேஜமீ.**

ஞாலப் பெருவிருதை நான்பெறவே வேண்டுகிறேன்
காலத்தே ஈவாய் கடவுளே – சீலமுடன்
நான்படைத்த நூல்களுக்கே நல்நோபல் சீர்பரிசை
தேன்போல் தருகவே தேர்ந்து !

**பாவலர் கருமலைத்தமிழாழன்.**

நாக்குலர்ந்து மாயுது நான்வெண்பா ஒன்றினை
ஆக்கித் தரணுமாம் ஆண்டவனே – சாக்கிரதை
தப்பான சீரோ தளையோநீ கண்டாக்கா
அப்படியே பிய்த்தெறி அப்பு

**விசு. இம்மானுவேல்.**

செல்வர்கள் மட்டும் செழிப்பினிலே ஏழையரின்
செல்வர்கள் வாடுகின்றார் தெய்வமே;- எல்லோர்க்கும்
உண்ண உணவளிப்பாய் உன்னையே வேண்டுகின்றேன்
எண்ணுவரம் தாவரதா விங்கு.

**அய்யப்பன் அய்யப்பன்.**

ஆண்டுகள் ஐம்பதை மாற்றி இருபதாய்
மீண்டும் தருவாயா ஆண்டவனே ? - நீண்ட
கனவுகள் இன்னும் நனவாக வேண்டும்
எனக்குத் தருவாய் அருள் !

**ஞால ரவிச்சந்திரன்**

.

ஓய்வும் ஒழிச்சலிலா ஓயாத வாழ்விதனில்
தேய்வுகள் வந்திடுதே தெய்வமே - பாய்மீது
சாய்ந்ததும் தூங்கிடச் சாந்த மனந்தருவாய்
வாய்நிறைய வேண்டினேன் வாழ்த்து.

**கு. கமலசரஸ்வதி.**

பொய்யேதும் இல்லாமல் போகும் இடமெல்லாம்
செய்வதைச் செய்கின்றேன் தெய்வமே-மெய்யாய்
உழைக்கின்ற எம்மை உயரத்தில் வைத்துத்
தழைக்கும் வரமொன்று தா!

**செ. இராசா**

.

கல்வியைக் கற்றிடவுங் காசின்றி நிற்கின்ற
அல்லலைத் தீர்த்துவிடு ஆண்டவனே - இல்லார்க்கும்
நல்லவைகள் ஈந்திடுதல் நற்கருணைப் பண்பாகும்
எல்லாமாய் நிற்றல் இறை.

**இராணி லட்சுமி**

வேண்டாம் எனக்கெதுவும் வேண்டியதை தந்துவிட்டாய்
நீண்டதொரு ஆயுளுடன் தெய்வமே - வேண்டாமே
வேண்டுகிறேன் வேண்டியதை வேண்டுவர்க்கு நீயருளு
வேண்டுதல் வேறு இலை!

**பொன்மணி தாசன்.**

உன்பணியை ஏற்றே உவந்தென்னைக் காத்திருந்த
அன்னையைநீ ஏன்பிரித்தாய் ஆண்டவனே! ஒன்றவளை
இங்கேநீ மீட்டும் இருத்திடுக! அன்றிலெனை
அங்கே அவளருகில் ஆக்கு!

**சுந்தர ராசன்**

.

வெண்பாவில் உள்ள விதிமுறைகள் கற்றறிய
திண்டாடி நிற்கிறேன் தெய்வமே!-கண்டு
மரபிலுள்ள நுட்பம் மறக்காமல் நிற்கும்
வரமொன்றைத் தந்திடவே வா!

**மாலதி திரு**

எண்ணம் முழுதும் எழுகின்ற கண்ணனே
கண்ணில் விழுந்த கடவுளே -எந்நாளும்
உன்னைத் தொழுதிட உன்தாள் வணங்கிட
என்னுள்ளம் தேடும் இறை.

**முத்தமிழ்ச்செல்வி.**

வள்ளல் பெருமானே வண்ணக் கொடையோனே
தெள்ளத் தெளிவாட தெய்வமே - அள்ளியிடு
வெள்ளை அழகுமகள் மின்னல் நயன்தாரா
துள்ளல் மனவுள்ளம் தொண்டு

**மன்னை மணிமாறன்.**

அண்டம் நடுங்கிடவே ஆடுந் தலைமகனே
அண்டிவர வேண்டுகிறேன் ஆண்டவனே, தொண்டுமனம்
கொண்டோர் கொடுமையெனுங் கோலம் அனுபவிக்கும்
கண்டமதை வேரறுப்பாய் காப்பு.

**கண்ணன் கோபாலன்**

கார்த்திகைப் பூமுகத்தாள் காந்த விழியழகாள்
தேர்த்தொழில் மென்னடையாள் தெய்வமே..! - யார்க்கோ
மனையாளாய் ஆனாள் மனம்நின் றவளை
நினைவினை விட்டுமொத்தம் நீக்கு..!

**வள்ளி முத்து**

.
வாக்கினில் வாழும் வளர்பிறை வேணியனே
நோக்கும் பொருளுறை ஆண்டவனே - ஊக்கமுடன்
ஆக்கும் அறிவெனக்கு நல்கி கெடுப்பன
நீக்கி நிறைகொள்ளச் செய்.

**பெருநிலவேந்தன்.**

*வெண்பாப் பயணம் 10*



# வெண்பா போட்டி (பயணம்) 11

போட்டியின் கால அளவு - ஆகஸ்ட் 19 முதல் செப்டெம்பர் 10 வரை

முழுமையாகப் படிக்கவும்

## தலைப்பு : பிடித்த உணவை வர்ணித்து ஒரு வெண்பா.... பாடவேண்டும்...

ஒருவர் பல வெண்பாக்கள் எழுதினாலும், முதல் வெண்பா மட்டுமே போட்டிக்காக ஏற்கப்படும்

**போட்டியின் விதிகள் : -**

1. நேரிசை வெண்பா மட்டுமே எழுதவேண்டும், பல வெண்பாக்கள் எழுதினாலும் அதில் ஒன்று மட்டுமே தேர்வு செய்யப்படும்.
2. இட்லி, தோசை, இன்னும் பலவும், மேலும் பலகார வகைகளையும் வர்ணிக்கலாம்.
3. வெண்பாவின் தலைப்பாக தாங்கள் வர்ணிக்கும் உணவின் பெயர் இருக்க வேண்டும்.
4. உணவின் பெயர் வெண்பாவுக்குள் வராமல் இருந்தால் சிறப்பு.
5. வந்தாலும் தவறில்லை.
6. முடிந்த அளவு ஒருவர் பயன்படுத்திய பாடுபொருளை இன்னொருவர் பயன்படுத்த வேண்டாம்.

இதோ எ - கா வெண்பா....

*தலைப்பு : - இட்லி*

.

வண்ணத் துணியுடுத்தி
        வாய்த்தவனும் போனபின்னே
வெண்மையெனுஞ் சேலைக்குள்
        வீழ்வாள்பெண் - மண்ணில்நீ
வெள்ளை உடைகழற்றி
        வேறுவண்ணம் கொள்வதெல்லாம்
இல்லா புரட்சியடி
        ஈங்கு.

*அசத்துங்கள் கவிஞர்களே....*

*வழக்கம்போல் களம் முழுவதும் கவிஞர்களின் கற்பனைக்கு. மனதில் பட்டதை பட்டென்று போட்டு உடையுங்கள் வெண்டளையில். எல்லாம் கற்பனைக்கே... அது நகைச்சுவையானாலும் ஏற்றுக் கொள்ளப்படும். உங்கள் மனம் சொல்வதை சரியான இலக்கணத்தோடு பகிருங்கள் போதும்.*

*காலத்தை கவிஞர்கள் கையில் ஒப்படைக்கிறோம்....*

*தளர்வுகள் : - தனித்தமிழில் தான் பாடல் அமையவேண்டும் என்ற கட்டாயம் இல்லை. வாசித்தால் புரியும்படி இயல்பான வார்த்தைகளோ, அல்லது வட்டார வழக்குச் சொற்களோ பயன்படுத்தலாம். தளை தட்டாமல், புணர்ச்சி இல்லாமல், பிழையின்றி எழுதினாலே சிறப்பு.*

என்றும் தமிழுடன்....

தமிழ்நெஞ்சம் அமின் மற்றும் தமிழ்நெஞ்சம் ஆசிரியர் குழு,

# கவிமலர்கள்

ச்ஜேஸ் ஞானராஜ், ஜெர்மனி

●

காமதேவன் நடத்தும் பாடத்தில்
வெற்றிக்கோட்டை தொடாதோருக்கு
கோவில் கட்டிக் கொண்டிருக்கிறான்
மன்மத லேகியம் தயாரிக்கிறவன்!

●

காமத்தின் ஆசைகளை
ஆணுறைக்குள்
முடக்கி விடுகிறது
குடும்பக் கட்டுப்பாடு!

●

அகநானூறு புறநானூறுவை
வல மிட கண்களில் வைத்தவள்
செவ்விதழ் ஓரத்தில்
மாதவியின் சிலப்பதிகாரம் ஏந்தாமல்
நாலடியாரை வைத்த
கஞ்சத்தனம் ஏனோ?

●

புத்தனாகும் ஆசையை
தூண்டி விட்ட
சித்தார்த்தன் தான்
புத்தரின் ஆசையையும்
ஒளித்து வைத்தவன்!

●

பௌர்ணமியாய்
உன் முகமிருக்க
உன்னில் நழுவிய
நகத் துண்டுகளுக்கு
பிறை நிலவென
உவமான மெதற்கு!

●

ஆக்சிலேட்டரை கூட்டிக் குறைக்க
முன்னும் பின்னுமாய் அசையும்
ஸ்பீடா மீட்டராய் உனது விழிகள்!
ஆச்சரியத்தில் விரியும்
அதன் மேல் கீழ் இமைகளின்
தூரத்தை அளவிடும் அலகு தான்
என் உதட்டு முத்தம்!

●

கார்மேகக் கூட்டத்தை
முதுகில் சுமக்கும் வானம்
வலி தாங்காது
மழைநீரை கீழிறக்க
பனிக்குடம் உடைந்த
தாயின் அலறலாய்
கேட்கிறது இடியோசை!

●

அமாவாசை சூரியனில்
முருங்கை மர காகத்தின்
உண்ணாவிரதம்
மகனுக்கு உணர்த்தியது
இறந்த காலத்தில்
மருமகளின் பாராமுகத்தை!

●

ஆற்றில் மிதந்து வரும்
உதிரிப் பூக்களின்
மார்ச் பாஸ்ட்தான்
அலையின் மலையும்
அலையின் மடுவும்!

●

என் வீட்டு
புளிய மரமும்
போதி மரமானது
நான் புத்தனானதால்!

### ஏழு ஜென்ம பந்தம்!

காதல் செய்வது பாவம் என்றவளும்
காதல் என்பது பொய் என்றவனும்
சந்திக்கும்போது உருவாகும்
உள்ளக் கிளர்ச்சிக்கு
பெயர் தான் முன் ஜென்ம உறவு!

### பிறப்பும் இறப்பும்!

முதல் அழுகையின் பிறர் சந்தோஷம்
கிடைக்காமலேயே போயிருக்கலாம்
கடைசி மவுனத்தின்
உறவினர் அழுகையைக் காணும் போது!

### அப்பாவின் நினைவு நாள்!

தன் அப்பாவின்
எச்சில் முத்தத்தை
உடனே துடைக்கும்
குமரேசனின் கைகளை
தொட்டுப் பார்த்ததில்
உணர்கிறேன் என் அப்பாவை!

### தயிர்!

சற்று அதிகமாகவே
அடித்து துவைத்து விட்டார்கள் போலும்!
மீண்டும் கூட முடியாமல்
அழுது கொண்டிருக்கின்றன
வெண்ணெயும் மோரும்!




நூலின் பெயர் : ஹைக்கூ
: தூண்டிலில் ஜென்
ஆசிரியர் : கோ.லீலா

பக்கங்கள் : 182
விலை : ரூ. 150

- இந்நூலின் பெயரை படித்தால் என்ன உணர்கிறீர்களோ அதே உணர்வை நூலின் இறுதி பக்கம் வரை உணரக் கொடுத்திருக்கிறார் பேரன்பிற்கு சொந்தக் காரரான கோ.லீலா அவர்கள்.

- பொதுவாக ஹைக்கூ, ஒவ்வொருவரின் பார்வைக்கேற்ப பல பரிமாணங்களில் பிரதிபலிக்கும். திரைப்பட இயக்குநர், வசனகர்த்தா, எழுத்தாளர், கவிஞர் என பன்முகப் படைப்பாளி திரு.பிருந்தா சாரதி அவர்களின் «மீன்கள் உறங்கும் குளம்» என்னும் ஹைக்கூ கவிதை நூலை முன்வைத்து தன் இரசனையாலும், மொழியாலும் நம்மை வேறொரு உலகிற்கு இட்டுச் செல்கிறார் 'ஹைக்கூ தூண்டிலில் ஜென்' நூலின் ஆசிரியர்.

- ஹைக்கூவின் வாசலை அடைய பொடி நடையாக நடந்து, போகிற போக்கில் ஜப்பானிய இலக்கியத்தின் பரிணா மத்தையும், தமிழகத்தில் ஹைக்கூவின் வரலாற்றையும் பகிர்ந்து கொண்டே எட்டுவைக்கிறார்.

- தமிழ் இலக்கியத்தில் உள்ள திணை பகுப்புகளை போல் ஜப்பானிய ஹைக்கூவில் உள்ள பருவநிலை (கிகோ) பகுப்புகளை விரிவாக விளக்குவதுடன் ஜப்பானிய மொழியிலேயே சில வார்த்தைகளை கொடுத்திருப்பது சிறப்பு.

- ஒவ்வொரு பருவநிலைக்கான பகுப்பு களும் கூடுதல் குதூகலமாக்குகிறது. உதாரணமாக குளிர்காலத்தை குறிக்க, தேரையின் அடங்கிய குரல், இடை விடாது ஒலிக்கும் பூச்சிகளின் பாட்டு, மங்கிய நிலவொளி, உதிர்ந்த செவ்வந்தி, பனிப்புயல் போன்ற வார்த்தை வர்ணனை கள் காட்சியாய் கண்முன் விரியச் செய் கின்றன.

- 16 தலைப்புகளில் தொகுக்கப்பட்டுள்ள கட்டுரைகளில், தொடக்கத்திலேயே ஜென் என்பது தத்துவமல்ல அது ஒரு நிலை என தெளிவுபடுத்துகிறார். அதே நிலை யில் இயற்கை, அமைதி, அறிவியல், சூழலியல், தண்ணீர், உயிர்க்காற்று, கள வொழுக்கம், தூக்கணாங்குருவிகள் என



பலவண்ணங்களை மனதில் பூசிச் சிரிகின்றது இந்நூல்.

அந்நிலையை நீங்கள் உணர தூண்டிலில் தக்கையாய் மிதக்க வேண்டும்.

- ஒவ்வொரு கட்டுரையின் முடிவிலும் சுவாரசிய செய்தி, ஓஷோவின் கதை, தாவோவின் பார்வை, அறிவியல் துணுக்குகள், சூஃபி கதை, செகாவ் கதை, ஸென் கதை, இலக்கிய பார்வை, புவியியல் பார்வை என கூடுதல் செய்திகள் மகிழ்விக்கின்றன.

- இதை சொல்லாமல் எப்படி முடிப்பது! மரத்தை தேடி வந்த வண்ணத்துப் பூச்சியிடம் பலகையாய் உறைந்த மரம் தன் நினைவுகளை குமுறல்களாய் பகிர்வதே 'வனப்பார்வை'. அந்த ஏக்கத்தை நாம் படிக்க படிக்க நிச்சயமாக ஏதோ ஓர் உறவிடமும் ஒப்பிட்டுக் கொள்வோம். வனப்பார்வையின் விதத்திற்கு நன்றிகளும் பாராட்டுகளும்.

- "சொல்லை உய்த்துணரும் ஒருவனுக்கே அனைத்தும் இனிதாக முடிகிறது" என்ற கபீரின் வாக்கியத்திற்கு, தேர்ந்த புத்தகமெனில் அது மிகையல்ல.

மகிழ்வுடன்,

ந.கஸ்தூரி.

உதவி பொறியாளர், நீ.ஆ.து





# குமுறி வெடிப்பேன்

அச்சம் என்றும் எதிலும் கொள்ளேன்
அகிலம் அறிய முரசு மொலித்தேன்
மிச்ச முள்ளக் காலம் மூச்சாய்
விதித்தத் தமிழை உயிரில் தைப்பேன்
உச்சச் சிகரம் பிழிந்து நிரப்பி
உறுதி கொண்ட நரம்பு புடைத்தேன்
கச்சங் கொள்ளாப் பாட்டு செய்து
களிக்கத் தலைக்குப் பாகை வைத்தேன்!

எச்சில் வாழ்வில் நாட்டம் கொள்ளேன்
எடுத்த நிலைக்கு பின்னே செல்லேன்
பச்சை நோட்டுப் பரதே சிகளை
பக்கம் கண்டால் காலால் எறிவேன்
கொச்சைக் களிப்பில் வீணர் குப்பை
கொட்டி முக்குச் சந்தில் எரிப்பேன்
பிச்சைத் தட்டை கையில் திணித்து
பித்தத் தெருவில் ஓட வைப்பேன்!

பொய்மைப் புலவர் கூட்டம் இங்கே
புரளும் மேடைச் சகதி என்பேன்
தைய்யா தக்கா ஆட்டம் ஆடும்
தகார் விருதைத் தூசி என்பேன்
மெய்யின் மேன்மை மெருகுத் தமிழர்
மிளிரும் பாதம் புதைந்து கிடப்பேன்
கொய்யா மலரின் புனிதத் தமிழ்க்குள்
குற்றம் வைத்தால் குமுறி வெடிப்பேன்!

**கண்ணதாச முருகன்**




லாவண்டர் நிற தேவதை

**கவிஞர் குழலி குமரேசன்**

யின்

# நீல முத்தக்காடு

நூலின்விலை 250 இந்திய ரூபாய்

பாரதி பதிப்பக வெளியீடு

தொடர்புகளுக்கு : 91 9840865737

# மதிப்புரை

## தமிழ்நெஞ்சம் அமின்

ஓர் வழிச் சாலையில்
ஆயிரம் வழித்தடங்கள்
வெளிச்சத்தின்
பிழம்புக்குவியலாய்ப் பயணம்
காத்துக் கொண்டிருக்க...

லவாண்டர் கதிரில் உட்புகுந்து

உரிமைக்கொண்ட
சிநேகிதங்களின்
அருகாமையை தேடிப்பிடித்து
நடை பழகி...

உயரப் பறக்கும்
வான்மேகங்களில்
ஆடும் ஊஞ்சலிட்டு...

புத்தகப்பொழுதுகளில்
தேனீர்கோப்பையுடன்,
தூறும் மழைத்துளிகளுடன்
சேர்ந்துக்கொண்டு
முத்தங்களில் ஆடித்தீர்க்க...

மழைக்கால வீதியில்
நடுவே நின்று
பரிசாகக் கொடுத்த
முத்தமழையை
மொத்தமாக மழையைத்
திருடிக்கொண்டு போக...

கவிஞர்குழலி குமரேசனாரின் கற்பனையில் நானும் நீலமுத்தக்காட்டில் கிறங்கிப்போய் வெளியேவர வழி தெரியாமல் திகைத்து நிற்கிறேன்.

முத்தம், முத்தம், முத்தம் இப்படி நூல் முழுக்க முத்தம். எண்ணியும் மேடையில் சொல்லி வைத்தார் நூலை வெளியிட்டு சிறப்பித்த லேனா தமிழ்வாணன்.

நான் எண்ணிப்பார்க்கவில்லை. எனது முத்தமொன்றை நூலில் பதித்தேன். இப்படியான காதல் கவிதைகளை படித்து வெகு காலமாகிறது. காதலர் தினத்தில் கிடைக்கவேண்டிய சிறப்பை இந்நூல் பெற்றிருக்கிறதது.

214 பக்க நூலில் அடைமழைப்போல முத்தமழை.

“பாடலாசியர் ராஜபாரதி பெயர்ச்சாவி கொண்டு மனக்கதவை லாவகமாகத் திறக்கும் வித்தையின் விதிக் காதலர்கள் இதுவரை கண்டிராதது” எனக்குறிப்பிடுகின்றார்.

நல்லவிமர்சகரும் இதழாசிரியருமான ஆரூர் தமிழ்நாடன் “காதலும்

இயற்கையும், பரவசப் பறவைகளும் நிரவி நின்று மனதைக் கொள்ளையடிக்கின்றன''வென்றும்...

திரைப்படப் பாடலாசிரியர், இயக்குநர் ஏகாதசி ''மனம் குளிர் பச்சை நிறைந்த பெருவெளி சாட்சியமே கவிதைகள் உடலெங்கும் பனி ஒட்ட பூ நிறம் படிய, காடுகளின் நுண்வாசம் நுண்வாசம் நுகர்ந்து பெயர் தெரியாத பூச்சியாய் நெளிவதுதான்'' என்கிறார்.

''நட்சத்திரங்களை பூங்கொத்தாக்கி, அசையும் மேகங்களை, மரங்களின் தோகையாக்கி, முழுநிலா, பாலூறும் தடாகத்தில் ஊறித் திளைத்த வரி''களென காதல்மதி குறிப்பிடுகிறார்.

''வார்த்தைகள் வசப்பட உணர்வை அழகியலோடு அற்புதமாய் மொழிபெயர்த்திருகிறார்'' என்பதோடு நில்லாமல் நூறு நாட்களுக்குமேல் பட்டாம்பூச்சியில் களம்தந்து பூரித்தவர் கவிஞர் பொள்ளாச்சி முருகானந்தம்.

''சென்னிமலை பனிமூட்டத்தில் சறுக்கி சதிராடி நிலப்போர்வையைத் தொட்டு குதித்தாடுவதுபோல், மொழியின் கற்பனைச் சக்தியோடுஉள்ளெழும் எண்ணப்பிரிகைகளை கவிதையாக நெய்து இலக்கிய ஆடையாக மாற்றுகிற யுத்தியை நூலாசியர் பெற்றிருப்பது வியப்பாயுள்ளது'' என்பதாக திரைப்பட தயாரிப்பாளரும், எழுத்தாளருமான ராசி அழகப்பன் குறிப்பிடுகிறார்.

''சந்தோஷ வண்ணம்பூசி, இயற்கையை ஒட்டி அழகு செய்திருக்கிறார்'' எனசொல்லி இலண்டன் தமிழ்ச்சங்கமும் நூலாசிரியரை வாழ்த்தி மகிழ்ந்திருக்கிறது.
மொழியாளுக்கு பிடித்ததெல்லாம் கத்தரிப்பூ நிறம்தான்.

வாசகர்களுக்கும் இந்நிறம் பிடிக்கும். எனக்கும் பிடித்திருக்கிறது நூலின் வாசமும் நேசமும்.

வாழ்த்துவது நானாக மட்டுமல்லாது நீங்களாகவும் இருக்கக்கூடும். நூலினை வரவேற்று வாழ்த்துங்கள்.

**- தமிழ்நெஞ்சம் அமின்**

# காதல்பள்ளம்"

பூ விதை தெளித்தேன் தேவதை முளைத்தாள்
காதலை வளர்த்தேன் சாதலை கொடுத்தாள்
உடைந்தது எண்ணமல்ல என் உள்ளம் - நான்
உருண்டது தரையுமல்ல மீளமுடியா பள்ளம்.

லீ லியாகத்அலி



# My Lord!

‘பாழாம்கல், வாசற்
  படிக்கும் உதவாத
கூழாங்கல்’ என்றுபலர்
  கூறுகையில் - ஏழாங்கல்
ஆட எடுத்தவளை,
  அன்பைக் கொடுத்தவளை,
லாடம்போற் காக்கவைMy
  Lord!

சுள்ளியினும் சின்னவனை
  Supperman என்றவளை;
‘வில்லி’என மஞ்சத்தில்
  விண்டவளை; - அல்லிலென்
பாய்க்குத் துணையாகி
  வாய்க்குண வானவளைத்
தாய்க்குநிகர் தாங்கவரம்
  தா!


மசித்துத் தினமென்னை
  மையாகப் பூசி
ரசித்து விரலரத்தால்
  ராவிப் - புசித்துக்
கொழுத்தவென் கண்மணியைக்
  கொண்டாடிப் பாட
எழுத்துவகை மூன்றினையும்
  ஈ!

திட்டுமென் வார்த்தையிலும்
  தேனுள்ள தென்றுசொல்லிச்
சொட்டுவிடா மல்மாந்தும்
  சுந்தரியை - எட்டையிரண்
டால்வகுத்த பா நான்கின்
  Donஆன வெண்பாவில்
Dealசெய்யத் தந்துவிடு
  Tips!

பச்சைத்தண் ணீரவளின்
  பட்டுவிரல் பட்டவுடன்
அச்சோ! அமிழ்தாதல்
  ஆச்சரியம்; - எச்சிலிலே
Insulin வைத்துள்ள
  Angelஐ நானெழுத
Pencil தரணும்நீ
  Please!

Thermome ter விரலால்
  தேகவெப்பம் கண்டுசொல்லும்
பர்மாதேக் கை,எனது
  பாதியை, - வர்மாபோல்
ஓவியமாய்த் தீட்ட
  உதவாது போனாலும்
காவியமாய்த் தீட்டவழி
  காட்டு!

# மணிக்கூ



1. புதிரும் புரியும்
   நித்தம் முழுமைத் தேடலில்
   முயற்சியே வெல்லும்

2. மனிதம் தொலைத்ததால்
   புதிய கற்காலம் பிறக்கிறது
   நவீன நாகரீகம்

3. மலைகளும் மாறிடும்
   மாறாதே இயற்கை குணம்
   மனிதன் அனுபவம்

Yamaha bike வேகம்;
இரவெல்லாம் போகம்;
எமகா தகிதான்
இணையாள்; - சமகால
ராட்சசியைப் பாட
ரசனைமிக்க வார்த்தைகள் தா!
மாத்தூக்கம் போடா
மலே!

பெண்வண்டின் கண்வண்டைப்
பின்னாடும் பூஞ்சிண்டைப்
பண்பாட வார்த்தையில்லாப்
பாழ்மண்டை - கொண்டென்ன?
Take it! இலையென்றால்
தேவா! இறங்கிச்செய்!
Rocket speed டில்அறிவை
Run!

நாளும் புதுபோதை;
நாயகி சொல்கீதை;
மாளும் அவள்தொட்டால்
மாவாதை; - ஆளும்
அரசியும் ஆனாள்;
அடிமையும் ஆனாள்;
உருகிநான் பாட
உதவு!

Rightடான Wrongகவள்;
Wrongகான Rightடவள்;
Nightyயில் வாழ்கின்ற
Nightingale; - Wightடான
லூசவள்; ரொம்பவே
லோலாயி யைப்பாட
Usual சொற்கள்No
use!

முகத்தில் பவுடர்
முலாம்பூசாப் பொன்னை,
ஜிகர்தண்டா போலிருக்கும்
Ginனை - மிகவே
நகாசுவேலை பண்ணி
நவீனவெண்பா பாட
சகாயம்நீ செய்வாய்
சகோ!

Uniqueகான யுக்தி;அதில்
ஊடாடும் சக்தி;
Universal Rangeஜில்
உவமை; - இனியுமொரு
Personal வேண்டுகோள்;
பாட்டைப் படிப்பவன்
மெர்சல் அடையணும்
Man!

---

4. சந்திரனும் சூரியனும்
நித்தம் தனிமையில் தவிப்பு
காலத்தின் மொழி

5. நிஜங்கள் அப்படியே
நித்தம் நிழற்படம் அழகாக
மனித வாழ்க்கை

6. உயிரோடு உறவுகளே
உணர்வுகள் உதிர்த்து வதைக்கிறது
புரிதலே புதையல்


7. கடிகாரத்தின் பிடியில்
கரையும் காலத்தின் நொடி
வாழ்க்கை பயணம்

8. நி(நீ)தி இருந்தால்
நித்தம் வாழ்க்கை சிறக்கும்
தேடலில் நான்

வாழ்வியல் கவி
**சா.நாகூர் பிச்சை**
திண்டுக்கல்

# ஹஜ் யாத்திரை

ஃபாத்திமா
ஷார்ஜா



“சமீர்... நேத்து நான் சொன்ன விசயத்தைப்பத்தி என்ன முடிவு செஞ்சிருக்கே?” அம்மாவின் கேள்விக்கு “ஏம்மா கவலைப்பட்றீங்க? அவளுக்கும் எனக்கும் ஒரு குறையுமில்லையாம். நேத்துப் கன்சல்ட்பண்ணிய டாக்டர் ஆறாவது லேடி டாக்டர். நேரம் காலம் வரும்போது எல்லாம் நல்லதா அமையும்மா” என்று சமாதானம் சொன்ன மகனைக் கோபமாகப் பார்த்தாள் அம்மா சுபைதா.

“நேரம் காலம்னா எத்தனை வருசம்டா? எட்டு வருசமாச்சுடா உனக்குக் கல்யாணமாகி, உங்களுக்குப்பின்னால கல்யாணமானவங்களோட புள்ளைகளெல்லாம் பள்ளிக்கூடம் போக ஆரம்பிச்சிட்டாங்கப்பா, பேரன் பேத்திகளப் பார்க்க எவ்வளவு துடிப்பா இருக்கேனு தெரியுதா உனக்கு?”பேசிக் கொண்டே வந்த அம்மா அழவே ஆரம்பித்துவிட்டார்.



“அழாதீங்கம்மா, அல்லாஹ் நாடினால் உங்க விருப்பம் சீக்கிரமா நிறைவேறிடும்” என்ற மகனிடம், “அதுக்குத்தான் சொல்றேன் சமீரு, நீயும் சபீராவும் ஒருதடவை ஹஜ்ஜுக்குப் போய்ட்டுவாங்க. அடுத்தவருசமே நம்ம குறையை அல்லாஹ் நீக்கிடுவான்பா” என்று கெஞ்சாத குறையாகப் பேசிய அம்மாவின் முன்னால் ஒன்றுமே பேசமுடியவில்லை சமீருக்கு. “சரிம்மா, பேங்கிலிருந்து பணத்தையெடுத்து ஹஜ் போறதுக்குள்ள ஏற்பாடுகளை ஆரம்பிச்சிட்றேன். சபீ... நம்ம ரெண்டுபேருடைய பாஸ்போர்ட்டையும் எடுத்து வச்சுக்க. வேற என்னென்ன ஃபார்மாலிட்டீஸ்னு கேட்டு போன்பண்றேன்” என்று சொல்லிவிட்டு

பேங்கிற்குக் காரில் கிளம்பிய மகன் சென்ற வழியைப் பார்த்து “யா அல்லாஹ், நல்ல மகனைக் கொடுத்தே, அவனுக்கு நல்ல வாரிசுகளையும் கொடு” என்று இருகைகளையும் ஏந்தி பிரார்த்தித்தாள் அம்மா.

பேங்கிற்குப் போகும்வழியிலேயே இரண்டுபேர் ஹஜ் செல்வதற்கு எவ்வளவு பணம் தேவை, வேறு என்னென்ன முறைகள் எல்லாவற்றையும் கேட்டுத் தெரிந்து கொண்டான் சமீர். பேங்கிலிருந்து பணம் எடுத்துக் கொண்டு வெளியேவந்த சமீரின் கண்ணில் ஒருவயதான பெரியவர் தள்ளாடியபடியே, மிகுந்த கவலைகளுடன், வறுமையின் அடையாளங்களுடன், துக்கங்களை அடக்கியவராக படியேறி நடந்து வந்து கொண்டிருந்தார்.

அவரைக் கடந்து சென்ற அத்தனைபேரும் பாவமாகவேப் பார்த்துச் சென்றார்கள். சமீரும் அதுபோலவே கடக்க நினைக்கையில், ஏதோ ஒன்று அவன் மனதில் உறுத்தியது. அருகில் சென்று பார்த்தவன் அதிர்ந்தான். “காதர் மாமாதானே நீங்க? மாமா நான் சமீர், உங்க தங்கச்சி சுபைதாவுடைய மகன்” என்றவனிடம் நெற்றியைச் சுருக்கிப்பார்த்த பெரியவர், “சமீரு…” என்று அடக்கிவைத்த துக்கமும் கண்ணீரும் சேர்ந்து சமீரைக் கட்டிப்பிடித்து அழத் தொடங்கினார்.

“என்ன மாமா இதெல்லாம்? எப்படி இருந்த மனுசன் நீங்க. உங்கள நான் இப்படியா பார்க்கணும்? “ என்று கேட்ட சமீரிடம் “ எல்லாம் நான் செஞ்ச பாவங்கள் சமீரு இப்போ அனுபவிக்கிறேன். அஞ்சு வயசுல தகப்பன பறிகொடுத்திட்டு வந்து நின்ன உன்னையும் எந்தங்கச்சி சுபைதாவையும், பொண்டாட்டி பேச்ச கேட்டு ஆதரிக்காமல் அனுப்பிட்டேன். பணக் கொழுப்பும், திமிரும் என் கண்ண மறச்சிருச்சு. ரெண்டு மகன்களும் கல்யாணம்பண்ணின கொஞ்ச நாள்ல என்னமாதிரியே பொண்டாட்டி பேச்சைக் கேட்டுத் தனியா போய்ட்டானுக, அதோட சொத்து பிசினஸ் எல்லாம் பிரிச்சு எடுத்துட்டு எங்களத் தனியா விட்டுட்டானுங்கப்பா. இத நெனச்சு நெனச்சே உங்க மாமிக்கு அடிக்கடி நெஞ்சுவலி வந்துருச்சு, வைத்யம் பாக்கக்கூட காசு இல்ல. கவர்மென்டு ஆஸ்பத்திரிலதான் சேர்த்துருக்கேன். பெத்த புள்ளைகளட்ட பேச முடியல, போன கட்பண்றானுகள். இப்போ மாமிக்கு இருதயத்துல அடப்பு இருக்காம். ஆபரேசன் பண்றதுக்கு நெறய செலவாகுமாம். ஏதாவது லோன் கெடைக்குமானு கேக்கத்தான் பேங்குக்கு வந்தேன் சமீரு” விம்மல்களுடனும் அழுகைகளுடனும் சொல்லிமுடித்தார் காதர்பாய்.

“மொதல்ல என்கூட வாங்க மாமா”என்று அருகிலிருந்த ஹோட்டலுக்கு அழைத்துச் சென்றான். “நல்லா சாப்பிடுங்க” என்று வயிறார சாப்பிடவைத்தான். நல்ல துணிகள் எடுத்துக் கொடுத்தான். மாமிக்கு இந்த சேலைகளைக் கொடுத்துருங்க மாமா என்றான். கவர்ன்மென்ட் ஆஸ்பத்திரி வாசலில் இறங்கையில் சமீரும் சேர்ந்து இறங்கினான். பேங்கிலிருந்து எடுத்த பணத்தை மாமியின் ஆபரேஷன் செலவுக்குக் கொடுத்தான். டாக்டரிடம் சென்று தனது போன் நம்பரைக் கொடுத்து,”என்ன விவரமென்றாலும் இந்த நம்பருக்குக் கால்பண்ணுங்க டாக்டர், நானும் அடிக்கடிவந்து பார்த்துக்கறேன்”என்று புறப்படத் தயாரானான் சமீர்.

“சமீர், அம்மா எப்படி இருக்கா? நீ என்ன செய்றப்பா?” என்று மனசாட்சி உறுத்தியவராய் கேட்டார் காதர்பாய்.” நல்லாருக்காங்க மாமா, இட்லி, இடியப்பம் செஞ்சு வித்து என்னைப் படிக்க வச்சாங்க. நான் படிச்சு முடிச்சதும், அதையே



# சொல்லிக் கொண்டே இருங்கள்

எனக்கான உங்கள் வஞ்சிப்பாக்களை
எண்ணி நான் பறப்பதும் இல்லை
எனக்கான உங்கள்
வசைபாக்களை எண்ணி நான்
முடங்கிக் கிடக்கப் போவதுமில்லை ...

அதற்காய் உங்கள்
வஞ்சிப்பாக்களையும்
வசைபாக்களையும்
அடுத்தவர்கள் போல்
கேட்டும் கேட்காதவளாய்
கடந்து செல்ல மாட்டேன்
நான் கொஞ்சம் வித்தியாசமானவள்
கட்டாயம் எல்லாவற்றையும்
காது தாழ்த்திக் கேட்பேன்

வஞ்சிப்பாவாக இருந்தாலும் சரி
வசைபாக இருந்தாலும் சரி
பாடிக் கொண்டே இருங்கள்
இனியும் நிறுத்தி விடாதீர்கள்

அது தான் என் உற்சாகம்
அது தான் என் துணிவு
அது தான் என் முயற்சி

சொல்லப் போனால் அது தான்
என் அடுத்த கட்ட
நகர்வின் அஸ்திவாரம்.

- அரூஸா ஜெவாஹிர்

பெரிசாக்கி பேக்டரி தொடங்கி நிறையப் பேருக்கு வேலை கொடுத்திருக்கேன். வசதியில்லாத குடும்பத்திலிருந்து பெண் பார்த்து கல்யாணம்பண்ணி வச்சாங்க அம்மா. இப்போ எல்லாரும் ஒன்னா நல்லாருக்கோம் மாமா" என்ற பதிலைக் கேட்க கேட்க காதர்பாய் வெட்கி தலை குனிந்து கொண்டார்.

"சரிவரேன் மாமா, இனி பிள்ளைகளுக்குப் போன்பண்ண வேணாம், எனக்கு போன் பண்ணுங்க. அம்மாவிடம் வெவரத்த சொல்லி கூட்டிட்டு வரேன்" என்று சொல்லிவிட்டு காரில் கிளம்பிய சமீரையும், அவனை நல்ல பிள்ளையாக வளர்த்த தங்கையையும் நினைத்து பெருமைபட்டார்.

காரில் கிளம்பிய சிறிது நேரத்தில் அம்மாவிடமிருந்து போன் வந்தது சமீருக்கு. "யா அல்லாஹ், ஹஜ்க்குப் போக வைத்திருந்த பணத்தை மாமியின் ஆபரேசன் செலவுக்குக் கொடுத்திட்டேனே, மீதமுள்ள பணம் பிசினஸ்க்குத் தேவைப்படுமே, அம்மாவிடம் எப்படி சொல்லப் போறேன்?" என்று கலங்கியபடியே போனை எடுத்தான்.

"சமீர், நீ எங்கே இருக்கே? வீட்டிலேருந்து நீ போன கொஞ்ச நேரத்தில சபீரா அடுப்படியில மயங்கிவிழுந்துருச்சுப்பா. நம்ம மேரி டாக்டருக்கு போன்பண்ணினேன். அவங்க வந்து பார்த்துட்டு சபீரா கர்ப்பமா இருக்கறதா சொன்னாங்க சமீரு. எனக்கு சந்தோசம் தாங்கமுடியல. நீ உடனே வீட்டுக்கு வா. இறைவன் நாடினால் கொழந்தையோட நீங்க அடுத்த வருசம் ஹஜ்க்குப் போகலாம்." என்ற அம்மாவின் பேச்சைக் கேட்டதும், மனதார இறைவனுக்கு நன்றி செலுத்தினான் சமீர். நிறைய ஹஜ் யாத்திரைகள் செய்த உணர்வு சமீருக்கும், சபீராவுக்கும்.

# அண்ணன்

அண்ணா.!
உடன் பிறந்த உன்னத உறவே..!
உன் முகம் பார்த்தே அனுதினம்
என் விடியல் உதயமாகிறது..!

செல்லமாய் உனை
சீண்டி பார்ப்பதில் ஆனந்தம்..!
பெருமிதமாய் நீ
விட்டுக் கொடுப்பதில்
பேரானந்தம்..!!!

சண்டக்கோழி ஆனபோதும்
சமாதானம் செய்ய மறந்ததில்லை..!
முட்டி மோதிய போதும்
பந்த பாசம் குறையவில்லை .!

என்,
முதல் நண்பனே..
முதல் ஆசானே..
எனக்கு முந்தி பிறந்ததால்
அண்ணன் ஆனவனே..!

அன்னையின் அன்பையும்,
அப்பாவின் அக்கறையையும்,
ஒன்று சேர்த்து கொடுக்கும்
ஒப்பில்லா உடன்பிறப்பே...!

உன் நிழலாய் என்றும்
பின் தொடர்வேன்....!
தம்பியான போதும்
உற்ற நேரத்தில்
தோள் கொடுப்பேன்!

ஓர் வயிற்றில் உருவெடுத்தோம்.!
ஓராயிரம் கவிகள் பாடிடுவோம்.!
ஒற்றுமையாய் ஓங்கி
ஒலித்திடுவோம்.!
ஒய்யாரமாய் நித்தம் பெருமை
சேர்த்திடுவோம்..!!!

**சூர்யா. பா**
ஓசூர்



# வெண்பா

“அம்மா, அம்மா…” சத்தமாகக் கூப்பிட்டாள் வெண்பா.

“என்ன வெண்பா, ஏன் இவ்வளவு சத்தம்” அம்மா கேட்கவும் ‘‘அக்கா சாக்லேட் தர மாட்டேங்கிறாள், வாங்கித் தாங்க’’ சொன்னவாறே அக்காவின் கையிலிருந்த சாக்லேட்டைப் பிடுங்கப் போனாள்.

“இது என்னுடையது அம்மா, வெண்பா வுக்கு நீங்கள் தந்ததை அவள் சாப்பிட்டு விட்டாள்” தன் கையைப் பின்னால் வைத்தபடியே எழிலரசி சொல்லவும் “அப்படியா வெண்பா” என்று அம்மா கேட்டார்கள்.

“ஆமாம் அம்மா, ஆனால் இதுவும் எனக்கு வேண்டும்… இம்ம்” அழத் தொடங்கினாள் வெண்பா.

‘‘அடடா… அழுகாதே பாப்பா, இந்தா என்னுடையதில் நான் பாதி தருகிறேன்’’ சொல்லியபடியே பாதி சாக்லேட்டை தந்ததும் வாங்கிக் கொண்ட வெண்பா சிரித்தாள்.

“இவ்வளவு அடம் பிடிப்பது தப்பு வெண்பா, நீ நினைத்தது நடக்கணும், நீதான் முதலில் வரணும்னு நினைக்கிற. இதெல்லாம் சரியில்லை’’ என்றவாறே வேலையைக் கவனிக்கப் போனார்கள் அம்மா.

வெண்பா நல்ல புத்திசாலியான பெண். ஆனால் அனைத்திலும் தான்தான் முதலில் வரவேண்டும் என்று நினைப்பவள். எவ்வளவோ முறை அவளின் பெற்றோர்கள் எடுத்து சொன்னாலும் இந்தக் குணத்தை மாற்றிக் கொள்ளாமலேயே இருக்கின்றாள்.

அன்று வெண்பாவின் பள்ளியில் பேச்சுப் போட்டி நடைபெற இருந்தது. அதற்காக மிக நல்ல முறையில் பயிற்சி எடுத்து வந்திருந்தாள். போட்டி தொடங்கியதும் ஆசிரியர் ஒவ்வொருவராகப் பெயர் சொல்லி அழைத்தார். அனைவரும் வரிசை யாக வந்து பேசினார்கள்.

வெண்பாவை அழைத்ததும் மேடையில் ஏறிய வெண்பா கடகடவெனப் பேசினாள். அவள் பேசி முடித்ததும் பலமானக் கைத் தட்டல் கிடைத்தது. மிகவும் மகிழ்ச்சியுடன் தனது இடத்தில் வந்து அமர்ந்தாள்.

அடுத்து சிலர் பேசிய பிறகு ஆசிரியர் செந்தமிழியைப்பேசஅழைத்தார்.வேகமாகச் செல்லும் பொழுதே கால் தடுக்கி விழுந்து விட்டாள் செந்தமிழி. மாணவர்களில் சிலர் சிரித்தார்கள்.

‘‘பார்த்துப் போம்மா’’ தூக்கிவிட்ட ஆசிரியர், மாணவர்களைப் பார்த்து “அமைதியாக இருங்கள்’’ என்றார்.

மேடையேறிப் பேச ஆரம்பித்த செந்தமிழி அடுக்கு மொழியில் அழகுற, நிறுத்தி நிதானமாகப் பேசினாள். செந்தமிழி பேசிக் கொண்டிருக்கும் பொழுதே அவ்வப்போது கேட்ட கைத்தட்டல் சத்தம், அவள் பேசி முடித்ததும் விடாது கேட்டது.

இறுதியாக நடுவர் வெற்றியாளர்கள் பெயர்களை அறிவித்தார். முதல் பரிசு செந்தமிழிக்கும் இரண்டாம் பரிசு வெண்பா வுக்கும் கிடைத்தது.

மாலை வீட்டிற்குச் சென்ற வெண்பா ‘‘நானும் நல்லாதான் பேசினேன், எனக்கு ஏன் பரிசு கிடைக்கவில்லை?’’ கேட்டபடியே விடாது அழுதாள். அவங்க அம்மா, அப்பா, அக்கா யார் சொல்லியும் அழுகையை நிறுத்தவில்லை.

“போட்டி என்றால் யாராவது ஒருவர் தான் முதல் பரிசு வாங்க முடியும். நீ மட்டும்தான் வாங்கணும் என்று நினைப்பது தவறில்லையா?’’ அம்மா எடுத்துச் சொன்னார்கள்.

“நீ நன்றாகப் பேசினாய். ஆனால்

செந்தமிழ் மிகவும் நன்றாகப் பேசினாள். அதான் அவளுக்கு முதல் பரிசு. முயற்சி பண்ணிக் கொண்டே இரு. அடுத்த முறை நீயும் முதல் பரிசு வாங்கிடலாம். இதற்கேன் அழுகிறாய்?'' எழிலரசி ஆறுத லாகப் பேசினாள். ஆனாலும் வெண்பா அழுகையை நிறுத்தவில்லை.

சிறிது நேரம் கழித்து வெண்பாவின் அப்பா அவரின் கைபேசியுடன் அருகில் உட்கார்ந்தார். ''வெண்பா, பேச்சுப்போட்டி நடைபெறும் பொழுது நானும் பள்ளிக்கு வந்திருந்தேன் அல்லவா? அப்பொழுது நீங்கள் பேசியதைக் காணொளியாக எடுத்திருக்கிறேன். இதைப் பார்'' என்றார்.

வீட்டிலிருந்த அனைவரும் காணொளியைக் கண்டனர். வெண்பா பேசியதையும், செந்தமிழ் பேசியதையும் கவனமாகப் பார்த்த வெண்பா ''செந்தமிழிக்குப் பரிசு கொடுத்தது சரிதான் அப்பா, எனக்கு இப்போதுதான் புரிகிறது. இனி நானும் இதுபோல் பேச முயற்சி செய்கிறேன்'' என்றாள்.

''மகிழ்ச்சி கண்ணம்மா, நீ எப்பவும் சமர்த்துப் பொண்ணு. இதுபோல் ஒவ்வொரு விசயத்திலும் புரிந்து நடந்து கொண்டால் உன்னை சுற்றி இருப்பவர்கள் எல்லோரும் மகிழ்ச்சியாக இருப்பார்கள் அல்லவா... செய்வாயா?'' அம்மா கேட்டார்கள்.

''சரிங்க அம்மா, நீங்கள் சொன்னபடியே நடந்து கொள்கிறேன்'' வெண்பா சொன்னதும் தன்னிடமிருந்த சாக்லேட்டை எடுத்து வந்து தங்கையிடம் தந்தாள் எழிலரசி.



**சு. பிரவந்திகா**
சென்னை _ 600072





ஓவியம் 'குழ'

# பள்ளி சென்ற அம்மு

விடியல் காலையில் அம்மு பாப்பா
துள்ளி எழுந்தாளாம்
பள்ளி சென்று படிக்கும் ஆசையில்
மகிழ்ந்தே ஆடினாளாம்

புத்தாடை அணிந்து புத்தகம் எடுத்து
அம்மாவுடன் சென்றாளாம்
பள்ளி அருகில் சென்றதும் மெதுவே
தயங்கி நின்றாளாம்

வகுப்பில் விட்டு அம்மா கிளம்ப
கையைப் பிடித்தாளாம்
உங்களுடனே நானும் வருகிறேன் என்றே
தேம்பி அழுதாளாம்

ஒன்றாம் வகுப்பு ஆசிரியர் வேகமாக
அருகில் வந்தாராம்
குட்டிப் பெண்ணே கிட்டே வாவென
செல்லமாய் அழைத்தாராம்

கண்ணைத் துடைத்து கன்னத்தில் முத்தமிட
அம்மு சிரித்தாளாம்
எனக்கு இன்னொரு அம்மா நீங்களென
கட்டிக் கொண்டாளாம்

**அன்புச்செல்வி சுப்புராஜு**



எதுகை மோனை கவி

## பணமும் பகையும்

ஏழைகளாக வாழ்ந்தாலும்
ஏற்றத்துடன் வாழ்ந்தாலும்

பணத்தால் வருவது உறவு
பணத்தால் அழிவது உறவு

சண்டைகள் வரும் பணத்தால்
சங்கடங்கள் வரும் பணத்தால்

ஆடிப் பாடுவார் பணத்தால்
அடியும் படுவார் பணத்தால்

நட்பு மறையும் பணத்தால்
நஞ்சு வளரும் பணத்தால்

கஞ்சர்கள் ஆவார் பணத்தால்
வஞ்சர்கள் ஆவார் பணத்தால்

மண்ணில் உடல் வாழும் வரை
மனித மனங்களை மதிப்போம்
நாளும் அதை.

வாழ்க வளமுடன்

ஜ.மகாலட்சுமி
சிக்காரம்பாளையம்
கோவை

## ஆசிரியர் தின வாழ்த்து

அன்பு பொங்கும் எங்கள் உள்ளத்தில்
நல்ல பண்பு பொங்கச் செய்த ஆசிரியர்களே
நீங்கள் எங்கள் பள்ளி வாழ்வில் பெற்றோர்கள்
எங்களின் சிந்தை உயர செய்தோர்கள்
ஒவ்வொரு மாணவரும் உயர்ந்திடவே
உங்களின் முயற்சி பெரிதளவே
எங்களின் கண்களைப் போன்ற அறிஞர்களே
உங்களின் எண்ணம் பலித்திடவே
தொடர்ந்து முயற்சி செய்திடுவோம்
உயர்ந்த மதிப்பெண் பெற்றிடுவோம்
எங்களின் முயற்சி வெற்றி பெற
உங்களின் ஆசி பெற்றுச் செல்ல
இந்த ஆசிரியர் தினத்தன்று வந்துள்ளோம்
ஆசி வழங்க வேண்டுகிறோம்.

**ஜ.ஹேமமாலினி**
சென்னை.



## அம்மாவின் அன்பு

அம்மாவின் அன்பு பேரன்பு
அதில் இருப்பது பண்பு
இதன் சுவையோ கரும்பு
நாளும் சுவைக்கிடுவேன் இந்த அரும்பு.




**ம.அனுராகா,**
ஒன்பதாம் வகுப்பு,
சிக்காரம்பாளையம் ,
கோவை .



# கால இயந்திரம்

விக்ரம் தன் ஊரில் தனி சிறப்பான ஒரு சிறுவனாக இருப்பான். அவனுடைய சிந்தனை வித்தியாசமானதாக இருக்கும் அவனுடைய கருத்தை சக சிறுவர்களோடு அவன் பகிரும் போது அவனை மற்றவர்கள் ஏளனம் செய்வார்கள். ஆனால் அவன் அதை பொருட்படுத்தாமல் அவனுடைய கனவை நோக்கி பயணித்தான் ஒருநாள் கால இயந்திரத்தை (Time machine ) கண்டு பிடித்தான்.

இயந்திரத்தின் துணைக் கொண்டு இறந்த காலத்திலும், எதிர்காலத்திற்கும் செல்லலாம். தஞ்சை பெரிய கோவிலை பற்றி தெரிந்து கொள்ள வேண்டும் என்ற ஆர்வத்தில் கால இயந்தரத்தின் துணைக் கொண்டு ஆயிரம் வருடங்களுக்கு முன் சென்றான். அவனுக்கு வந்த சந்தேகங்களையும், கோயிலின் மர்மங்களையும் தெரிந்துக் கொள்ள சென்றான். மன்னன் ராஜராஜ சோழன் அரண்மனைக்கும் தஞ்சை பெரிய கோவிலுக்கும் சுர ங்கபாதை இருந்தது. ஆனால் இப்பொழுது அது அடைக்கப்பட்டுள்ளது. தஞ்சை பெரிய கோவில் மிகப் பெரிய மர்மமாக கருதப்படுவது கோபுரத்தில் உச்சியில் உள்ள ஒரே கல்லாலான 800 டன் எடையுள்ள கல்லை எவ்வாறு உச்சியில் அமைத்திருப்பார்கள் என்பது அது மட்டுமல்லாமல் கோவிலின் நிழல் தரையில் படாமலிருப்பது . இதைப்பற்றி அவன் அங்குள்ள ஒரு பெரியவரிடம் வினவினான் . பெரியவர் கூறினார் கோபுரத்திற்கு நிகராக நடை பாதை அமைத்து யானைகளின் உதவியுடன் கோபுர உச்சிக்கு கொண்டுபோய் சேர்த்தனர் என்றார்.

சிற்ப ஓவியங்களையும் கண்டு வியந்தான். அதைப்பற்றியும் கேட்டான். இலைகளின் இருந்து எடுக்கப்பட்ட வர்ணங்கள், இயற்கை வர்ணங்களின் துணைக் கொண்டு வண்ணம் தீட்டிருப்பதையும் அறிந்து வியந்தான். அவன் சந்தேகங்களை போக்கி கொண்டு கால இயந்திரத்தின் உதவியுடன் நிகழ்காலத்தற்கு வந்தான் .

தமிழர்கள் எவ்வளவு சிறப்பானவர்கள் கட்டிடக லையில் வல்லவர்கள், என்பதை தன் நண்பர்களுக்கு தெரிவித்தான். நண்பர்களும் அவனும் சேர்ந்து தமிழனின் பெருமைகளை உணர்ந்து உலகறிய செய்தனர் .

நாமும் தமிழையும், தமிழர்களையும் போற்றுவோம்.

**பி. பர்வதவர்மன்**
ஒசூர்



# வாய்மையே வெல்லும்

ஒரு காட்டில் ஒரு முயல் குட்டி இருந்தது. அது மிகவும் நேர்மையானது.

அந்த முயல் குட்டியின் நேர்மையால் அதன் நண்பர்கள் அதனை புறக்கணித்தனர். அதைச் சுற்றியுள்ள அனைத்து விலங்குகளும் அதனை புறக்கணித்தன. ஏனென்றால் அவர்கள் செய்யும் தவறை இது சுட்டிக் காட்டுவதால் இதனைப் புறக்கணித்தன.

இருந்தாலும் அது நேர்மையாகவே இருந்தது. அதே காட்டில் ஒரு சிங்கராஜா இருந்தது. அந்த சிங்கராஜா தன் நாட்டிற்கு நல்லது செய்யும் நேர்மையான அமைச்சரை தேர்ந்தெடுக்க விரும்பியது.

ஏற்கனவே இருக்கும் அமைச்சர்கள் வேலையை சரியாக செய்வதில்லை என்று தெரிந்தது. இருந்தும் அவர்கள் செய்யும் தவறுகளை ஆதாரத்துடன் கண்டுபிடிக்க முடியாததால், சிங்கராஜாவால் ஒன்றும் செய்ய முடியவில்லை. அவர்கள் செய்யும் தவறை மக்களுக்கு தெரியும் என்று மக்களிடம் விசாரித்து வரும்படி ஒற்றன் இடம் சிங்கராஜா கூறினார்.

அந்த விஷயம் அமைச்சர்களுக்கு தெரிந்து விட்டது. அதனால் மக்களை பயமுறுத்தி யாராவது எங்களைப் பற்றி விசாரித்தால். எங்களை பற்றி நல்லவிதமாக சொல்ல வேண்டும் என்று மிரட்டினர்.

அந்த ஒற்றன் மக்களிடம் விசாரித்த போது அனைவரும் நல்ல விதமாக கூறினர். அப்போது அவன் அந்தக் குட்டி முயலிடம் கேட்டான். அந்த முயல் அவர்கள் செய்த தவறை துல்லியமாக ஆதாரத்துடன் காட்டியது. அந்த ஆதாரத்தை ஒற்றன் சிங்கராஜாவிடம் ஒப்படைத்தான். இந்த ஆதாரத்துடன் சிங்கார ராஜா அமைச்சர் களை விலக்கி அவர்களை கைது செய்தார்.

இந்த ஆதாரத்தை கண்டுபிடித்த முயலை அழைத்து வரும்படி ஒற்றன் இடம் கூறினார். அந்த ஒற்றன் முயல் குட்டியை அழைத்துவந்தான். சிங்கராஜா முயல் குட்டியை பாராட்டி அதற்கு அமைச்சர் பொறுப்பை கொடுத்தார். இவ்வாறு நம் வாழ்வில் நேர்மையாகவும், உண்மையாகவும் இருந்தால் நம்மால் எதையும் வெல்ல முடியும்.

சரவணா அழகர்சாமி.
தஞ்சாவூர்.



# அம்மா

என்னை மீட்டும் இசையே..!
என்னை வர்ணிக்கும் ஓவியமே..!
என்னை செதுக்கும் சிற்பமே..!
என்னுள் மணக்கும் மலரே..!
என்றும் ஒளி வீசும் வெண்ணிலவே..!
உறவே உணர்வே உயிரே..!
நீயே – நான் என்று
உன்னில் சரணடைகின்றேன்..!!!

தருண் விஷ்வா T.S
ஓசூர்



## அப்பாவின் நினைவலைகள்

அப்பா... என்றால் அப்பாதான்..
வியர்வை சிந்தும் உழைப்பாளியாய்
நகைச்சுவை செய்யும் நாயகனாய்
அன்பின் ஆதாரமாய்
வசந்தத்தின் வாசலாய்
கம்பீரத்தில் கலக்கலாய்
வாழ்க்கையை கற்பிக்கும் ஆசானாய்
சோம்பலில்லா சிங்கமாய்
பாசமாய் எதைக் கேட்டாலும்
வாங்கி கொடுக்கும் அன்பின் வரவாய்
தமிழ்பற்றில் தன்னை உள்ளடக்கியவராய்
கவிதையின் காதலனாய்
எனக்கு அடிபட்ட போதெல்லாம்
தனக்கு அடிப்பட்டது போல் துடிப்பவராய்
மகிழ்ச்சியே மத்தளமிடும்
என் அப்பாவின் அன்பால்

**ம. லவன்**
சென்னை





## தோழிமார் கதை

(கிராமத்து பாடல் வடிவில்)

தோழியின் நட்புங்க
இது அன்பின் அழைப்புங்க
குயிலி வேலுநாச்சியார் போல
நானும் என் தோழியும்
நான் இருக்கிறேன்னு சொல்லுவா
பல சமயங்களில் ஆறுதலும் தருவா
தோழியாக தோளும் கொடுப்பா
அன்னையாகவும் அரவணைப்பா
கடைவீதிக்கு ஒன்னா போவோம்
ஆரஞ்சு மிட்டாய் வாங்கி திண்ணுவோம்
அந்த மிட்டாய் யாருக்கு மொத (முதல்)
 கரையுதுன்னு பார்ப்போம்
தெருவே எங்கள பார்க்க
சின்ன சின்ன சண்ட போடுவோம்
ஆனா.. யாருக்காக யாரையும்
 விட்டுக் கொடுக்க மாட்டோ
இதுதா எங்க நட்பு

**ம.குசன்**
சென்னை



திசைகளெங்கும்
பனிமலை
எனக்குள் ஏனடி
எரிமலை ..
எனை கடந்து போனாய்
ஒருமுறை ..
கரைகிறேன் பலமுறை ..
இலையென நானும்
காற்றென நீயும்
ஒருநொடியில் எனை
சாய்த்து விட்டாய் ...

ச. இராஜ்குமார்

**மழையே மழையே வா வா...**
**பள்ளிக்கு விடுப்பு வாங்கி தாதா...**
**மேற்கு மலையைத் தாண்டி வா...**
**மேகமலையை நனைக்க வா...**
**காத்திருக்கும் பயிர்களுக்கு**
**பாத பூஜை செய்ய வா...**
**வேர்த்திருக்கும் தளிர்களின்**
**வேதனை தீர்க்க வாவா.....**

**ஷர்ஜிலா பர்வீன் யாகூப்**
கம்பம்

# வனிதையரை வதைக்காதீர்

அழகிய சிட்டுகள் அகிலம் பறந்திடப்
பழகும் நேயத்தால் பாத்தி கட்டிச்
சழக்கேதும் இல்லாச் சமத்துவம் கொண்டு
வழங்கும் மதிப்பால் வையகம் தழைக்குமே!

பிஞ்சுக் குழந்தையைப் பிய்த்தெறியும் வீணர்காள்
கொஞ்சமேனும் இரக்கம் கொள்வீரோ இதயத்தே
அஞ்சி அஞ்சி அழுகின்ற அவலத்தை
வஞ்சமின்றிக் கொன்று வான்புகழ் சேர்ப்பீரே!

எண்ணத்தில் காமத்தை எந்திரமாய் ஏற்றி
வண்ணத்துப் பூச்சிகளின் வாழ்வை நசுக்கலாமோ?
பெண்களுக்குச் சமஉரிமை பெயரளவில் தராமல்
பெண்களின் பேச்சினைப் பெரிதாக மதிப்பீரே!

நம்பிக்கை காட்டி நயமாக ஏமாற்றி
அம்பெய்து சிறுமியர் அகத்தைஎரித்தே
வெம்பிடச் செய்து வீழ்த்த நினைக்காமல்
தும்பைப்பூ உளத்தை தூயதாய்க் காப்பீரே!

வன்மம் எல்லாம் வற்றிடச் செய்து
இன்பம் அனைத்தும் இதயம் சுவைத்திடக்
கன்னல் சாறெனக் கனிவை வழங்கிடின்
இன்னல் பறந்தோடும் இனியநிலை காண்பீரே!

உணர்வுக்குள் பெண்மையை உண்மையாய்ப் போற்றின்
இணங்கிட அவளை எரிப்பீரோ வன்புணர்வில்
வணங்கும் தெய்வமாம் வனிதையரை வதைக்காதீர்
மணக்கும் மனிதத்தால் மாண்புடன் ஒளிர்வீரே!

**குளோரிசக்தி**
கரூர்.



# மனைவியைப் போற்றுவோம்

பாவலர் கருமலைத்தமிழாழன்

தாய்வீட்டுப் படியிறங்கிக் கணவன் வீட்டுத்
 தாழ்ப்பாளைத் திறந்துள்ளே வந்த பின்பு
வாய்க்குள்ளே தன்விருப்பம் விழுங்கிக் கொண்டு
 வந்தவீட்டின் புன்னகையாய்த் திகழு கின்றாள் !
சேய்பருவ நினைவுகளைத் தந்தை தாயை
 சேர்ந்திருந்த தம்பிதங்கை சுற்றம் தன்னைப்
பாய்சுருட்டி மூலையிலே வைத்தாற் போலப்
 பக்குவமாய் மனத்திற்குள் ஒதுக்கி வைத்தாள் !

ஒருமார்பில் காமத்தை மற்றோர் மார்பில்
 ஒப்பற்ற தாய்மையெனும் பாலை ஊட்டி
இருமார்பின் இடையினிலே அவளுக் காக
 இருக்கின்ற இதயத்தை மறைத்து வைத்துத்
திருவான கணவனுக்கோ உடலில் பாதி
 திகழ்கின்ற குழந்தைக்கு மீதி என்றே
உருவத்தை இருவருக்காய்த் தேய்த்துக் கொண்டு
 உன்னதமாய்க் காக்கின்றாள் குடும்பந் தன்னை !

அத்தைக்கு எதுபிடிக்கும் மாம னார்க்கும்
 அன்பான கணவனுக்கும் குழந்தை கட்கும்
அத்தைமகள் நாத்திக்கும் கொழுந்த னார்க்கும்
 அவரவரின் விருப்பத்தை நிறைவு செய்து
குத்துவிளக் காய்வீட்டை ஒளிர வைத்துக்
 குலம்தன்னைக் காக்கின்றாள் பெருமை சேர்த்து
வித்தாக செடியாக மரமு மாக
 விளங்குகின்ற மனைவிதனைப் போற்று வோமே !

# மணவாழ்த்து

தோரணம் கட்டிக் கட்டி
தொடுமலர் அசைந்த சைந்து
ஆரணங் கையில் வாழ்க்கை
அழகுடன் வாழ வாழ
பேரணி யாக மோகம்
பெருங்கடல் போல வந்து
நீரணி நதியைப் போல
நித்தமும் வாழ்க வாழ்க

இருமனம் இணைய நாளும்
இடையிலா இன்பத் தோடும்
தரும்சுகம் நாளும் நாளும்
தனித்துவ மாக வாழ்க
வருநிலா தேன்க லக்க
வளர்மனம் பூக்கள் பூக்க
உருநிலா இன்னும் ஒன்றாய்
உயர்வுடன் வந்து வாழ்க

நல்மனம் வாழ்க வாழ்க
நகைப்புடன் வாழ்க
இல்லறம் வாழ்க வாழ்க
இனிப்பு டன் வாழ்க வாழ்க
அல்சுகம் வாழ்க வாழ்க
அணைப்புடன் வாழ்க வாழ்க
நல்லறத் தோடு வாழ்க
நாளெலாம் வாழ்க வாழ்க

மணமகன் :
தவசூரி பெர்ணான்டோ
மணமகள் :
டிறோனி

இடம் :
நோய்சி லே செக், பிரான்ஸ்
மணநாள் :
20.08.2022

**தமிழ்நெஞ்சம் அமின்**
+ ஆசிரியர் குழுவினர்



பல்சுவை

# தமிழ்நெஞ்சம்

www.tamilnenjam.com செப்டெம்பர் 2022



காதலின்றி உலகினிலே உயிர்க ளேது?
காதலின்றி உலகந்தான் சுழல்வ தேது?
காதலொன்றே மாநிலத்தின் மூச்சுக் காற்று
காதலொன்றே பூவுலகின் இன்ப ஊற்று
காதலாலே காசினியில் மகிழ்ச்சி பொங்கும்
காதலாலே உயிர்களெலாம் உலகில் தங்கும்
காதலதைச் செய்வதொன்றும் தவறே இல்லை
காதலென்றே இருந்துவிட்டால் அதுவே தொல்லை